# தமிழரசு

16-7-1988 ரூ. 1



பெருந்தலைவர் சிறப்பிதழ் : ஊரக வளர்ச்சிப் பணிகள்

தொகுப்பு - 1




சேலத்தில் ரூ. 2.5 கோடி செலவில் அமைக்கப்படவுள்ள புதிய விமான தளத்திற்கு மாண்புமிகு மத்திய விமான போக்குவரத்து மற்றும் சுற்றுலாத்துறை இணை அமைச்சர் திரு சிவராஜ் பாட்டில் அவர்கள் 1-7-88 அன்று அடிக்கல் நாட்டினார். நிகழ்ச்சிக்கு ஆளுநரின் ஆலோசகர் டாக்டர் எஸ். எஸ். சித்து தலைமை ஏற்றார்.


பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்ட
பெருந்திட்ட வளாகக் கட்டிடங்கள் திறப்பு விழா
சிவகங்கை
25-6-1988
தலைமை: மாண்புமிகு மத்திய உள்துறை இணை அமைச்சர்
திரு ப. சிதம்பரம் அவர்கள்
திறப்பாளர்: மேதகு தமிழக ஆளுநர்
டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் அவர்கள்

ஏ.வி. சத்யகாமன், என். அரிபாஸ்கர், இ.ஆ.ப.,
தலைமைப் பொறியாளர் (கட்டிடம்) பொதுப்பணித்துறை
சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர்

ஆர். கோபாலன், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சியர்



பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்ட 'பெருந்திட்டவளாகக் கட்டடங்களை' மாண்புமிகு மத்திய உள்துறை இணை அமைச்சர் திரு ப. சிதம்பரம் அவர்கள் தலைமையில் மேதகு ஆளுநர் டாக்டர் பி. சி. அலெக்சாண்டர் அவர்கள் 25-6-88 அன்று திறந்து வைத்தார்.

## இந்த இதழில்

## இரண்டு சிறப்புகள்

பெருந்தலைவர் காமராஜரின் 86-வது பிறந்த நாளையொட்டி

* சிறப்புக் கட்டுரைகள்
* அரிய புகைப்படங்கள்
* புகழ் மாலைகள்
* கவிதைகள்
* பொன்மொழிகள்

இடம் பெற்றுள்ளன.

வறுமை ஒழிப்பையும், வேலை வாய்ப்புப் பெருக்கத்தையும் நோக்கமாகக் கொண்ட ஊரக வளர்ச்சித் திட்டச் சாதனைகளின் முதல் தொகுப்பு இந்த இதழில் இடம் பெற்றுள்ளது.

ஆகஸ்ட் இதழில் மேலும் விரிவான சாதனைத் தொகுப்பு இடம் பெறும்.


# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2019

விபவ - ஆடி 1

மலர்: 19 16-7-1988 இதழ்: 2




பெற்ற தாய் சிவகாமி அம்மையாருடன் பெருந்தலைவர் காமராஜர்

பெருந்தலைவர் காமராஜர்

சிறப்புப் பகுதி

பக்கம் 19-34

# இந்த வேலைநிறுத்தம் நியாயம் தானா?

# சிந்தித்துப் பாருங்கள்!

**1. அரசு தன் அலுவலர்களுக்கு இப்பொழுது அறிவித்துள்ள சலுகைகள் யாவை?**

அரசு தன் அலுவலர்களுடன் 5 முறை பேச்சுவார்த்தைகள் நடத்தி, அவற்றின் அடிப்படையில் பின்வரும் சலுகைகளை அறிவித்துள்ளது.

- 1.6.88 முதல் மாதந்தோறும் இடைக்கால நிவாரணம் ரூபாய் 70/- அளிக்கப்பட்டுள்ளது. இதற்கு மட்டும் ஆண்டுதோறும் ரூபாய் 80 கோடி செலவாகும்.
- நான்காண்டுகாலத்திற்குள்ளாகவே இன்னொரு ஊதியக் குழுவை அமைக்க அரசு ஒப்புக் கொண்டுள்ளது. (இம்மாதிரி ஊதியக்குழுக்கள் இதற்கு முன்னால் 7 முதல் 10 ஆண்டு இடைவெளியில்தான் அமைக்கப்பட்டுள்ளன)
- அரசு அலுவலர்களின் இரண்டு முக்கிய கோரிக்கைகளான மத்திய அரசு ஊதிய விகிதங்கள், ஒரு மாத போனஸ் ஆகிய இரண்டுமே ஊதியக்குழுவின் பரிசீலனைக்கு விடப்பட்டுள்ளன.

**2. அரசு அலுவலர்களின் கூடுதல் கோரிக்கைகளை ஏற்பதால் ஏற்படக்கூடிய விளைவுகள் யாவை?**

- ஆண்டுக்கு ரூபாய் 350 கோடி கூடுதல் செலவு ஏற்படும். அரசு அலுவலர்களின் ஊதியம், ஓய்வூதியம் முதலியவைகளுக்காக இப்பொழுது கூட மாநிலச் செலவில் 46% செலவிடப்படுகிறது. ஏற்கெனவே மாநிலத்தில் நிதிநிலை நெருக்கடியாக இருப்பதால், இக்கோரிக்கைகளை ஏற்பதன்மூலம் பொதுமக்களுக்கு வரிச்சுமை அதிகமாகும்.

  அல்லது

  ஏழை எளியவர்களின் திட்டங்களுக்கும் மற்ற வளர்ச்சித் திட்டங்களுக்கும் நிதி ஒதுக்கீடு குறைந்துபோகும்.

**3. பொது மக்களின் அன்றாட வாழ்க்கையை இந்த வேலைநிறுத்தம் எவ்வாறு பாதிக்கிறது?**

இந்த வேலைநிறுத்தம் தொடருமானால், அது பொதுமக்களுக்கு எவ்வளவு இன்னல்களை உண்டாக்கும் என்பதற்கு, பின்வரும் சில சான்றுகளே போதுமானவை.

- பள்ளிகள், கல்லூரிகளில் மாணவர்களின் அனுமதிக்குத் தேவைப்படுகின்ற சான்றிதழ்கள் வழங்கப்படுவதில் தாமதம் ஏற்படும்.
- விவசாயிகளுக்கு வித்துகளும், உரங்களும் ஒழுங்குமுறை விற்பனை வசதிகளும் உரிய நேரத்தில் கிடைக்காமல் பாதிப்பு ஏற்படும்.
- கிராமப்புற ஏழை எளியவர்களின் வாழ்க்கை உயர்வுக்கான வேலைத்திட்டங்களைச் செயலாக்குவது தாமதப்படும்.
- சமீபத்தில் சீரடைந்திருக்கும் பொது விநியோக முறை சீர்குலைந்து அதனால் அத்தியாவசியப் பண்டங்கள் உரிய நேரத்தில் கிடைப்பது பாதிக்கப்படும்.
- ஊராட்சி நிறுவனங்கள் கட்டட அனுமதிகள், மற்ற உரிமங்கள் வழங்குவதில் தாமதம் ஏற்படும்.
- இருபது அம்சத்திட்டத்தின் கீழ் ஏழை எளிய மக்களுக்குப் பட்டாக்கள் வழங்குவது தாமதப்படும்.
- ஆவணங்களைப் பதிவு செய்வது தாமதமாகும்.
- முத்திரைத்தாள் கிடைக்காமல் பொதுமக்கள் அவதிப்பட நேரிடும்.
- நீதிமன்றங்களின் பணி சுணக்கம் அடையும்.

**வேலைநிறுத்தம் மேலும் பரவினால், பின்வரும் விளைவுகள் ஏற்படலாம்.**

- குடிநீர் வழங்குவதில் குந்தகம் ஏற்படும்.
- தெருக்களில் துப்புரவுப்பணி சீர்குலையும்.
- தெருவிளக்குகள் எரிவது பாதிக்கப்படும்.
- நோயாளிகளுக்கு மருத்துவமனைகளில் உடனடி சிகிச்சை கிடைக்காமல் போகலாம்.
- தொழில்கள், முக்கியமாகச் சிறு தொழில்களுக்கான அனுமதி பெறுவதும், உரிமங்கள் பெறுவதும் உரிய நேரத்தில் நடைபெறாமல் போகும்.

**3. அ) ஒத்துழைப்புக்குப் பாராட்டு :**

- வேலைநிறுத்தம் செய்யும் அலுவலர்களிடமிருந்து அச்சுறுத்தல்களும், ஆத்திரமூட்டுதல்களும், இருந்தபோதிலும், தொடர்ந்து பணியாற்றிவரும் அலுவலர்களின் விசுவாசத்திற்காகவும் ஒத்துழைப்புக்காகவும் அரசு அவர்களைப் பாராட்டுகிறது.

**4. அரசின் கவலை :**

பெருவாரியான அங்கத்தினர்களைக் கொண்ட அரசு அலுவலர் சங்கங்களும், ஆசிரியர் சங்கங்களும், இந்தச் சலுகைகளை ஏற்றுக்கொண்டு, வேலை நிறுத்தத்தில் ஈடுபடப்போவதில்லை என்ற தங்கள் எண்ணங்களைப் பிரதிபலித்ததோடு பத்திரிகைகளிலும் அறிக்கைகள் வெளியிட்டன. எனினும், பின்னர், மற்ற சங்கங்களின் வற்புறுத்தலினால், அந்தச் சங்கங்களின் அங்கத்தினர்களில் சிலர் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். பொது மக்களுக்கு அடிப்படைச் சேவைகள் தொடர்ந்து கிடைத்துவர, அரசு எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது. எனினும், பொதுமக்களுக்கு சில இடையூறுகள் ஏற்படுவது தவிர்க்க முடியாது போகலாம். அதற்காக அரசு பெரிதும் வருந்துகிறது.

**5. வேலைநிறுத்தம் செய்யும் அலுவலர்களுக்கு வேண்டுகோள் :**

- வளர்ச்சித் திட்டப்பணிகளும், நலவாழ்வுத் திட்டப் பணிகளும் முனைப்போடு நடைபெற்றுவரும் இத்தருணத்தில், அவை பெரிதும் பாதிக்கப்படும் வகையில் நிலைமைகளை உருவாக்குவது நியாயம்தானா என்பதைத் தயவு செய்து சிந்தித்துப் பாருங்கள்.
- இப்போதிருக்கும் மிகவும் கடினமான நிதி நெருக்கடி நிலையில், எவ்வளவு அதிகம் முடியுமோ, அந்த அளவுக்கு உங்களுக்கு நன்மை செய்ய, அரசு முன்வந்திருப்பதைச் சிந்தித்துப் பாருங்கள். ஊதியக்குழுவின் பரிந்துரைகள் கிடைக்கும்வரை, நீங்கள் ஏன் இன்னும் ஒரு சில மாதங்கள் பொறுத்திருக்கக்கூடாது?
- தயவு செய்து இந்த வேலை நிறுத்தத்தைக் கைவிட்டு, உடனே பணிக்குத் திரும்புங்கள். வேலை நிறுத்தம் காரணமாக உங்கள் சம்பளம் குறைக்கப்படுவதையும், உங்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படுவதையும் பொதுமக்களுக்குத் தேவையற்ற சிரமங்கள் ஏற்படுவதையும் தவிர்க்குமாறு வேண்டுகிறேன்.

**தலைமைச் செயலர்,**
**தமிழ்நாடு அரசு.**



# ஊரக வளர்ச்சியில் சமூகக் காடுகள் வளர்ப்பு

**திருமதி வி. சந்திரலேகா,**
**இ.ஆ.ப.,**

தமிழ்நாட்டில் சுமார் 33 இலட்சம் எக்டேர் நிலம், பயனற்றுள்ளதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. இந்நிலங்களிலிருந்த காடுகள், இதர தாவரங்கள், நாட்டில் பெருகிவரும் மக்கட் தொகையின் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டுத் தொடர்ந்து அழிக்கப்பட்டதால், காற்று மற்றும் நீர் அரிப்புக்குள்ளாகி, வளம் குன்றி, சுற்றுப்புறச் சூழலுடன் நிலத்தடி நீர்மட்டமும் பாதிக்கப்பட்டுள்ளது.

சமூகக் காடுகள் திட்டம் மூலம் வளர்க்கப்படும் மரங்கள், வறட்சியைத் தாங்கி, நீண்ட காலம் வளர்ந்து, கிராம மக்களின் எரிபொருள் தேவையைப் பூர்த்தி செய்வதோடு, கால்நடைகளின் தீவனத் தேவையையும், பூர்த்தி செய்ய வழி செய்கிறது. மண்ணின் வளமும் பெருகி, மண்ணில் நீரை ஈர்த்து வைத்துக்கொள்ளும் திறனும் கூடுகிறது. மேலும், சுற்றுப்புறச் சூழ்நிலையும் பாதுகாக்கப்பட்டு, வருங்காலத்தில், பருவமழையும் உரிய காலத்தில் பெற உத்தரவாதம் அளிக்கிறது.

தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் மற்றும் ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதி அளிக்கும் திட்டங்களின் கீழ் ஊரக வளர்ச்சிப் பணிகளில் ஒன்றாக, சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட தொகையில் 25 சதவீதமும், ஊரக நிலமற்றோருக்கு வேலைவாய்ப்பு உறுதி அளிக்கும் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட தொகையில் 25 சதவீதமும் சமூகக் காடுகள் வளர்க்கும் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

1988-89-ஆம் ஆண்டில் இத்திட்டத்தைச் செயல்படுத்தக் கீழ்க் கண்டவாறு நிதி அளிக்கப்பட்டுள்ளது.

| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்திற்கு | 1209.50 |
| ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதி அளிக்கும் திட்டத்திற்கு | 545.50 |
| ஆக மொத்தம் | 1755.00 |

**சமூகக்காடுகள் வளர்ப்பு**

இத்திட்டத்தின் கீழ், சமுதாயப் புறம்போக்கு நிலங்களிலும், ஏரிகளின் நீர் பிடிப்புப் பகுதிகளுக்கு மேலுள்ள பகுதிகளிலும், ஆதி திராவிட மக்கட்குச் சொந்தமான மானாவாரி நிலங்களிலும், கொத்தடிமையிலிருந்து விடுபட்டவர்களுக்கு அளிக்கப்பட்ட நிலங்களிலும், வறுமைக் கோட்டிற்குக் கீழே யுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயிகளின் நிலங்களிலும், மரங்கள் வளர்ப்புப் பணி மேற்கொள்ளப் படும். இது தவிர சாலை ஓரங்களிலும், கால்வாய் மற்றும் வாய்க்கால் கரைகளிலும், சாரிசாரியாக மரங்கள் வளர்க்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

மறுவாழ்வு இல்லங்கள், அனாதை விடுதிகள், முதியோர் இல்லங்கள், காசநோய்த் தடுப்பு மருத்துவ நிலையங்கள் ஆகியவற்றிற்குச் சொந்தமான நிலங்களில் மரங்களை வளர்க்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்நிலையங்களுக்குப் போதுமான நிதி வசதியில்லாததால், நடப்பட்ட மரக்கன்றுகளைப் பராமரிப்பதற்காகப் பராமரிப்புத் தொகையும் இத்திட்டத்தின் கீழ் இவர்களுக்கு வழங்கப்படும்.

தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் ஊரக நிலமற்றோர்வேலைவாய்ப்பு உறுதி அளிக்கும் திட்டங்களில் ஆதிதிராவிட வகுப்பினருக்காகக் கட்டப்பட்ட வீடுகளைச் சுற்றி மரக்கன்றுகளை நட்டு, பராமரிக்கும் திட்டமும் செயல்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு

வீட்டைச் சுற்றி உள்ள நிலத்தில் 60 மரக்கன்றுகள் வரை நடப்படுகின்றன. இவ்வாறு நடப்பட்ட கன்றுகளைப் பராமரிக்க, ஒவ்வொரு மாதத்திற்கும், 4 மனித நாட்கள் வீதம், ஓராண்டுக் காலத்திற்குப் பராமரிப்புச் செலவு வழங்கப்படுகிறது.

பொதுவாகவே, நம் கிராமங்களிலுள்ள ஏழைப் பெண்மணிகள், தங்கள் எரிபொருள் தேவைக்கான விறகு மற்றும் கால்நடைத் தீவனத்தைப் பணம் கொடுத்து வாங்குவதில்லை. ஆனால் இவற்றைச் சேகரிக்க, இவர்கள், தினமும் பல மணி நேரத்தை, அதாவது 5-6 மணி நேரம் வரை செலவிடுகின்றனர்.

மேலும், உலக வருமானத்தில் பத்தில் ஒரு பகுதியையே பெண்கள் பெறுகின்றனர் என்றும், உலகத்திலுள்ள சொத்தில் ஒரு சதவீதத்திற்கும் குறைவாகவே சொந்தமாகப் பெற்றுள்ளனர் என்றும், பல ஆய்வுகள் மூலம் தெரிய வந்துள்ளது.

**2சி பட்டா திட்டம்**

கிராமப்புறங்களில், விறகு மற்றும் தீவனங்களைச் சேகரிக்கும் பணி ஏழைப் பெண்மணிகளுக்கு ஒரு பெரும் பிரச்சினையாக உள்ளது. பொதுவாக இவர்களுக்குச் சொந்தமாக நிலமோ, இதர சொத்தோ ஏதும் இல்லாததால், புறம்போக்கு நிலங்களில் நடப்பட்ட மரங்களையும் அல்லது அவற்றின் மூலம் கிடைக்கின்ற பலன்களையும் இந்த ஏழைப் பெண்மணிகளுக்குச் சொந்தமாக்கி அவர்களையே இம்மரங்களுக்கு உரிமையாளர்களாக்கினால் இவர்கள் இம்மரங்களைச் சிறந்த முறையில் பராமரிப்பார்கள் என்பது உறுதி.

எனவே 2சி பட்டா திட்டம் மூலம், நடப்பட்ட மரக்கன்றுகள், ஒரு ஏக்கர் பரப்பு அல்லது ஒருகிலோ மீட்டர் தூரத்திற்குள்ளவை தேர்ந்தெடுக்கப்பட்ட நிலமற்ற ஏழைப் பெண்மணிகளுக்கு 1987-88-ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம் இம்மரங்கள் இப்பெண்களுக்குச் சொந்தமாகின்றன. நடப்பட்ட மரங்களிலிருந்து விறகு வகையாக இருந்தால், தங்கள் தேவைக்கான விறகைப் பெறவும், தீவன வகையாக இருந்தால் தேவையான தீவனத்தைப் பெறவும், மேலும் நன்கு வளர்ந்தவுடன் நட்ட ஏறக்குறைய 7 ஆண்டுகள் கழித்து வெட்டி, தங்கள் தேவைக்கு வைத்துக் கொண்டு மீதியுள்ளதை, விற்பனை செய்து, நல்ல வருமானம் பெறவும் வாய்ப்பு உள்ளது. வளர்ந்த மரங்கள் வெட்டுவதற்கு முன், அதாவது 2 ஆண்டுகளுக்கு முன், மரம் ஒன்றுக்கு இரண்டு கன்றுகள் வீதம் நடவேண்டும்.



**தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலம் வளமாக வளர்க்கப்பட்டுள்ள சமூக நலக் காடுகள்.**

மேலும் இத்திட்டத்தில் இம் மரக்கன்றுகளைப் பராமரிக்கும் பணியையும், மரப்பட்டாதாரர்களுக்கு அளிப்பதன் மூலம் சமூகக் காடுகள் நன்கு வளரும் வாய்ப்பு உள்ளது. மேற்படி மரக்கன்றுகளை 80 சதவீதத்திற்குக் குறையாமல் பராமரிப்பதற்காக, ஊக்கத்தொகை மாதத்திற்கு, சராசரி 6 நாள் ஊதியமாக, கன்றுகள் நட்டதிலிருந்து 3 வருடங்களுக்கு அளிக்கப்படுகிறது.

**விழிப்புணர்வு முகாம்கள்**

விறகு மற்றும் கால்நடைத் தீவனம் சேகரிக்கும் பொறுப்பில் கிராமப்புறப் பெண்களே பெரிதும் ஈடுபட்டுள்ளதால், சமூகக் காடுகள் திட்டம் இவர்களுடைய மேற்பார்வையில் நன்கு செயல்படும்.



குறிப்பாக, சமூகத்தில் மகளிர் பொறுப்பேற்றிருக்கும் குடும்பங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது. இதனால் பயனடைவோரில் 50 சதவிகிதத்தினர் ஆதிதிராவிட வகுப்பினைச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும்.

இந்தியாவிலேயே, முதன் முறையாகத் தமிழ்நாட்டில்தான், சமூகக் காடுகள் வளர்ப்பு, 'மரப்பட்டா திட்டம்' மூலம் செயல்படுத்தப்படுகிறது. கடந்த 1987-88-ஆம் ஆண்டில், இம்மாநிலத்தில், 42,092 கிராமப்புற ஏழைப் பெண்களுக்கு, மரப்பட்டா வழங்கப்பட்டுள்ளது. இது, ஒரு மாபெரும் சாதனையாகும்.

இவ்வாறு வழங்கப்பட்ட மரப் பட்டாக்களைக் கிராமப்புற ஏழைப் பெண்கள் வெளி நபர்களிடம் ஒப்படைத்து வைப்பதால், மரங்கள் மூலம் பயன் அடையும் தருவாயில், அவற்றை இப்பெண்கள் இழக்கும் நிலை ஏற்படுகிறது. இதன் முக்கியத்துவத்தை உணர்த்துவதற்கும், 'மரங்கள் அவர்களுக்கே சொந்தமானவை, அவற்றைச் சரியாகப் பேணி வளர்த்தால், நல்ல வருமானம் கிடைக்கும்' என்பதை விளக்குவதற்கும், மகளிர் மன்றங்கள் மற்றும் சமூக நலத்துறை அலுவலர்கள் துணை கொண்டு 'விழிப்பு உணர்வு முகாம்கள்' கிராம அளவில் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த முகாம்கள் சமூகக்காடுகள் வளர்ப்புத் திட்டத்தில் புதிய சாதனைகளை உருவாக்கப் பயன்படும் என்பது உறுதி.



# ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் — ஒரு வரப்பிரசாதம்

**எல். என். விஜயராகவன், இ.ஆ.ப.,**
அரசு கூடுதல் செயலர்,
ஊரக வளர்ச்சித்துறை.

இந்தியாவின் வறுமை ஒழிப்புத் திட்டங்களில் முதன்மையான திட்டம் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்திட்டமாகும். இத்திட்டம் 1978-79-இல் 2,300 வட்டாரங்களில் ஆரம்பிக்கப்பட்டு, 1980 ஆம் ஆண்டில் அண்ணல் காந்தியடிகளின் பிறந்த நாளான அக்டோபர்த் திங்கள் 2-ஆம் நாளன்று முதல், நாடு முழுவதிலுமுள்ள 5,011 வட்டாரங்களில் 5,64,000 கிராமங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஊரகப் பகுதிகளில் வறுமையை ஒழித்தலும், வறிய குடும்பங்களுக்கு வங்கிக் கடனும், மான்யமும் வழங்கி வருமானத்தைப் பெருக்க புதிய உத்திகளை ஏற்படுத்தித் தருவதும் இத்திட்டத்தின் நோக்கங்களாகும்.

குடும்பத்தின் நிதி நிலையை உயர்த்த வேளாண்மை மற்றும் அதைச் சார்ந்த தொழில்களான பால்மாடு வளர்த்தல், கால்நடைப் பராமரிப்பு, கிராம மற்றும்குடிசைத் தொழில்கள், சிறு வணிகம் முதலியவற்றில் ஏதாவது ஒரு தொழிலை இத்திட்டத்தின் மூலம் பயன்பெறும் பொருட்டு தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.

6-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒரு குடும்பத்தின் ஆண்டு வருமானம் ரூ. 3,500-க்கு மேல் இருந்தால் அக்குடும்பம் வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ளதாகக் கணக்கிடப்பட்டது. 7-ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆண்டு வருமானம் ரூ. 6,400 என்ற அளவுக்கு இது உயர்த்தப்பட்டுள்ளது.

வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள குடும்பங்களின் எண்ணிக்கை மிகவும் பெருகி உள்ளதால், ஓராண்டுக்கு ஒரு வட்டாரத்துக்கு 600 குடும்பங்களுக்கு வங்கிக் கடனும், அரசு மானியமும் வழங்கப்படுகிறது. கிராமத்தில் குடும்பங்களின் வருமானம் பற்றிய கணக்கெடுப்பு (சர்வே) நடத்தி, தகுதியான குடும்பங்களை, வட்டார அளவு மற்றும் கிராம அளவு குழுக்களில் வைத்துத் தேர்ந்தெடுத்து மனுக்களைப் பெற்று அவர்களுக்குத் தேவையான தொழில்களுக்கு கடனும், மானியமும் வழங்கப்படுகிறது. இந்த உதவியை வைத்துக் கொண்டு கறவைமாடுகளும் மாட்டு வண்டிகளும், உழவு மாடுகளும், கோழிப்பண்ணை மற்றும் வாத்துப் பண்ணைகளும் அமைத்து பல இலட்சம் குடும்பங்கள் முன்னேற்றம் கண்டுள்ளன.

ஆதரவற்றோருக்கு வாழ்வளிக்கும் இவ்வரிய திட்டத்தின் கீழ், பலன் பெற்ற ஒரு பெண்மணியின் வாழ்க்கை வளம் பெற்று விளங்குவதைக் கண்கூடாகக் காணலாம்.

குளித்தலை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த திருமதி பாப்பு என்பவர் உட்பட பலர் ஒவ்வொன்றும் ரூ. 2,500 மதிப்புள்ள கறவை மாடுகள் வாங்கி அதன் மூலம் நிரந்தரப் பலன் பெற்றுள்ளனர். திருமதி பாப்பு அவர்கள் இத்திட்டத்தின் கீழ் 1986-87-ஆம் ஆண்டில் முதல் பசுவைப் பெற்று, நல்ல முறையில் பராமரித்து, அதன் மூலம் பயன் அடைந்து தொடர்ந்து 1987-88-ஆம் ஆண்டிலும் இரண்டாவது பசுவை வாங்கி இருக்கிறார். ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த திருமதி பாப்பு இந்த இரண்டு பசுக்களை வாங்கியதன் மூலம் ரூ. 1,660 அரசு மானியம் பெற்றுள்ளார். நல்ல தீவனத்தை அக் கால்நடைக்கு அளித்து அதன் மூலம் நிரந்தர வருமானத்தை - ஒரு நாளைக்கு ரூ. 25 என்ற அளவில் அவர் பெறுகிறார். போதிய வருமானம் உள்ளதால் கடனையும் ஒழுங்காகத் திருப்பிச் செலுத்தி வருகிறார்.

பெற்ற கடனை ஒழுங்காக செலுத்தும் திருமதி பாப்பு போன்றோருக்கு கடன் அளிப்பதில் வங்கிகளும் எவ்விதத் தயக்கமும் காட்டுவது இல்லை என்பதையும் அறியலாம். கடன் பெற்றோர் குறிப்பிட்ட தவணைப்படி வங்கிக் கடனை திரும்பச் செலுத்தினால் தான் மேலும் பலருக்கு வங்கிக் கடன் வழங்க இயலும். கடனில் கொடுக்கப்பட்ட கால்நடையோ அல்லது வேறு பொருளோ காணாமல் போனாலோ அல்லது இறந்து விட்டாலோ இதன் நட்டத்தை ஈடு செய்ய 'இன்சூரன்ஸ்' திட்டம் மூலம் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதைப் பயன்படுத்தி நட்டம் ஏற்பட்ட பொருளுக்குப் பதில் 'இன்சூரன்ஸ்' தொகை மூலமாக வேறு ஒரு பொருள் புதிதாக வாங்கிக் கொள்ளலாம்.

கிராமத்திலுள்ள இளைஞர்கள் தங்களது ஓய்வுப் பொழுதை வீணே கழிக்காமல் பயனுள்ள வகையில் தொழில் செய்து வருமானத்தைப் பெருக்கிக் கொள்வதற்காக 'கிராமப்புற இளைஞர் சுயவேலைவாய்ப்பு பயிற்சித் திட்டம்', ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் ஒரு அங்கமாகச் செயல்படுத்தப்படுகிறது.



சுயவேலைவாய்ப்புப் பயிற்சி பெறும் மகளிர்

கிராமத்தில் ஓரளவு படித்து வேலை ஏதும் இல்லாத 18 முதல் 25 வயது வரை உள்ள ஆண் பெண் வகுப்பாரைத் தேர்ந்தெடுத்து வருமானம் தரத்தக்க ஏதாவது ஒரு தொழிலில் 6 மாதம் வரை ரூ. 100 முதல் ரூ. 250 வரை உதவித் தொகையுடன் பயிற்சி அளித்து பயிற்சியின் முடிவில் ரூ. 500 பெறுமான தொழில் கருவிகளை இலவசமாக அளித்து, பயிற்சிக்குப் பின் தானே சுயவேலைவாய்ப்பு ஏற்படுத்திக் கொள்ள வங்கிக் கடனும், மானியமும் அளிப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். இதன் பயனாகக் கம்பளி நெசவு முதல் கம்பூட்டர் இயக்குநர் வலர குடிசைத் தொழில்கள் முதல் குளிர்சாதனப் பெட்டி பராமரித்தல் வரை பல பயிற்சிகள் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறந்த பயிற்சி நிறுவனங்கள் மூலம் நடத்தப்படுகின்றன. இதுவரை பயிற்சி பெற்றவர்களில் இரண்டு இலட்சம் பேருக்கு மேல் சுயவேலைவாய்ப்புப் பெற்று வாழ்க்கையில் சிறப்பாக விளங்குகிறார்கள்.

எடுத்துக் காட்டாக பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்திலுள்ள கல்லல் ஊராட்சி ஒன்றியத்தில் படித்து வேலையற்று இருந்த 15 இளைஞர்களுக்கு அறிவியல் ஆடி தொழிலுக்கான பயிற்சி அளிக்கப்பட்டது.

வழக்கமான தச்சு, கொல்லு போன்றவற்றில் இருந்து மாறுபட்ட வகையில் நவீன முறையில், அறிவியல் வளர்ச்சிக்கு ஏற்ப, இப்பயிற்சி அளிக்கப்பட்டது. இவர்கள் நவீன இயந்திரங்களைப் பயன்படுத்தி கண்ணாடிப் பொருட்கள், அளவு ஜாடிகள் தயாரித்தல் போன்றவற்றில் முறையாகப் பயிற்சி பெற்றுள்ளனர். பயிற்சிக் காலத்தில் இவர்களுக்கு காரைக்குடியில் இருக்கும் மத்திய மின் வேதியியல் ஆராய்ச்சி நிலைய அறிஞர்களும், வல்லுநர்களும் தொழில்நுட்ப அறிவுரைகள் வழங்கியுள்ளனர். கல்விக் கூடங்கள், கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள், ஆராய்ச்சிக் கூடங்கள் போன்றவற்றிற்குத் தேவைப்படும் அறிவியல் ஆடிப் பொருட்களைத் தயார் செய்து வழங்கும் பயிற்சியும் அளிக்கப்பட்டது. ஆறு மாத கால பயிற்சிக்குப் பின் இந்நிலையம் உற்பத்தி நிலையமாக மாறியது. இதில் பயிற்சி பெற்ற அனைவரும் நிரந்தரமாக வேலைவாய்ப்புப்பெற வசதி உள்ளது. தேவைப்படும் பொருள்களை தத்தம் வீட்டில் இருந்து செய்து கொடுப்பதற்கான கருவிகள் அடங்கிய பெட்டிகளும் வழங்கப்பட்டுள்ளன. இப்பயிற்சியினால் விஞ்ஞான அறிவு வளர்ச்சியும் தொழில் திறனும் ஏற்பட்டுள்ளது. நாளொன்றுக்கு ரூ. 20 முதல் ரூ.30 வரைவருமானம்பெறவாய்ப்பு உள்ளது. வேலையற்று இருந்த இளைஞர்களது வாழ்க்கையில் நம்பிக்கையையும் இது ஏற்படுத்தியுள்ளது.

வறுமையில் வாடும் குடும்பங்களை நாடிச் சென்று பலன் அளிக்கும் சிறப்பான இத்திட்டம் தமிழகத்தில் 1978-ஆம் ஆண்டிலிருந்து செம்மையாகச்செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆறாவது ஐந்தாண்டு திட்டத்தில் தமிழ்நாட்டில் 13.96 இலட்சம் குடும்பங்களுக்கு இத்திட்டத்தின் மூலம் பலவகை உதவிகள் பாங்குறச் செய்யப்பட்டுள்ளன. 1987-88-ஆம் ஆண்டில் சுமார் 2 இலட்சம் பழைய மற்றும் 78,000 புதிய குடும்பத்தினர் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் பயன் பெற்றுள்ளனர். இதன் மூலம் ரூ. 3962.49 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் இத்திட்டத்திற்கென ரூ. 4492.376 இலட்சம் செலவிடப்படும். தனித்தனியாகச் செய்யப்பட்ட மதிப்பீடுகள் பலவற்றின் மூலம், பலன் பெற்றோரில் பாதிக்கு மேற்பட்டோர், வறுமைக் கோட்டிற்கு மேல் வந்துள்ளனர் என்பதை அறிய முடிகிறது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அளிக்கப்படும் கடனில் வாங்கிய பொருட்களை அல்லது கால்நடைகளை நல்ல முறையில் பராமரித்தால் வருமானம் நிச்சயம் பெருகும். வருமானத்தைப் பெருக்கினால்தான் கடன் பெற்ற குடும்பம் மேலும் முன்னேற முடியும். இந்த விவரங்களைத் தெரிவிக்க, ‘திட்டத்தில் பயன் பெற்றோர் சங்கம்’ என்று ஒன்று அமைத்து மாதம் ஒருமுறை கிராம அளவிலும், வட்டார அளவிலும் கூட்டம் நடத்தி குறைநிறைகளைப் பற்றி விவாதித்து உரிய அலுவலர்களுக்குத் தெரிவிக்க வழி செய்யப்பட்டுள்ளது.

இந்நாட்டின் முதுகெலும்பாக விளங்கும் கிராமங்களில் வாழ்கின்ற எண்ணற்ற ஏழையர்க்கு ‘ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்’ வாழ்வளிக்கும் ஒரு வரப் பிரசாதமாக அமைந்து, சிறந்து விளங்குகிறது. இத்திட்டம் வெற்றி பெற பொது மக்கள், அலுவலர்கள், வங்கி அலுவலர்கள் மற்றும் குறிப்பாக கடன் பெற்றோர் ஆகியோருடைய ஒத்துழைப்பு அவசியம் தேவை. இதை உணர்ந்து செயல்பட்டால் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் போன்ற நல்வாழ்வுத் திட்டங்கள் ஏழையரின் வாழ்வில் ஒளி யேற்றும் திட்டங்களாக விளங்கும்.

# ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித்திட்டம் உருவாக்கிடும் நன்மைகள்



தமிழகத்தில் தருமபுரி மாவட்டம் ஒரு பின்தங்கிய மாவட்டமாகும். இது 19 இலட்சத்து 93 ஆயிரத்து இருநூற்று தொண்ணூறு மக்கள் தொகையும், 18 ஊராட்சி ஒன்றியங்களையும் கொண்டது. பெரும்பாலான மக்கள் விவசாயக் கூலி வேலை செய்கிறார்கள். வேறு வேலைவாய்ப்புகள் இவர்களுக்குக் கிடையாது. மாநிலத்தில் இது போன்ற வேலைவாய்ப்பற்ற நிலையில் உள்ளவர்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கவே 'ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதித் திட்டம்' என்ற திட்டத்தை மைய அரசு 1983-ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்துகிறது. சாலை அமைத்தல், பாலம் கட்டுதல் போன்ற வேலைகள் மூலம் விவசாயத் தொழிலாளர்களுக்கும், ஏனைய வேலையற்றோருக்கும் வேலைவாய்ப்புகள் இத்திட்டத்தின் மூலம் அளிக்கப்படுகின்றன.

**கே. கிருஷ்ணசாமி, பி.இ.,**
*துணைத் தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை)*
*ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம்.*

**திட்டம் செயலாக்கப்படும் விதம்**

நிலமில்லாத விவசாயத் தொழிலாளர் குடும்பத்தில் ஒருவருக்கேனும் வேலைவாய்ப்பு அளிப்பது இத்திட்டத்தின் சிறப்பாகும். நிலமற்றோரிலும் ஆதி திராவிடர் மற்றும் மலைவாழ் மக்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்கப்படுகிறது. வேலைவாய்ப்பு நிறைந்த சாலை அமைத்தல் போன்ற வேலைகளே அதிகமாக எடுத்துச் செய்யப்படுகின்றன. தொழிலாளர்களுக்கு ஊதியமாக ரூ. 10 ஒரு நாளைக்கு வழங்கப்படுகிறது. இதில் ஒரு கிலோ ரூ. 1.85 மதிப்புள்ள 1.5 கிலோ அரிசியும் ஒரு கிலோ ரூ. 1.55 மதிப்புள்ள ஒரு கிலோ கோதுமையும் மீதிப் பணமும் அடங்கும்.

**சிறப்பான ஒரு வேலை**

வேப்பனப்பள்ளி ஊராட்சி ஒன்றியத்தில் ஓடப்பள்ளியிலிருந்து போதிமொகுடு என்ற கிராமம் 3 கி.மீ. தூரத்தில் உள்ளது. சரியான சாலை இல்லை. வண்டிப்பாதை மட்டுமே இருந்தது. இதில் முழுமையான சாலை அமைக்கத் திட்டமிடப்பட்டு தார்ச்சாலை அமைக்கப்பட்டது. தார்ச்சாலை 7.5மீட்டர் அகலத்தில் 9 குறு மழை நீர் வடிகால்வசதியுடன் அமைக்கப்பட்டது. சுமார் ஒரு கி.மீ. வரை முழுமையான மலைப்பகுதியாகும். நிதித் தேவையை முன்னிட்டு இதுவரை இச்சாலை அமைக்கப்படாமல் இருந்தது.



ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள அழகிய மலைப் பாதை

### கிராமத்தினரின் மகிழ்ச்சி

இந்தச்சாலை அமைத்த பின்பு ஓடப்பள்ளி மற்றும் போதிமொகுடு கிராம மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

''என் மகன் பள்ளிக்குச் செல்ல ஒரு சில கி.மீட்டர் நடந்து சென்று பின் பேருந்தில் செல்ல/ வேண்டும். இந்தச் சாலை அமைத்த பின்பு அவன் சைக்கிளில் சென்று வருகிறான். மேலும் இந்தக்கிராமத்தின் சத்துணவு மையத்திற்குத் தேவையான பொருட்களை முன்பு பெளாளப்பள்ளி கிராமத்திற்கு சென்றுதான் பெற முடியும். தற்போது இங்குவந்தே பொருட்களை அளித்துவிடுகிறார்கள். சத்துணவு மற்றும் பள்ளிக் குழந்தைகள் மிகவும் மகிழ்ச்சி அடைகிறார்கள்' என்கிறார் தலைமையாசிரியர் திரு கிருஷ்ணமூர்த்தி.

'முன்பெல்லாம் மருத்துவ வசதியே இல்லாமல் இருந்தது. சாலை போட்ட பின்பு டாக்டரே இங்கு வருவதால் எங்களுக்கு மருத்துவ வசதி கிடைக்கிறது' என்கிறார் திருமதி லட்சுமி அம்மாள்.

'எனக்குச் சொந்த நிலம் கிடையாது. இத்திட்டத்தினால் எனக்கு வேலை கிடைக்கிறது. வறட்சியான காலங்களில்கூட வேலை கிடைக்க இத்திட்டம் மிகவும் உதவுகிறது' என்கிறார் திரு. திம்மராயப்பா.

இத்திட்டத்தின் மூலம் அரிசி, கோதுமையுடன் பணமும் பெறுகிறார் இவர். குடும்பத்தின் தேவையை இத்திட்டம் நிறைவு செய்கிறது என்றால் அது மிகையில்லை.

'எங்களுடைய நிலத்தில் விளையும் பொருட்களைத் தலைச்சுமையாகவே விற்பனைக்கு எடுத்துச் செல்ல வேண்டும். இந்தச் சாலை அமைத்த பின்பு லாரிகளில் கொண்டு செல்ல வசதியாக உள்ளது. இதனால் நல்ல லாபம் கிடைக்கிறது.' என்று கூறுகிறார் திரு முத்துசாமி என்ற விவசாயி.

இச்சாலை அமைத்ததன் மூலம் சுமார் 3,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர். போத்திமொகுடு. மற்றும் ஓடப்பள்ளி கிராமத்தைச் சேர்ந்த 5,000 மக்கள் பயன் பெறுகின்றனர். இவ்வூர் மக்கள், பக்கத்தில் உள்ள கிருஷ்ணகிரி, வேப்பனப்பள்ளி போன்ற நகரங்களுக்குத் துரிதமாகச் செல்ல முடிகிறது.

இது போன்ற, சமுதாயத்திற்குப் பயன்படும் எண்ணற்ற வேலைகள் தமிழகம் முழுவதும் முடிக்கப்பட்டுள்ளன. ஆண்டிற்குச் சராசரியாக ரூ. 7 கோடி வரை மைய அரசு இத்திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்கிறது.

மக்களின் நீண்டகாலத் தேவைகளைப் பூர்த்தி செய்து கிராமங்களின் வளர்ச்சிக்கு உதவும் இத்திட்டம் ஒரு வரப்பிரசாதமான திட்டம் என்றால் அது மிகையாகாது.

## பின்புற அட்டைப்பட விளக்கம்

**பின்புற அட்டை ஊரக வளர்ச்சிப் பணிகளைச் சித்திரிக்கிறது—**

**1. கிராமப் பகுதியில் சாண எரிவாயு அடுப்புகள் அமைக்கப்பட்டுள்ளன.**

**2. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ், சிறுகடை அமைக்க உதவி செய்யப்படுகிறது.**

**3. பெண்கள் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், பாய்முடைய பெண்களுக்கு உதவி செய்யப்படுகிறது.**

**4. செயற்கை வைரத்திற்கு மெருகு ஊட்டும் வேலையில் பெண்கள் ஈடுபடுவதற்கு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.**

**5. பெண்கள், குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தில் மெழுகு பொம்மைகள், மெழுகுவர்த்திகள் செய்ய உதவிகள் அளிக்கப்பட்டுள்ளன.**

**6. மதுரை திருநகரில் உள்ள சத்துணவு மையத்தில் அமைக்கப்பட்டிருக்கும் சூரிய வெப்ப அடுப்பு.**

**7. ஊரகப் பகுதிகளில் கறவை மாடுகள், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளன.**

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்...
நேரில் கண்ட காட்சிகள்!

# ஊரக வளர்ச்சிப் பணிகளில் பெருமைமிகு சாதனைகள்

ஊரகவளர்ச்சித் திட்டங்களின் உண்மையான பயனை ஏழை எளிய மக்கள் பெற்றால் அதுவே மக்களின் பொருளாதார விடுதலைக்கு வழி வகுக்கும்.

அவ்வகையில் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களையும் வேலை வாய்ப்புத் திட்டங்களையும் நேரில் பார்வையிட்டோம். வளர்ச்சித் திட்டங்களின் பயன்கள் ஏழை எளிய மக்களைச் சென்று அடைவதையும், அதனால் மக்கள் பயன் அடைவதையும் நேரில் கண்டோம்.

ஊராட்சி ஒன்றியங்கள் பத்தொன்பது உள்ள திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில், தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலமும், நில மற்றோர் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின் மூலமும் பல்வேறு வளர்ச்சிப்பணிகள் சிறப்பாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

### திருமலைக் கொழுந்துபுரம்

திருநெல்வேலிக்கு வடகிழக்கே பத்தாவது கிலோ மீட்டரில் தாமிரபரணியாற்றங்கரையில் உள்ள கிராமப் பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த திருமலைக்கொழுந்துபுரம். ஒரு பெண் அங்கத்தினர் உட்பட 10 அங்கத்தினர்கள் மட்டுமே அங்கம் வகிக்கும் அந்தப் பஞ்சாயத்தின் தலைவர் திரு கே.சீனிவாசத் தேவரைச் சந்தித்த நாம் -அரசு அண்மைக் காலத்தில் அப்பகுதியில் மேற்கொண்டுள்ள வளர்ச்சிப்பணிகள் பற்றி விசாரித்தோம்.

நம்மை அழைத்துப்போய், ஏழை அரிசன மக்களுக்காகக் கட்டித்தரப்பட்டுள்ள 20 வீடுகளைக் காட்டினார் அவர். ''இவங்களுக்கெல்லாம் அரசாங்கம் பட்டா குடுத்து இருவத்தஞ்சி வருஷம் இருக்குமுங்க. பலபேரு பட்டா தொலஞ்சும் போன நிலைமையில், படாத பாடுபட்டு அதைத் திரும்ப வாங்கி ஒரு வீட்டுக்கு ஆறாயிரம் ரூபாய்ன்னு அரசாங்கம் கொடுத்த பணத்துல, அவங்கவங்களே நின்று இந்த வீடுங்களைக் கட்டி முடிச்சிருக்காங்க...'' என்று பெருமிதத்தோடு, தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள அந்த அழகிய சிறு வீடுகளை நமக்குக் காட்டினார் அவர்.

அதே போல அந்த ஊராட்சியில், 1985-86-ல் ஐந்து வீடுகள் கட்டித் தரப்பட்டிருக்கின்றன. 1986-87ல் ஆறு வீடுகள் கட்டித்தரப்பட்டுள்ளன. இன்னும் இருபது வீடுகள் கட்ட அரசு அனுமதி கோரப்பட்டுள்ளது. தனிப்பட்ட அமைந்துள்ள இந்த அரிசனக் குடியிருப்புக்கென்று தனிச்சாலை போடப்பட்டிருக்கிறது. தனியே ஒரு குடிநீர்க்குழாய் போட்டுத்தரப்பட்டுள்ளது. ஒவ்வொரு வீட்டுக்குப் பின்னாலும் குளியலறையும், அதையொட்டி துவைக்கும் கல்லும் அமைக்கப்பட்டுள்ளன. 16 x 10 அளவில் இரண்டு அறைகளோடு காணப்படுகின்றன வீடுகள்.

''இந்த வீடுகளுக்கு மின்விளக்குப் போட்டுத் தரும்படி கேட்டிருக்கிறோம்.'' என்று ஊராட்சி மன்றத் தலைவர் சீனிவாசத்தேவர் கூறினார். எந்தக் கட்சியையும் சேராத சீனிவாசத்தேவர் 1961 முதலாகவே ஊராட்சி மன்றத் தலைவராக இருந்து வருகிறார்!

### மருதூர் பொன்னாகுடி

அதே திட்டத்தின் கீழ் மருதூர் கிராமத்தில் இருபது வீடுகள் கட்ட அஸ்திவாரம் போடப்பட்டு வருவதைப் பார்த்துவிட்டு, வருகிற வழியில், கொம்மந்தானூரில் கட்டி முடிக்கப்பட்டுள்ள பள்ளிக்கூடக் கட்டடத்தையும் கண்டோம்.

அங்கிருந்து நாகர்கோவில் சாலையில் இருந்த பொன்னாகுடி போய்ச் சேர்நதோம். அங்கே, நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் முன்பு நாம் பார்த்ததுபோலவே 21 வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன. அதற்குச் சிறிது

**திருமலைக் கொழுந்துபுரம் அரிசனக் குடியிருப்பு**





அரிசனக் குடியிருப்பு-தண்ணீர்க் குழாய்

தள்ளி 33 வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளன.

இந்த இரண்டு குடியிருப்பிலும் வாழும் ஏழை அரிசன மக்களுக்கென்றே தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் சாலையோரமாக 'அங்காடி வளாகம்' (Shopline) ஒன்று கட்டித்தரப்பட்டுள்ளது. வெற்றிலைப்பாக்குக்கடை சைக்கிள் கடை, பலசரக்குக் கடை ஆகிய மூன்று கடைகள் அதில் இடம்பெறுகின்றன. அதனருகே குடியிருப்புக் குழந்தைகள் விளையாட்டுத் திடல் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

''இதுவரை இத்திட்டத்தின்கீழ் இப்படியொரு அங்காடி வளாகம் வேறெந்த மாவட்டத்திலும் கட்டப்படவில்லை'' என்றார், நம்மோடிருந்த கோட்ட வளர்ச்சி அலுவலர் திரு எஸ். கிருஷ்ணன்.

## கானார் பட்டி

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் உள்ள மானூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கானார்பட்டி கிராமத்தில் மலையோரத்துப் பரந்த வெளியில் சமூகக் காடு வளர்ப்புத் திட்டம் நிறைவேற்றப்பட்டிருப்பதைச் சென்று பார்த்தோம். வீடற்ற 23 அரிசனப் பெண்களுக்கு 9 ஏக்கர் நிலத்தை இதற்கென்றே பட்டா போட்டுக் கொடுத்திருக்கிறது அரசு. அதில் புளி, கருவேலங் கன்றுகள் 14,700 அணிஅணியாக அழகுற நடப்பட்டுள்ளன. அந்தச் செடி வளர்ந்து மரமான பிறகு அவர்களுக்கே சொந்தமாகிவிடும் என்னபதால், அந்தப் பெண்மணிகள் தனி அக்கறையோடு அவற்றைப் பராமரித்து வருவதாகத் தெரிந்தது. வளர்ந்த பிறகு மரத்தை வெட்டுவதானால், அதற்குப் பதில் புதிதாக இரண்டு செடிகள் நடவேண்டும் என்கிற சாதாரண நிபந்தனைதான் அவர்களுக்கு.

## அழகிய பாண்டியபுரம்

அழகிய பாண்டியபுரம் கிராமப்புற நல்வாழ்வு மையம் குறிப்பிடத்தக்கதாக இருந்தது. அங்குள்ள 'டிரைசம்' பயிற்சி நிலையத்தில், திருமதி ஏ.ரோஸி என்ற தொண்டு நிறுவனப் (Voluntary Service) பெண்மணியின் மேற்பார்வையில்

அழகியபாண்டியபுரம் 'டிரைசம்' பயிற்சி நிலையம்



ஊதுவத்தி செய்யும் பணியில் 20 பெண்கள் ஈடுபட்டிருந்தார்கள். உளளூரைச் சேர்ந்த அந்தப் பெண் களுக்கு மாதம் ஒன்றுக்கு நூறு ரூபாய் பயிற்சிக் கால உதவித் தொகை அளிக்கப்படுகிறது. வத்திக்கான மூலப்பொருள் வாங்க ரூ. 25 தரப்படுகிறது. வெளியூரிலிருந்து வரும் பெண்களானால் ரூ. 250 உதவித்தொகையாம். அவர்களுக்குப் பயிற்சிக் காலம் என்பது ஆறுமாதம். ஒவ்வொரு நாளும் அந்த 20 பெண்களும் சுமார் 5000 பத்திகள் செய்கிறார்கள். அந்த மாணவிகளுக்கு ஆசிரியையாக இருக்கிறார் திருமதி ரங்கநாயகி என்பவர்.

அழகிய பாண்டியபுரம் அரிசனக் குடியிருப்பின் பின்னாலிருந்த வீட்டுத்தோட்டம் பசுமையாக இருந்தது. ஒரு நபருக்கு 60 செடிகள் தந்து, அதை வளர்ப்பதற்காக மாதம் ரூ. 40 உதவித் தொகை தரப்படுகிறது. இந்தத்தொகை ஓராண்டுக்காலம் வழங்கப்படும். சுபாபுல், பப்பாளி, முருங்கை, கொடுக்காப்புளி மரக்கன்றுகள் அந்த (RLEGP) வீடுகளின் பின்னால் அணி செய்தன.

**பலபத்திரராமபுரம்**

ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள பலபத்திரராமபுரம் கிராமத்திலும் 91 எக்டேர் பரப்பளவு நிலத்தில் சமூகக் காடுகள் திட்டம் (NREP) நிறைவேற்றப்பட்டுள்ளது. ஒரு லட்சத்து முப்பதாயிரத்து இருநூறு கருவேலங்கன்றுகளும், புளியங்கன்றுகள் பத்தாயிரத்து 440ம் நடப்பட்டுள்ளன. இதன் மூலம் சிறு மற்றும் குறுவிவசாயிகள் 54 பேர்களும், ஆதிதிராவிட விவசாயிகள் 36 பேர்களும் பயனடைகின்றனர்.

அதே ஒன்றியத்தில் இருக்கும் வடக்கு கிடாரகுளம் என்ற இடத்தில் உள்ள ஆதிதிராவிடர் குடியிருப்பையொட்டி ஜீவன்தாரா கிணறு ஒன்று வெட்டப்பட்டுள்ளது. இதற்கான நிதி ஒதுக்கீடு ரூ.13,500 ஆகும். 5 மீட்டர் சுற்றளவில் 12 மீட்டர் ஆழம் வெட்டப்பட்டுள்ள இக் கிணற்றின் மூலம் 6.5 ஏக்கர் நிலம் பயனடையும். மிளகாய், மிளகு, கத்திரி போன்ற பயிர்கள் இந்தத் தரிசு நிலத்தில் இந்தக் கிணற்றுப் பாசனத்தால் தளதளவென்று வளரவிருக்கின்றன. அண்மையில் உள்ள குடியிருப்பைச் சேர்ந்த 8 அரிசனக் குடும்பத்தார் இதனால் பயனடைய விருக்கின்றனர்.

**ஏமன் வீட்டுப் புகையா அடுப்பு**





**வடக்கு குமாரகுளம் 'ஜீவன்தாரா' கிணறு**

**பாலூர் சத்திரம்**

கீழப்பாலூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள பாலூர் சத்திரத்தில் இருக்கும் 'உமா சைக்கிள் மார்ட்' உரிமையாளர் திரு சி.கே.நடேசன் நம்மை மலர்ந்த முகத்தோடு வரவேற்றார். முதன் முதல் ஏழு சைக்கிள்கள் மட்டும் வைத்து, கடையைத் தொடங்கிய அவர், இப்போது புது சைக்கிள் கோக்கத் தேவையான அத்தனை உதிரி பாகங்களும், சிறு தொழில் தொடங்க முனைவோருக்கான கடன் பெற்று ((IRDP-Industries Service Business) வாங்கி கடையை விரிவுபடுத்தியிருக்கிறார். ரூ. 5000 கடன் வாங்கிய அவருக்கு ரூ. 1666 மான்யம் வழங்கப்பட்டிருக்கிறது.

அதற்கு நேர் எதிரே திரு எஸ். ஜெபராஜ என்பவர் அதேபோல ரூ. 5000 கடனும், ரூ. 1666 மான்யமும் பெற்று பலசரக்குக் கடை வைத்திருக்கிறார். இருவருமே சரியான வகையில் கடனைத் திரும்பச் செலுத்தி வருவதாகவும், மிக நல்ல முறையில் வியாபாரம் நடப்பதாகவும் மகிழ்வுடன் தெரிவித்தார்.

அதேபோல இந்த ஊராட்சி ஒன்றியத்தில் பேக்கரி, கூடை பின்

னல், விறகுக்கடை, முடிதிருத்தகம், காய்கறிக்கடை,செருப்புத் தைத்தல் போன்ற தொழில்களுக்காக 355 சிறிய பெரிய விவசாயிகளுக்கு ரூ. 5.47 இலட்சம் மான்யம் வழங்கப்பட்டிருக்கிறது. சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 35 பேர்களுக்குப் பயிற்சி தரப்பட்டுள்ளது.

**மேலப்பாவூர்-கீழப்பாவூர்**

மேலப்பாவூர் கீழக்காலனி அரிசனக் குடியிருப்பு 33 வீடுகளோடு அழகுறத் திகழ்கிறது. ஒவ்வொரு வீட்டாரும் ஒவ்வொரு வகையில் கடன் பெற்றிருக்கிறார்கள். வண்டி மாடுகளுக்கான கடன், கறவை மாட்டுக் கடன், தொழில் கடன் எனப் பலவகையில் கடன் பெற்றுள்ள அத்தனை வீட்டாரும் வீட்டுத் தோட்டத் திட்டத்தின் கீழ் சுபா, தேக்கு, பப்பாளி, புளி எனப் பலவகைக்கன்றுகள் வாங்கி வீட்டுத் தோட்டத்தின் மூலம் வீதிக்கு வனப்புச் சேர்த்திருக்கிறார்கள். திரு ஏமன் என்பவரின் வீட்டிலிருந்த புகைவராத ‘மகன்சுளா’ அடுப்பைப் பார்வையிட்டோம். ‘‘துளிக்கூடப் புகை வெளியே வர்றதில்லிங்க’’ என்றார் அந்த வீட்டுப் பெண். திருமதி கே. கவர்தலை என்ற பெண்மணி இரண்டு கறவை மாட்டுக்காக ஐயாயிரம் ரூபாய் கடன் பெற்று பால் விற்பனை மூலம் வாழ்வை வளமாக்கிக்கொண்டதாகப் பெருமகிழ்வுடன் தெரிவித்தார்.



**கீழக் காலனி குடியிருப்பு வீட்டுத்தோட்டம்**

மேலப்பாவூரைச் சேர்ந்தவரான திரு. கு.பரமசிவம் ( IRDP ) கடனாக ஐயாயிரம் ரூபாயும், மான்யமாக 1660-ம் வாங்கி வெல்டிங் தொழில் நடத்திவருகிறார். அவர் செய்து வைத்திருந்த கிரில் கதவு, அடி பம்பு போன்றவை மிக வேலைச் சுத்தமாக இருந்தன: அதேபோலத் திரு ஐ. மாடசாமி கடன் வாங்கி நடத்தி வரும் கத்தி செய்யும் சிறிய தொழிற்சாலையும் குறிப்பிடத்தக்கதாக இருந்தது.

அந்த கிராமப் பஞ்சாயத்துத் தலைவரான திரு எஸ்.செல்லசாமி, தமிழக அரசு ஊரக வளர்ச்சி தொடர்பாக நிறைவேற்றி வரும் திட்டங்களை மனமாரப் பாராட்டினார். ‘‘உள்ளபடியே ஏழைகள் வாழ்வு இப்படிப்பட்ட திட்டங்களால் ஏற்றம் பெறும்’’ என்றார்.

சடையப்பபுரத்தில், சாணஎரி வாயுத் திட்டத்திற்காகக் கடன் வாங்கி அடுப்பு வைத்திருக்கிறார் திரு டி.சங்கரக் கோனார். ‘‘விஷக் காய்ச்சலால் ஊனமாகிவிட்ட என்னோட மவளுக்கு இந்த அடுப்புல சமைக்கிறது ரொம்ப சுளுவா இருக்குதுங்க’’ என்றார் அவர். ‘தஞ்சாவூர்கணேஷ்’ மாடல் சாண எரி வாயு அடுப்பு வைத்திருக்கிறார் அவர். அவரது தூண்டுதலால், இன்னும் பத்துப்பேர் அந்த அடுப்பு வைத்துள்ளனர்.

மேலப்பாவூரில், முப்பது ஏக்கர் பரப்பளவில் 18 ஆயிரம் கருவேல மரக்கன்றுகளும், ஆயிரத்து நூறு புளியங் கன்றுகளும், 160 முந்திரிச் செடிகளும் நட்டு, சமூகக்காடு உருவாக்கியிருக்கிறார்கள். புளியங் கன்றுகளையொட்டி பாதியளவில் ஒரு பானையைப் புதைத்து, அதில் நீர் நிரப்பி ‘பானை நீர்ப்பாசன முறை’யைச் செயல்படுத்தியிருக்கிறார்கள்.

கீழப்பாவூர் ஒன்றியத்தில் மட்டும் மொத்தத்தில் 163 ஏக்கரில் சமூகக்காடு உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 127 பேர் பயனடைவார்கள்.

**கறவை மாடுகளோடு திருமதி கவர்தலை**



**ஆய்க்குடி**

செங்கோட்டை வட்டார வளர்ச்சி அலுவலர் திரு பத்மநாபன், ஆய்க்குடி மலைச் சரிவில் உள்ள மக்கள் நாற்றங்காலுக்கு ( Nursery ) நம்மை அழைத்துச்சென்றார். முருங்கை, பப்பாளி, இலவு, பலா, வேம்பு ஆகிய கன்றுகள் 50 ஆயிரம் அங்கு நடப்பட்டுள்ளன. இதன் மதிப்பீடு ரூ. 12 ஆயிரத்து 675 ஆகும்.

இந்த வட்டாரத்தில் தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் போடப்பட்டுள்ள செங்கற்சூளைத் திட்டம் சிறப்பானதாகும். 80 ஆயிரம் கலலுக்குச் சூளை போடப்பட்டுள்ளது. இன்னும் கல் அறுக்கப்படுகிறது. விரைவில் அடுத்த சூளை போடப்படுமாம்.

''நாம் வெளியே ஆயிரம் செங்கல் வாங்கப் போனா முந்நூற்றைம்பது ரூபா ஆகும். நாமே உற்பதி செய்றபோது இருநூற்று எழுபத்தஞ்சி ரூபாய்ல முடிஞ்சிடுது. இநதத்திட்டத்தின் மூலம் இருபத்தஞ்சு அரிசனப் பெருமக்களுக்கும் வேலைவாய்ப்புக் கிடைக்குது'' என்று பெருமிதத்தோடு நமக்குத் தெரிவித்தார், திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்ட உதவி திட்ட அலுவலரான் திரு சண்முகம்.

செங்கோட்டை ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவரான திரு பண்டார முதலியார் நம்மை அணுகி அரசின் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம், நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம் ஆகியவற்றால் பயன்பெறும் மக்கள் சார்பில் நமக்கு மகிழ்ச்சி தெரிவித்தார். ''அரிசன வீட்டுவசதித் திட்டத்தில் ஆயிரமோ இரண்டாயிரமோ இன்னும் அதிகம் தந்து, மேலே ஓடு போடாமல், ஒட்டித்தர ஏற்பாடு செய்தால் நல்லது'' என்று கருத்தறிவித்தார்.

## மாவட்ட வளர்ச்சி திட்ட இலக்கு

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் நிறைவேற்றப் பட்டு வருகின்றன; நிறைவேறியுள்ளன. அப்படி (1988-89) நிறைவேற்றப்பட உள்ள பலவகைப் பணிகளின் இலக்கு விவரம் வருமாறு:

சாண எரிவாயு அடுப்பு, மாவட்டம் முழுவதிலுமாக (1987-88) 600 அமைக்கப்பட்டுள்ளன. (1988-89) 950 அமைக்கப்படவிருக்கிறது.

புகையில்லாத அடுப்புகள் (1987-88) 3060 கொடுக்கப்பட்டிருக்கிறது: (1988-89) 3000 கொடுக்கப்படவிருக்கிறது.

ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் - சமூக நலக் காடுகளுக்காக (1988-89) ரூ 35.363 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் (1988-89) சமூக நலக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின்கீழ் ரூ 55.839 ஒதுக்கப்பட்டிருக்கிறது.



மேலப்பாலூர் பரமசிவம் வெல்டிங் தொழில்

''சமூகக் காடுகள் திட்டம் மக்களிடமே ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அதற்காகப் பணமும் தரப்படுகிறது என்பதால் அவர்களும் ஆர்வத்தோடு ஈடுபடுகிறார்கள். இருந்தாலும் வனத்துறையிடமே அதை ஒப்படைத்துவிட்டு, அந்தப் பணத்தில் மக்களுக்காக வேறு ஏதாவது திட்டம் நிறைவேற்றலாமே!'' என்று மேலும் ஓர் ஆலோசனை அவர் கூற-'இருக்கிற காட்டைப் பாதுகாக்கத்தான் வனத்துறை; ஆட்டுக்கும் மாட்டுக்கும் தழை ஒடிக்கவும், விறகுக்காகவும் அங்கு வரும் மக்களைக் கட்டுப்படுத்தவே சமூகக்காடுகள் திட்டம்' என்பது போல, அதற்குப்பதில் கூறினார், உதவித்திட்ட அலுவலர்(விவசாயம்) திரு கே.சுடலையாண்டி.

—பி.எல்.ஆர்.

பொன்னாகுடி அங்காடி வளாகம்



# கடையநல்லூர் காய்கறித் தோட்டம்

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் உள்ள கடையநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தில் 31 சத்துணவு மையங்கள் இயங்கிவருகின்றன. நாள் ஒன்றுக்கு 1798 குழந்தைகளும், 180 முதியவர்களும் அவற்றின் மூலம் சத்துணவு பெறுகின்றனர்.

சத்துணவு மையங்களுக்குக் காய்கறி உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் இதுவரை காய்கறி வெளிச் சந்தையில் வாங்கி வினியோகிக்கப்பட்டு வந்தது. கூட்டுறவு சங்கத்தின் மூலம் வழங்கப்பட்ட காய்கறிகளோ, விலையோ அவ்வளவு சரியாக இல்லை. இந்த நிலைமையை நீக்கி தரமான காய்கறிகளை உற்பத்தி செய்து ஆண்டு முழுவதும் ஒரே சீரான விலையில் மேற்படி சத்துணவு மையங்களுக்கு விநியோகிக்கப்பட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. அந் நோக்கத்தில், பால்அருணாசலபுரத்தைச் சேர்ந்த நிலமற்ற ஆதிதிராவிடர் விவசாயக் கூலிகளாகிய திரு. முருகராஜ், திரு.திருமூர்த்தி என்ற இரு நபர்கள் காய்கறி உற்பத்தி செய்யத் தேர்வு செய்யப்பட்டனர். ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் கிணறு பம்ப் செட் வசதியுடன் 2.5 ஏக்கர் நிலத்தை அவர்களுக்கு ஆண்டுக் குத்தகைக்குக் கொடுத்து காய்கறி உற்பத்தி செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது.

அதன்படி காய்கறி உற்பத்தித்தோட்டம் துவக்கி வைக்கப்பட்டது. காய்கறி உற்பத்தி செய்ய தேர்வு செய்யப்பட்ட இரண்டு நபர்களுக்கும், தலா ரூ. 1500 (ரூ. 1000- கடன், ரூ. 500 மானியம்) வீதம் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் மூலம் 2.4.88ல் கடையநல்லூர் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மூலம் கடன் வழங்கப்பட்டது.

கத்தரி, தக்காளி, வெண்டை, முருங்கை, வாழை, முட்டைக்கோஸ், புடலை, சுரை, [illegible], யெல்லாம் இப்போது அங்கே செழித்துக் கிடக்கிறது. மாண்புமிகு மத்தியத் தொழில்துறை இணையமைச்சர் திரு.எம் அருணாசலம், 15.5.88ல் முதன் முதலாக இந்தக் காய்கறிகளைச் சத்துணவு மையங்களுக்கு வழங்கி, விநியோகத்தைத் துவக்கி வைத்தார்.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பயனடைவோர் இருவர், சைக்கிள் மூலம் சத்துணவு மையங்களுக்கு நிரந்தரமாக இந்தக் காய்கறிகளை விநியோகம் செய்வார்கள். 31 மையங்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 2700 மதிப்புள்ள காய்கறிகள் உற்பத்தி செய்து வினியோகிக்கப்படும். காய்கறி உற்பத்தி செய்து வழங்கும் இருவருக்கும் மாதம் ஒன்றுக்குத் தலா ரூ.500 நிகர வருமானம் கிடைக்கும். அது போலவே காய்கறிகளை மையங்களுக்குக் கொண்டுபோய்க் கொடுக்கும் இருவருக்கும் நாள் ஒன்றுக்குத் தலா ரூ.7.50 ஊதியமாகக் கிடைக்கும். காய்கறி உற்பத்தி செய்ய வங்கிக் கடன் பெற்ற இருவரும், மாதத் தவணையாக ரூ. 40 வீதம் 30 தவணைகளில் கடனைத் திருப்பிச் செலுத்தி விடுவார்கள்.





# வறுமை ஒழிப்புத் திட்டத்தில் கோவை மாவட்டம்


**ஹேமந்த்குமார் சின்ஹா**
**மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை**
**கோயம்புத்தூர்.**


கோவை மாவட்டமானது 3 கோட்டங்களையும் 21 ஊராட்சி ஒன்றியங்களையும் கொண்டுள்ளது. கோவை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம், ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம் மற்றும் கிராமப்புற இளைஞர்கள் சுயவேலைப் பயிற்சித் திட்டங்கள் முதலியன வறுமை ஒழிப்புத் திட்டத்தின்கீழ் அனைத்து ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்**

1987-88 ஆம் ஆண்டு கோவை மாவட்டத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட குறியீடான 12,434-க்கு, 13 ஆயிரத்து 96 நபர்கள் பயன்பெற்றுள்ளனர். இவர்களில் - 6,632 தாழ்த்தப்பட்டோர் மற்றும் மலைவாழ்மக்களும், 4,386 பெண்களும் அடங்குவர். இத்திட்டத்தில் ரூ.651-இலட்சம் கடனாக கொடுக்கப்பட்டுள்ளது. இதில் மானியம் மட்டும் ரூ. 206 இலட்சம் ஆகும்.

கோவை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை துவங்கப்பட்ட ஆரம்ப காலத்திலிருந்து எய்தப்பட்ட சாதனைகளில், 1987-88ஆம் ஆண்டு ஏற்படுத்திய சாதனைகள் 100 சதத்திற்கு மேலாக எண்ணிக்கை மற்றும் நிதி இரண்டிலும் ஏற்படுத்தியது இவ்வாண்டின் சிறப்பு அம்சமாக விளஙகுகிறது.

**கிராம இளைஞர்கள் சுயவேலை வாய்ப்புப் பயிற்சித் திட்டம்**

இத்திட்டத்தின்கீழ் 1987-88ஆம் ஆணடில் நிர்ணயிக்கப்பட்ட குறியீடான 735-ல், 765 நபர்கள் பயிற்சியை முடித்துள்ளனர். இது குறியீட்டைக் காட்டிலும் 104 சதவீதம் அதிகமாகும்.

**தேசிய ஊரக வேலைத் திட்டம்**

1987-88ல் தேசியஊரகவேலைத் திட்டத்தின்கீழ் நிர்ணயிக்கப்பட்ட குறியீடு 1,836 வேலைகள். ஆனால் 2,067 வேலைகள் முடிக்கப்பட்டு, குறியீட்டைக் கடந்து 113 சதம்எட்டப்பட்டுள்ளது. 1987-88ம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட குறியீடான 16.78 இலட்சம் நாற்றுக்களில், 17.395 இலட்சம் நாற்றுக்கள் உற்பத்தி செய்யப்பட்டு அதே அளவில் நடப்பட்டுள்ளன. இதைத் தவிர மலைவாழ் மக்களுக்கென்றே தனிக் குடியிருப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டு 116 கூட்டுக் குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்கு 277.920 இலட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. எனினும் ரூ.343.35 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

நிர்ணயிக்கப்பட்ட குறியீடான 14.63 இலட்சம் மனித உழைப்பு நாட்களில், 18.03 இலட்ச மனித உழைப்பு நாட்களை ஏற்படுத்தி 23 சதம் எட்டப்பட்டுள்ளது.

**ஊரக நிலமற்றோர் வேலை உறுதியளிப்புத் திட்டம்**

இத்திட்டத்தின்கீழ் 1987-88ஆம் ஆணடிற்கு நிர்ணயிக்கப்பட்ட குறியீடான 1,592 வேலைகளில், 1,729 வேலைகள் எடுத்து முடிக்கப்பட்டு 109சதவிகிதம் எட்டப்பட்டுள்ளது. சமூகக்காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் நிர்ணயிக்கப்பட்ட குறியீடான 9.531 இலட்ச நாற்றுக்களில் 13.706 இலட்ச நாற்றுக்கள் உற்பத்திசெய்து நடப்பட்டுள்ளன. மத்திய ஊரகச் சுகாதார திட்டத்தின்கீழ் 184 சுகாதார கழிப்பறைகள் கட்டப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்ட ரூ. 256.518 இலட்சத்தில் ரூ.232.023 இலட்சம்செலவிடப்பட்டுள்ளது. 91 சதவிகிதம் எட்டப்பட்டுள்ளது.

**பெருநோக்குத் திட்டம்**

1987-88ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்தின்கீழ் குறியீடு நிர்ணயம் செய்யாமல் இருந்தபோதிலும், நில அபிவிருத்தித் திட்டம் மற்றும் சிறுபாசனத் திட்டத்தின்கீழ் ரூ.28.52 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இதில் 57 சதவிகிதம் உதவித் தொகை பயன்படுத்தப்பட்டது.

**1988-89ஆம் ஆண்டு கோவை மாவட்டத்தில் வறுமை ஒழிப்புத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள்**

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 1988-89ஆம் ஆண்டிற்கு பயனடைவோர்க்கான இலக்கு 12 ஆயிரத்து முன்னூற்று ஆறு என அரசு நிர்ணயம் செய்துள்ளது. இதில் 7,927 புதிய, மற்றும் 4,329 பழைய பயனடைவோரும், அடங்குவர். இத்திட்டத்திற்கு

**கோவை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,**
**இதுவரை எய்திய சாதனைகளைவிட 1987-88இல்**
**ஏற்படுத்திய சாதனை 100 சதத்திற்கும் மேலாகும்.**



ரூ. 260.973 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் இத்திட்டத்திற்குப் புதிய பயனடைவோரின் தகுதிக்கான ஆய்வு மேற்கொண்டு முடிக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்திற்கான வட்டார அளவிலான செயலாக்குத் திட்டம் ரூ. 316.877 இலட்ச மதிப்பீட்டில் 16,100 குடும்பங்கள் பயனடையும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. இதில் 8,248 பழங்குடி மற்றும் தாழ்த்தப்பட்டவர்களும், 6,127 பெண்களும் பயனடைய வகை செய்யப்பட்டுள்ளது.

வட்டார ஆலோசனைக்குழு நியமனம் செய்யப்பட்டு இத்திட்டத்தின்கீழ் பயனடைவோர் பட்டியலைத் தயாரித்து தேர்வும் செய்யப்பட்டுள்ளது. மேலும் இப்பட்டியலில் இருந்து தகுதி வாய்ந்த பயனடைவோரைத் தேர்வு செய்யும் தேர்வுக்குழு, 1988 ஆம் ஆண்டு ஜூலை மூன்றாம் வாரத்திற்குள் தேர்வு செய்து, பட்டியலைச் சமர்ப்பிக்க உள்ளது.

### தேசீய ஊரக வேலைத் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் 1988-89ஆம் ஆண்டிற்கான செயலாக்குத்திட்டம் ரூ. 356 இலட்சத்தில் 1950 வேலைகள் நிறைவேற்றும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் முக்கியமாக, தொகுப்பு வீடுகள் ஊரகச் சுகாதாரக் கழிவறைகள், சமூகக் காடுகள் மற்றும் பிற அடங்கும்.

சமூகக் காடுகள் திட்டத்தின் கீழ் 6.27 இலட்சம் நாற்றுக்கள், 29 நாற்றங்கால்கள் மூலம் வளர்க்கப்பட்டுள்ளன. நாற்றுக்கள் நடுவதற்கான ஆயத்தப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

அனைத்துத் தரப் பணிகளும் 15.4.88லிருந்தே துவக்க ஆணை பிறப்பித்து, பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இதுவரை 2.896 இலட்சம் மனித உழைப்பு நாட்கள் ரூ. 43.392 இலட்சம் செலவினத்தில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

### ஊரக நிலமற்றோர் வேலை உறுதியளிப்புத் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் 1988-89ஆம் ஆண்டிற்கென வருடாந்திர செயலாக்குத் திட்டம் ரூ. 185.737 இலட்சத்தில், 1,179 தொகுப்பு வீடுகளும், 20 ஊரக சுகாதார கழிப்பறைகளும், 30 பாசனக் கிணறுகளும் (ஜீவன்தாரா) என்ற வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

மொத்தம் 1,229 பணிகளில், 1,179 பணிகள் துவக்கப்பட்டு, 97,500 மனித உழைப்பு நாட்கள் உற்பத்தி செய்யப்பட்டு, ரூ. 12.126 இலட்சம் செலவு செய்து பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

சமூகக் காடுகள் திட்டத்தின்கீழ் 3.50 இலட்சம் நாற்றுக்கள், 70 நாற்றங்கால்கள் மூலம் வளர்க்கப்பட்டுள்ளன. நாற்றங்கால் நடுவதற்கான ஆயத்தப்பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

### பெருநோக்குத் திட்டம்

1988-89க்கான செயலாக்குத் திட்டம் 114.05 இலட்சம் மதிப்பீட்டில் 4,392 சிறுபாசனத்திட்டங்களும், 1,474 நில அபிவிருத்தித் திட்டங்களும் பயனடைவோர்க்கென தயாரிக்கப்பட்டு, மொத்தம் 5,866 குடும்பங்கள் பயனடைய உள்ளன.

இத்திட்டத்தின் மூலம் பயனடைவோர்க்கான தகுதி வாய்ந்தோர் பட்டியல் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத் தேர்வு முடிந்தவுடன் 1988ஆம் ஆண்டு ஜூலை இரண்டாம் வார அளவில் தயாரிக்கப்பட உள்ளது.



தமிழரசு
வழங்கும்
பெருந்தலைவர்
காமராஜர்
சிறப்புப் பகுதி



# பெருந்தலைவர் வாழ்க்கைக் குறிப்பு

**1903 ஜுலை 15**

விருதுபட்டி என்னும் விருதுநகரில் குமாரசாமி நாடார்-சிவகாமி அம்மாள் தம்பதிக்கு மகனாகத் தோன்றினார்.

**1907** தங்கை நாகம்மாள் பிறப்பு

**1908**—காமராஜர், திண்ணைப் பள்ளிக் கூடத்தில் சேர்க்கப்பெற்றார். அரிச்சுவடியும், ஏட்டுக் கணக்கும் பயின்றார். சிறிது காலம் கழித்து ஏனாதி நாயனார் வித்யாசாலாவில் சேர்க்கப் பட்டார்.

**1909**—சத்திரிய வித்தியாசாலாவில் சேர்க்கப்பட்டார்.

**1910**—தந்தையார் குமாரசாமி நாடார் திடீரென்று காலமாகிவிட்டார். தாய் மாமன் கருப்பையா நாடார் காமராஜரின் குடும்பத்துக்கு உதவி செய்தார்.

**1914**—6ஆம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தபோது பள்ளி செல்வதை நிறுத்திக் கொண்டார்.

**1919**—ஏப்ரல்-ரவுலட் சட்டத்தை எதிர்த்து காந்தி யடிகள் விடுத்த அழைப்பை ஏற்று, காங்கிரசின் முழுநேர ஊழியரானார்.

**1920**—ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கு கொண் டார். தாயார், திருமணப் பேச்சைத் தொடங் கினார். மணம் செய்து கொள்ள மறுத்து விட் டார் காமராஜர்.

**1922**—சாத்தூர் தாலுகா, காங்கிரஸ் மாநாட்டில் வர வேற்புச் செயலாளராகப் பணியாற்றினார்.

**1923**—மதுரையில் கள்ளுக்கடை மறியலில் ஈடுபட்டார்.

**1926**—சத்தியமூர்த்தி-சீனிவாச அய்யங்கார் ஆகியோ ருடன் பணி ஆற்றினார். பொதுத் தேர்தலில் பல ஊர்களுக்குச் சென்று தேர்தல் பணிபுரிந் தார்.

**1928**—மதுரைக்கு வருகைபுரிந்த சைமன் குழுவை எதிர்த்தார்.

**1930**—உப்புச் சத்தியாக்கிரகத்தில் கலந்துகொண்டு கைது செய்யப்பட்டார். இரண்டாண்டுச் சிறைத் தண்டனை பெற்றார். அலிபூர் சிறையில் அடைக்கப்பட்டார்.

**1931**—காந்தி இர்வின் ஒப்பந்தத்தின் காரணமாக, காம ராஜர் விடுதலை செய்யப்பட்டார். விருதுநகரில் மாபெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது.

**1933**—இங்கிலாந்தில் நடைபெற்ற வட்டமேஜை மாநாடு தோல்வியுற்றதால், நாடெங்கும் கிளர்ச்சி ஏற்பட்டது. பல தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். காமராஜரும் ஓராண்டுச் சிறைத் தண்டனை பெற்றார்.

**1936**—காரைக்குடியில் நடைபெற்ற காங்கிரஸ் கமிட்டித் தேர்தலில், சத்தியமூர்த்தி தலைவ ராகவும், காமராஜர் செயலாளராகவும் தேர்ந் தெடுக்கப்பட்டனர்.

**1937**—சட்டமன்றப் பொதுத் தேர்தலில் சாத்தூர்த் தொகுதியில் காங்கிரஸ் சார்பாகப் போட்டி யிட்டு வெற்றி பெற்றார். விருதுநகர் நகராட்சி மன்றத் தேர்தலில் 7-வது வார்டில் போட்டி யிட்டு வென்றார். நகராட்சித் தலைவராகும்படி பலரும் வேண்டியும் அவர் மறுத்துவிட்டார்.

**1940**—தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். யுத்த நிதிக்குப் பணம் தரவேண்டாம் என்று மக்க ளிடையே பிரச்சாரம் செய்ததால், அந்நிய ஏகாதிபத்தியத்தால் கைது செய்யப்பட்டு, வேலூர் சிறைக்கு அனுப்பப்பட்டார்.

**1941**—மே 31-சிறையிலிருந்து காமராஜர், விருதுநகர் நகராட்சி மன்றத் தலைவராக ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**1942**—மார்ச்-காமராஜர் விடுதலை பெற்றார். விருது நகரில் மகத்தான வரவேற்பு. நகராட்சிக் கூட்டத்தில் முதன் முறையாகக் கலந்து கொண்டு, அன்றைய தினமே கட்சிப் பணியின் காரணமாக, நகராட்சித் தலைவர் பதவியை ராஜினாமா செய்தார். ஆகஸ்ட்போராட்டத்தின் போது கைது செய்யப்பட்டார்.

**1945**—இரண்டாவது உலகப் பெரும் போரில் வெள் ளையர்கள் வெற்றி பெற்றதனால், பாதுகாப்புக் கைதிகள் அனைவரும் விடுதலை செய்யப்பட்ட னர். காமராஜரும் அவர்களுள் ஒருவர்.

**1946**—மே 16-தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் தேர்த லில் வெற்றிபெற்றார்.

**1947**—ஆகஸ்ட் 15-இந்தியா விடுதலை பெற்றது. பண் டித நேருவின் தலைமையில் இடைக்கால அரசு உருவானது. இந்தியாவுக்கு விடுதலை வாங்கித் தந்த அண்ணல் காந்தியடிகளைப் போற்றி ஓர் அறிக்கை வெளியிட்டார் காமராஜர்.

**1948**—கோயம்புத்தூரில் நடைபெற்ற தமிழ் மாகாண மாநாட்டுக்குத் தலைமை வகித்தார். தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராகப்



போட்டியின்றி ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

1950—தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் தேர்தலில் வெற்றி பெற்றார்.

1952—சட்டமன்றத் தேர்தலில் காங்கிரஸ் பூரண பெரும்பான்மையை அடையவில்லை. ராஜாஜி முதலமைச்சராவதற்கு காமராஜர் ஒத் துழைப்பு நல்கினார். டிசம்பர் திங்களில் நடை பெற்ற தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் தேர் தலில் காமராஜர் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

1954—பிப்ரவரி - மலாய் நாட்டில் சுற்றுப் பயணம் மேற்கொண்டார். முதலமைச்சர் ராஜாஜி அறி முகம் செய்த குலக் கல்வித் திட்டம் பெருத்த எதிர்ப்பைச் சம்பாதித்துக் கொண்டதால், அவர், பதவியில் நீடிக்க முடியவில்லை. ராஜினாமா செய்தார். நிலைமையைச் சமாளிப்பதற்காக, சட்டமன்றக் காங்கிரஸ் கட்சித் தலைவர் பத விக்குக் காமராஜர் போட்டியிட்டு வென்றார்.

1954—ஏப்ரல் 13-காமராஜர் சென்னை மாநிலத்தின் முதல்வரானார். குடியாத்தம் தொகுதியில் இடைத்தேர்தலில் போட்டியிட்டு வென்று சட்ட மன்ற உறுப்பினரானார்.

1956—மொழிவாரி மாகாணம் என்ற திட்டத்தின்படி புதிய தமிழகம் உருவாவதற்கு ஆதரவு தெரி வித்தார்.

பள்ளிகளில் மதிய உணவுத் திட்டத்தை அறி முகம் செய்தார்.

1957—பொதுத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று, மீண்டும் முதலமைச்சரானார்.

1960—ஏழைப் பிள்ளைகள் அனைவருக்கும் 11ஆம் வகுப்பு வரை இலவசக் கல்வி அளிப்பதற்கு ஆணையிட்டார்.

1961—அக்டோபர் 9 - சென்னை மாநகராட்சியினர் உருவாக்கிய காமராஜர் திருஉருவச் சிலையைப் பிரதமர் நேரு திறந்து வைத்தார்.

1962—பொதுத் தேர்தலில் வெற்றிபெற்றார். மூன் றாம் முறையாக முதலமைச்சர் ஆனார்.

1963—எல்லாருக்கும் இலவசக் கல்வித் திட்டத்தை அமல்படுத்தினார்.

அக்டோபர் 2 காமராஜர் திட்டத்தின்படி பதவியை ராஜினாமாச் செய்தார். பின்னர் காமராஜர் அனைத்திந்தியக் காங்கிரசின் தலை வராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1964— பிரதமர் நேரு மே 27-இல் மறை வெய்தியதால் - அடுத்து லால்பகதூர் சாஸ்திரி பிரதமராகப் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப் படுவதற்கு ஆவன செய்தார் காமராஜர்.

1965—இந்தியா-பாகிஸ்தான் போர் ஏற்பட்டது. பஞ் சாபில் போர் முனைப் பகுதிகளில் சுற்றுப்பய ணம் செய்தார். பிரதமர் லால்பகதூர் யுத்த நிதி திரட்டுவதற்காகச் சென்னைக்கு வந்த போது- காமராஜர் பேராதரவு தெரிவித்தார்.

1966—தாஷ்கண்ட் சென்ற பிரதமர் லால்பகதூர் சாஸ் திரி, எதிர்பாராது மறைவு எய்தியதால் மறுபடி யும் பிரதமர் தேர்வு நடைபெற்றது. இந்திரா காந்தி பிரதமராவதற்குக் காமராஜர் பெரும் முயற்சிகள் எடுத்துக்கொண்டார்.

ஜூலை 22 - காமராஜர் சோவியத் நாட்டில் இருபது நாட்கள் சுற்றுப்பயணம் மேற்கொண் டார்.

1969—நாகர்கோவில் நாடாளுமன்ற இடைத் தேர்த லில் காமராஜர் போட்டியிட்டு வெற்றி பெற் றார்.

1971—நாடாளுமன்ற இடைத்தேர்தல் வந்தது. காம ராஜர் நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந் தெடுக்கப்பெற்றார்.

1972—தாமிரப் பத்திர விருது பெற்றார்.

1975—அக்டோபர் 2 - பிற்பகல் 2 மணி அளவில் எதிர் பாராமல் காமராஜருக்கு உடல் வியர்த்தது. டாக்டர் வருவதற்குள் அவர் உயிர் துறந்தார். அவரது உடல் பொதுமக்களின் பார்வைக்காக ராஜாஜி மண்டபத்தில் வைக்கப்பட்டது.

அக்டோபர் 3 - அவரது உடல் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. காமராஜரின் தங்கை யின் பேரன் கனகவேல் உடலுக்கு எரியூட்டி னார்.

கிண்டியில் காமராஜருக்கு நினைவகம், சென்னையிலும், விருதுநகரிலும் காமராஜ் நினைவில்லங்கள், காமராஜர் பெயரால் பல்கலைக்கழகம், காமராஜர் மாவட்டம் ஆகியவற்றைத் தமிழக அரசு உருவாக்கியது.



# கண்ணியன் பிறந்த நாள்





சின்னஞ் சிறியவர் சிரித்து மகிழ்க !
சேயிழை யார்முகம் திங்களாய் மலர்க !
தன்னல மறந்தோர் தலைநிமிர்ந் துயர்க !
தாயக வேட்கையர் தமதென நினைக !

இது - காமராஜ் பிறந்தநாள் !
நாம் - கவலைகள் மறந்தநாள் !

ஆடுக மாணவர் ஆரவா ரித்து !
அள்ளுக இன்பம் அண்ணலை நினைத்து !
பாடுக பாவலர் பாடல் தொடுத்து !
பருகுக மாந்தர் பழரசம் எடுத்து !

இது - காமராஜ் பிறந்தநாள் !
நாம் - கவலைகள் மறந்தநாள் !

வீடுகள் தோறும் விளக்கம் ஒளிர்க !
வெள்ளை மனத்தவர் உள்ளம் குளிர்க !
நாடெங்கும் தோரணம் கோலங்கள் இடுக !
நல்லவர் திரண்டு ஊர்வலம் வருக !

இது - கண்ணியன் பிறந்தநாள் !
நாம் - எண்ணிய நடந்தநாள் !

கவியரசர் கண்ணதாசன்






# மக்கள் தலைவர்

மேதகு குடியரசுத் தலைவர்
திரு ஆர். வெங்கட்ராமன்



நேருவுக்குப் பின்னர் இந்தியாவில் குழப்பம் மிகுந்து, ஜனநாயகம் அழிந்துவிடும் என்ற ஒரு கருத்து உலகின் பல பாகங்களிலும் பரவியிருந்தது. இந்தியாவின் நெருங்கிய நண்பர்கள் எனக் கருதப்படும் தலைவர்களிடம்கூட இந்தச் சந்தேகம் இருந்தது. அந்தச் சந்தேகத்தையெல்லாம் போக்கி, நெருக்கடி நேரத்திலும் சிதறாமல், தளராமல் எழுந்து நிற்கும் சக்தி வாய்ந்த நாடு பாரதம் என்பதை, அமைதியான முறையில், ஏக மனதாக ஒரு தலைவரைத் தேர்ந்தெடுத்துக் காட்டினோம். அப்படி ஓர் அதிசயத்தை நிகழ்த்திக் காட்டியவர் தலைவர் காமராஜ் அவர்கள்தான் என்பது உலகறிந்த உண்மை. இந்த நாட்டில் ஜனநாயகம் தடைபெறாமல் தொடர்ந்து நடைபெறும் என்பதை உலகத்துக்கு எடுத்துக்காட்டினார் காமராஜ்.

ரஷ்யப் பிரதமர் கோஸிஜின் அவர்கள், டெல்லியில் காமராஜ் அவர்களைச் சந்தித்துத் தம் நாட்டுக்கு வருமாறு அழைத்தபோது, காமராஜ் அந்த அழைப்பை ஏற்றுக்கொண்டார்.

மாஸ்கோ செல்வதற்கு முதல்நாள் டெல்லியில் ஒரு விருந்து ஏற்பாடாகி இருந்தது. விருந்தளித்தவர் ரஷ்ய நாட்டின் இந்தியப் பிரதிநிதி. அதற்கு, யூகோஸ்லேவியா, பல்கேரியா, ஹங்கேரி, செக்கோஸ்லோவேகியா, கிழக்கு ஜெர்மனி ஆகிய நாட்டுப் பிரதிநிதிகளும் அழைக்கப்பட்டிருந்தார்கள்.

அந்த விருந்தில், ரஷ்யப் பிரதிநிதி என்னிடம் ''காமராஜ் அவர்களுக்கு விசேஷ விருப்பம் ஏதாவது உண்டா? குறிப்பிட்ட ''பொழுதுபோக்கு'' ஏதாவதில் அவர் அக்கறை கொண்டுள்ளாரா? ரஷ்யாவில் நாங்கள் ஏற்பாடு செய்துள்ளதைத்தவிர, அவர் ஏதாவது காண விரும்புகிறாரா'' என்று கேட்டார்.

நான் யோசித்துப் பார்த்தேன். காமராஜ் அவர்களுக்கு என்ன ஹாபி? என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை. ''அவர் பொழுதெல்லாம் மக்களைப் பற்றிய சிந்தனையில்தான் போகிறது. எனவே மக்களின் நல்வாழ்வுதான்'' ரஷ்யப் பிரதிநிதி என் பதிலைக் கேட்டு வியப்படைந்தார்.

துஷான்பேயில் உள்ள ஒரு கூட்டுப் பண்ணைக்கு விஜயம் செய்தார் காமராஜ்.

பண்ணையைப் பார்வையிட்ட பிறகு விவசாயிகள் குடியிருப்புக்குச் சென்றார். விவசாயத்தைக் கண்டவுடன் காமராஜ் அவர்களுக்கு உற்சாகம் பிறந்துவிட்டது. அவர்களுக்கும் இவரைக் கண்டதில் பெருமகிழ்ச்சி. அந்த மக்களுடன் அமர்ந்து வெகுநேரம் பல விஷயங்களைப் பற்றிப் பேசினார் காமராஜ். அவர்களுடைய சேம லாபங்களைப் பற்றியெல்லாம் விசாரித்தார்.

விவசாயிகளின் குழந்தைகள் காமராஜைச் சுற்றி நின்றனர். தங்கள் வீட்டில் தயார் செய்திருந்த உணவுப் பண்டங்களை அவருக்குக் கொடுத்துச் சாப்பிடும்படி உபசரித்தனர். காமராஜ் மகிழ்ச்சியுடன் அந்தச் சிற்றுண்டியைச் சாப்பிட்டார். அவர்களுடன் அமர்ந்துகொண்டு ஏதோ அந்தக் குடும்பத்தையே சேர்ந்தவர் போல் உரையாடினார். அவர்கள் வாழ்க்கை நிலை, சம்பளம், வயோதிகப்பென்ஷன் முதலியவை பற்றிக் கேள்விமேல் கேள்வி போட்டுக் கொண்டிருந்தார்.

அங்கிருந்த சில தாய்மார்களைப் பார்த்து, நம் ஊர்ப் பெண்மணிகளை விசாரிப்பது போல் ''என்னம்மா சௌக்கியமா?'' என்று வினவினார் காமராஜ். குழந்தைகளையெல்லாம் கன்னத்தில் தட்டி, ''வா, வா'' என்று அழைத்துத் தன்னுடன் அணைத்துக்கொண்டார்.

அந்தப் பண்ணைவாசிகளுக்கு, இந்திய நாட்டிலிருந்து வந்திருக்கும் பெரும் தலைவர் என்ற எண்ணம் மறந்து, நம் பண்ணையைச் சேர்ந்த ஒரு பெரியவரிடம் தான் நாம் பேசிக்கொண்டிருக்கிறோம் என்ற உணர்வை ஏற்படுத்தி விட்டார் காமராஜ்.

('சோஷலிச நாடுகளில் மக்கள் தலைவர்' என்ற நூலிலிருந்து)



# தன்னிகரற்ற தலைவர்

**ஜி. கருப்பையா மூப்பனார்**

புதிய தமிழகத்தின் மறுமலர்ச்சிக்கு வித்திட்ட பெருந்தலைவர் காமராஜரின் பிறந்தநாளை இன்று இந்த நாடு கொண்டாடுகிறது. இவருடைய வரலாறு தமிழகத்தின் அரசியல் வரலாற்றுக்கு ஒரு தனிப் பாதை காட்டியது. பணம் படைத்தவர்கள், செல்வாக்கு மிகுந்தவர்கள், சாதிப் பெருமை பெற்றவர்கள் மட்டுமே அரசியலில் தலைமையேற்க முடியும், பதவிபெற முடியும் என்றிருந்த நிலையை மாற்றியமைத்தவர்.

எளிய தொண்டனாக, ஆர்வமுள்ள சுதந்திரப் போராட்ட வீரனாக காங்கிரஸ் இயக்கத்தில் இணைத்துக் கொண்ட அவர் தன்னுடைய சொந்தச் சேவையினால், சலியாத உழைப்பினால் தலைமை நோக்கிநடைபோட்டவர். காங்கிரஸ் கட்சியின் மாநிலத் தலைமை அவரைத் தேடி வந்தது. மாநிலத்தின் ஆட்சிப்பொறுப்பு எதிர்பாராத சூழ்நிலையில் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. அவருடைய 10 ஆண்டுக் கால ஆட்சி, தமிழகத்தின் பொற்காலம்.

அடித்தள மக்கள் சமுதாயத்தினுடைய அடித்தளத்தைத் தாங்கி நிற்கின்ற ஏழைகளும், நலிந்தவர்களும், பிற்படுத்தப்பட்டவர்களும், பின்தங்கியவர்களும், படிக்காதவர்களும், படிக்கும் துடிப்புப் பெற்றிருந்தவர்களும் காமராஜருடைய ஆட்சி, தங்கள் நலம் காக்கும் ஆட்சி எனக் கருதினர். மின்சாரம் கிராமங்களுக்குச் சென்றது. விவசாயத்தை வளர்த்தது; உணவு உற்பத்தியைப் பெருக்கியது. நாளுக்கொரு தொழிற்சாலை என மாநிலத்தினுடைய தொழில் துறை முன்னேற்றப் பாதையில் வேகமாக நடைபோட்டது. கல்விக் கூடங்களின் கதவுகள் அனைவருக்கும் திறந்துவிடப்பட்டன. இலவசக் கல்வி, சீருடை, எனப்பல திட்டங்கள் தமிழகத்தினுடைய கல்வித் தரத்தை உயர்த்தின.

பண்டித நேருவின் வேண்டுகோள் காமராஜரை டெல்லிக்கு ஈர்த்தது. அகில இந்திய காங்கிரசின் தலைவராகப் பொறுப்பேற்றவர் நாட்டின் ஜனநாயகத்திற்கும், தேசிய ஒருமைப்பாட்டிற்கும், சோசலிச சமுதாய அமைப்புக்கும் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். இந்தியாவிற்கு அன்னை இந்திராகாந்தியின் தலைமையை அடையாளம் காட்டியவர். தமிழகத்தின் தன்னிகரற்ற தலைவர் தேசத்தலைவராக உயர்ந்து நின்றார். நாட்டின் பொருளாதார வளர்ச்சியில், உணவு உற்பத்தியில் அவர் காட்டிய ஆர்வம் சிறப்புக்கு உரியது.

இந்திய ஜனநாயகம் இன்றைக்கு அவராலே வாழ்கிறது. பாரதத்தின் பிரதமரை மூன்றுமுறை தேர்ந்தெடுக்கின்ற பெரும்பொறுப்பினை ஏற்றவர் அவர். தமிழகத்தின் செயல்பாட்டுத் திறமைக்குப் பெருமை தேடித்தந்த பெருந்தலைவர் அவர். இன்று அவரை நாம் போற்றுகின்றோம். அவர் வழி நடப்போம். நாட்டைக் காப்போம்!

## புதிய சமுதாயம் அமைந்திட...

கிராமங்களுக்கு வசதிகள் செய்து தருவதற்காக அரசாங்கம் ஏராளமான பணத்தைச் செலவு செய்து வருகிறது. ஆகவே கிராமங்களில் மேலும் மேலும் முன்னேற்றம் ஏற்படும்படி பார்த்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு பஞ்சாயத்து யூனியன்களைச் சார்ந்ததாகும். பல ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றுவதன் மூலமாகவே கிராமங்களின் தேவைகள் அனைத்தையும் நிறைவேற்ற முடியும். ஆகவே, ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்ற அரசாங்கத்துடன் பஞ்சாயத்துக்கள் ஒத்துழைக்க வேண்டும்.

கோடிக்கணக்கான மக்களின் சமூகப் பொருளாதார வாழ்வில் புதியதொரு திருப்பத்தை உண்டாக்கும் பாரம் நம்மீது சுமத்துள்ளது. பொறுப்பிலிருந்து யாரும் தப்பிச் சென்றுவிட முடியாது. நாம் தான் சுமந்தாக வேண்டும். மக்களாட்சியின் அடிப்படைத் தத்துவமே அதுதான். பழைய போக்கில் இருக்க முடியாது. புதிய சமுதாயம் அமைக்க வேண்டும் என்ற மனப்பான்மை ஏற்பட வேண்டும். பழைய வழக்கத்தைவிடமாட்டேன், ஆனால் புதுவாழ்வு மட்டும் வேண்டும் என்று யாரும் சொல்ல முடியாது.

**பெருந்தலைவர் காமராஜர்**



# புகழ் மாலைகள்

'உண்மையான தலைவன் என்பதற்கு எடுத்துக் காட்டத் தக்கதோர் உதாரணம்; மக்கள் மத்தியில் உருவானதோர் தலைவன்; தான் ஏற்றுக்கொண்டுள்ள பொறுப்பை நிறைவேற்றத்தக்க ஆற்றல் கொண்ட தலைவன்; செயலில் தன்னை மறந்து ஈடுபடும் தலைவன் சிலையைத் திறக்கிறேன்.

**-பண்டித ஜவஹர்லால் நேரு**

**(காமராஜர் சிலைத் திறப்பு விழாவில்-9-10-1961)**

அரசியலில் தீர்க்க தரிசனமும், தெளிந்த கண்ணோட்டமும் கொண்டுள்ள அவர் மற்றவர்களது முயற்சி எதுவுமின்றித் தமது சுயபலத்திலேயே பல பெறற்கரிய வெற்றிகளைப் பெற்றுத்தரும் திறன் படைத்தவர்

**-டாக்டர் ராதாகிருஷ்ணன்**

அவர் அதிகம் பேசுவதில் நாட்டமில்லாதவர். செயலில் மட்டுமே தீவிர நம்பிக்கை கொண்டவர். அவர் பிரச்சினைகளை அணுகும் முறைவிதமே அலாதியானது. முக்கியத்துவம் வாய்ந்த யுத்த காலத்தில் அரிய ஆலோசனைகள் பல வழங்கியவர் காமராஜர்.

**-லால்பகதூர் சாஸ்திரி**

மகாபுருஷர்கள் தங்கள் வாழ்க்கையால் உலகத்தைத் திருத்தி நல்வழி காட்டுவார்கள். அதைத்தான் திரு காமராஜர் செய்கிறார். தாழ்ந்த வகுப்பில் பிறந்தவர்கள் எனக் கருதப்படுகிறவர்களுக்கும் சமவாய்ப்புக் கொடுக்கப்பட்டால் அவர்களும் மற்றவர்களுக்குக் குறைந்தவர்கள் அல்ல என்பதை அவர் நிரூபிக்கிறார்.

**-பாபு ஜகஜீவன்ராம்**

நம்முடைய மாபெரும் சுதந்திரப் போராட்டத்தின் மூத்த தலைமுறையின் கடைசி இணைப்புச் சங்கிலியாக அனுபவமிக்க தலைவராக அவர் விளங்கினார்.

**– திருமதி இந்திரா காந்தி**

எந்தப் பிரச்சினைக்கும் சரியான தீர்வு காணும் ஆற்றல் படைத்தவர் திரு காமராஜ். அவரது தீர்ப்பு சிலருக்கு விளங்காமல் இருக்கலாம். ஆனால் கடைசியில் காமராஜரின் தீர்ப்புத்தான் சரியென விளங்கும்.

**– சஞ்சீவ ரெட்டி**

ரஷ்ய ஆட்சியில் பொதுவுடைமைத் தத்துவம் ஏற்பட லெனின் எப்படிக் காரணமாயிருந்தாரோ அதே மாதிரிதான் இந்தியாவில், இந்திய அரசாங்க ஆட்சியில், சமதர்மம் கொள்கையாக ஏற்பட திரு காமராஜர்தான் காரணம்.

**-தந்தை பெரியார்**












காமராஜர் தமது பணிகளின் மூலம் நாட்டின் தரத்தை உயர்த்த முயன்றார்; தமிழர்களுக்கு நற்பணி ஆற்றினார்; தமிழர்கள் பெருமைப்படத்தக்க நல்ல காரியங்களைச் செய்தார்.

**-பேரறிஞர் அண்ணா**

போராடிப் போராடி வாழ்க்கையில் எதிர்நீச்சல் போட்டுக் கொண்டு தன்னை உயர்த்திக் காட்டியவர் காமராஜர்.

**– டாக்டர் எம்.ஜி.ஆர்**

# பெருந்தலைவர் படத்தொகுப்பு



மறைந்த பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களுடன்



மறைந்த பிரதமர் லால்பகதூர் சாஸ்திரி அவர்களுடன்



மறைந்த குடியரசுத் தலைவர் டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்களுடன்



மறைந்த பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களுடன்



மாஸ்டர் தாராசிங் அவர்களுடன்



இங்கிலாந்து ராணி எலிசபெத் அவர்களுடன் (ராணி சென்னைக்கு வருகை புரிந்தபோது)



ரஷ்யக் குழந்தைகளுடன்



எத்தியோப்பிய மன்னர் ஹெயில் செலாசி அவர்களுடன்



அமெரிக்கத் தலைவர் டாக்டர் மார்ட்டின் லூதர்கிங் அவர்களுடன்



முன்னாள் ரஷ்யப் பிரதமர் கோசிஜின் அவர்களுடன்



தமிழ்நாட்டு முதல்வராக 13-4-1954 அன்று பதவி ஏற்பு



மறைந்த துணைப் பிரதமர் பாபு ஜகஜீவன்ராம் அவர்களுடன்



திருமதி இந்திராகாந்தி, முன்னாள் குடியரசுத் தலைவர் நீலம் சஞ்சீவ ரெட்டி, மறைந்த குடியரசுத் தலைவர் டாக்டர் ஜாகீர் ஹுசேன், மறைந்த எகிப்து அதிபர் நாசர் ஆகியோருடன்



இராஜாஜி, சி. சுப்ரமணியம், டி. சிவசண்முகம் பிள்ளை, ஓ. பி. ராமசாமி ரெட்டியார் டாக்டர் பி. வி. செரியன் ஆகியோருடன்



ரஷ்யாவில் நடைபெற்ற சோவியத் இந்திய கலாச்சாரக் கழக வரவேற்பு நிகழ்ச்சியில் (1966)



வட இந்தியாவில் நடைபெற்ற வரவேற்பின்போது



ரஷ்ய விண்வெளி வீரர்களுடன்....



எம். கன்னியப்பன், ஆரணி சீனிவாச ராவ், ப. ஜீவானந்தம், அனந்தன் நம்பியார், முத்தையா ஆகியோருடன்....

நெஞ்சம் கலங்கவைத்த இறுதி யாத்திரை (3-10-1975)



கிரிக்கெட் விளையாட்டுக் களத்தில்....





தொண்டர்களுடன் தொண்டராக....

# நான் கண்ட காமராஜ்

**பெருந்தலைவர் காமராசருடைய வாழ்வில் – திருப்பங்கள் நிறைந்த 15 ஆண்டுக்கால அளவுக்கு-சிறப்பான பங்குபெற்ற சிலரில் மறைந்த திரு ஜி.ராஜகோபாலன் குறிப்பிடத்தக்கவர்.**

**காமராசருடைய 'மனச்சாட்சிக் காவலர்' என்று அவரைக் கூப்பிடுவதுண்டு. 'ராஜு' என்று காமராசர் நொடிக்கு நூறு தடவை கூப்பிடுவார். அகில இந்தியக் காங்கிரஸ் பொதுச் செயலாளராகவும், மத்திய அமைச்சரவையில் உதவி அமைச்சராகவும் இருந்தார்.**

**அவரது துணைவியார் திருமதி லலிதா ராஜகோபாலன் அவர்கள், பெருந்தலைவர் காமராசரைப் பற்றி எழுதியுள்ள அருமையான கட்டுரை இது. தமிழரசு இதழுக்கென்றே எழுதப்பட்டது.**

## லலிதா ராஜகோபாலன்

தமிழ்நாட்டின் அரும்பெரும் தலைவர் தியாகச்சுடர் திரு கே. காமராஜரது 86வது பிறந்தநாள் ஜூலை மாதம் 15ஆம் தேதி வருகிறது.

இவரது பிறந்தநாளை நாம் தொடர்ந்துகொண்டாடவேண்டும். ஏனெனில் தமிழ்நாட்டிற்கே அவர் முதலமைச்சராக இருந்த காலத்தில் தான் நல்வாழ்வு பிறந்தது. இதை யாரும் மறுக்க முடியாது. அரசியலில் தீவிரமாக ஈடுபட்டு, தேசியத் தலைவராகத் திகழ்ந்தாலும் நமது நாட்டு மக்கள் முக்கியமாக ஏழை எளியவர்கள், உழவர்கள், சிறு தொழில் செய்பவர்கள், காங்கிரஸ தொண்டர்கள் இவர்கள் மேம்பாட்டிற்காகப் பல அரிய சாதனை புரிந்த கர்ம வீரர்.

காமராஜை அரசியல் தந்திரவாதி, இரும்பு மனிதர், கிங் மேக்கர் என்றெல்லாம் பட்டம் சூட்டினார்கள். ஆனால் நானோ அவரை ஒரு மனிதாபிமானம் படைத்த, தன்னலமற்ற, கருணை உள்ளம் கொண்டவராகக் காண்கிறேன். எனக்கு, திரு காமராஜருடன் அருகில் இருந்து அவரது குணாதிசயங்களை அறிந்து கொள்ளும் வாய்ப்பு இருந்த காரணத்தால் தான் இவ்வாறு கூறுகிறேன்.

அவர் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவராக 1940ஆம் ஆண்டு முதல் 1952வரை இருந்த பொழுது எனது கணவர் திரு ஜி. ராஜகோபாலன் அவருக்குக் காரியதரிசியாக இருந்தார். அப்பொழுது நான் சேவாதளப் பயிற்சி பெற்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி பெண்கள்பகுதியில்இன்ஸ்ட்ரக்டராகப் பணிபுரியும் வாய்ப்பு கிடைத்த காரணத்தால் சந்தித்துப் பேசும் சந்தர்ப்பங்கள் கிடைத்தன. அதன் பிறகு தமிழக முதலமைச்சராகப் பதவியேற்ற பின், என் கணவர் பாராளுமன்ற அங்கத்தினராக இருந்தார். அப்பொழுது காமராஜ் எங்கள் இல்லத்தில்தான் தங்குவார். அவர் 'ராஜு' என்று அன்பாக அழைப்பார். 'ராஜு' இல்லாமல் ஒன்றும் செய்யமாட்டார். அவர் அங்கு தங்கின காரணத்தால் அவருக்குப் பிடித்தவை, பிடிக்காதவை, எந்த நேரத்தில் எப்படிப் பேச வேண்டுப் எல்லாமே எங்கள் குடும்பத்திற்கே தெரியுப்.

காமராசருடன் ஜி.ராஜகோபாலன்



திரு காமராஜ் பெரிய பதவி வகித்தபோதிலும் படாடோபம் இல்லாதவர். அவர் முதலமைச்சராக இருந்த காலத்தில் ஏதாவது மீட்டிங் வந்தால் சென்னையிலிருந்து தனியாகத்தான் வருவார்.

ஒரு பாதுகாப்பாளர், ஒரு காரியதரிசி கூட கிடையாது. அவருக்கு எல்லாமே என் கணவர் ராஜுதான். எதற்கும் அஞ்சாதவர். அவர் முதலமைச்சராக இருந்தபொழுது 'ஆனந்த மார்கிகள்' என்ற மத வெறியர்கள் தலைநகரில கலவரம் செய்தனர். அப்பொழுதும் கூட என் கணவர் என்ன சொல்லியும் தோட்டத்தில் கட்டில் போட்டுத்தான் படுப்பார். அவருக்குப் பாதுகாப்பாளராக என் கணவர் உடனிருப்பார்.

காமராஜர் தனியாக வாழ்ந்தவர், குடும்பத்தில் சிக்கல்கள் பிரச்சனைகள் என்ன தெரியும் என்று, ஒரு சிலர் கருதலாம். அங்குதான் அவர்கள் தப்புக் கணக்கு போடுகிறார்கள். ஒரு குடும்பம் நடத்துவது, சமாளிப்பது எவ்வளவு சிரமம் என்று நன்றாகப் புரிந்தவர். அவர் தில்லியில் எங்களுடன் தங்கும் பொழுது காலையில் பிரேக்ஃபாஸ்ட் இட்லயும் காப்பியும் தான் சாப்பிடுவார். என் கணவரைக் கூப்பிட்டு ''ராஜு, எனக்கு காலை 8 மணிக்கே பிரேக்ஃபாஸ்ட் கொடுத்து விடு, என்னைப் பார்க்க வருபவர்

களுக்குக் கொடுத்து உனக்குக் கட்டுப்படியாகாது' என்பார். ஆனால் அப்படியும் பல பத்திரிகையாளர்கள் 'ராஜு' என்று கூப்பிட்டுக்கொண்டே டைனிங் ரூமுக்கு வந்து விடுவார்கள்.




பத்திரிகையாளர்கள் என்றதும் நினைவுக்கு வருகிறது. அவர் மிகவும் விரும்பிய நண்பர்கள் பத்திரிகையாளர்கள் தான். அவரைச் சுற்றி உட்கார்ந்து கொண்டு மணிக்கணக்காகப் பேசுவார்கள். ஆனால் அவரோ சாமர்த்தியமாகக் கேள்வியைத் திருப்பிப் போட்டு அவர்கள் கருததுக்களைச் சேகரித்துக்கொள்வார்கள். பத்திரிகையாளருடன் இவ்வளவு சுமுகமாக இருந்த தலைவர்கள் வேறுயாருமில்லை என்று கூறினாலும் மிகையாகாது. குடும்பப் பொறுப்பு கொண்டவர் என்பதற்கு மறறொரு உதாரணம் சொல்கிறேன். தான் வீட்டிற்கு வெளியே போகும்பொழுது லைட், ஃபேன் அணைக்க மறக்கமாட்டார். மேலும் தான் முதல் மந்திரி என்ற சிந்தனை கொள்ளாமல், சமையல் அறைக்கு வந்து, என் தாயாரிடம் 'அம்மா வெளியே போகிறேன். கதவைப் போட்டுக் கொள்ளுங்கள்' என்று சொல்வார்.

பண்டிதநேரு மாதிரி குழந்தைகளுடன் விளையாடுவதில் மிக ஆர்வம் கொண்டவர். என் குழந்தையுடன் டைனிங் ரூமில் உட்கார்ந்து மணிக்கணக்காகப் பேசுவார். ஒரு சமயம் ஒர்க்கிங் கமிட்டி, சப்ரு ஹவுசில் மீட்டிங் நடந்தது. அதற்குக் காமராஜரும் என் கணவரும் செல்லத் தயாராயினர். அப்பொழுது என் பெண் நிர்மலா 'அப்பா நானும் வருவேன்' என்றாள். அதற்கு என் கணவர் 'உன்னையெல்லாம் உள்ளே விட மாட்டார்கள்' என்றார். காமராஜ் எனது பெண் (10 வயது இருக்கும்) கையைப் பிடித்துக்கொண்டு 'வாம்மா, உன்னைவிடலேன்னா நானும் அந்த மீட்டிங்குக்குப் போகலை' என்று அழைத்துச் சென்று உள்ளேயும் உட்கார வைத்துவிட்டார். மற்றொரு சமயம் எனது பெண் அனுராதா ஸ்கூலில் முக்கியமான ராஜா வேடம் போட்டாள். 'காமராஜ் மாமா! என் ட்ராமாவுக்கு இன்னிக்கு வாங்க' என்றாள். அதற்கு அவர், 'மீட்டிங் இருக்கேம்மா, நீ ஒன்னு பண்ணு, அந்த வேடத்தோட வா, உன்னைப் பார்க்கிறேன், என்று சொன்னதுமல்லாமல், போட்டோவும் எடுததுக் கொண்டார்.

ஒரு சமயம் திரு காமராஜ் எங்கள் வீட்டில் தங்கியபொழுது தீபாவளி நெருங்கும் நாள். என் கணவரோ 'யு.எஸ்.எலக்ஷன்' பார்வையாளராக அமெரிக்கா அனுப்பப்பட்டிருந்தார். எங்களுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. காதி பவன் சென்று வேட்டியும், அங்கவஸ்திரமும் வாங்கி வந்தோம். தீபாவளிக்கு முன்னாள் - யார் பூனைக்கு மணி கட்டுவது என்பது போல், யார் தைரியமாக அவரிடம் போய் சொல்வதென்று தெரியவில்லை. பிறகு எனது தாயார் அவர் அறைக்குச் சென்று 'நாளைக்குத் தீபாவளி, ஒரு கை எண்ணெய் வைத்துக் குளித்து, புது வேட்டி கட்டிக்கணும்,' என்றாள். அதற்கவர் 'நான் எண்ணெய் தேய்க்கிற பழக்கத்தையே விட்டு விட்டேனம்மா' என்று கூறினார். ஆனால் பெரியவர்களுக்கு மரியாதை கொடுக்கும் வகையில் எண்ணெயும் தேய்த்துக் கொண்டார். புதுசும் கட்டி தீபாவளி லேகியமும் சாப்பிட்டார்.

திரு காமராஜை எல்லோரும் படிக்காதவர், அவருக்கென்ன தெரியும் என்ற மனப்பான்மையுடன் இருந்தனர். ஆனால் நாளடைவில் அவர் நிறைந்த குடம் என்று ஒப்புக்கொண்டனர். அவர் எங்களுடன் தங்கும்பொழுது ஆங்கிலப் பத்திரிகை மட்டுமல்ல, டிஸ்கவரி ஆஃப் இந்தியா என்னிடமிருந்து வாங்கி, படித்து முடித்தார். ஒரு சமயம் ராஷ்டிரபதி பவனில் பார்ட்டியில் என் கணவர், பண்டிட்ஜி, நான், திரு காமராஜ், வெளிநாட்டுப் பிரமுகருடன் நின்று கொண்டிருந்தோம். நேரு, வெளிநாட்டுப் பிரமுகருடன் ஆங்கிலத்தில் பேசிக்கொண்டிருந்தார். பின்னர் மௌனமாக இருந்த காமராஜைப் பார்த்து 'வாட் காம்ராஜ், யூ ஸ்டில் பிரெடென்ட் யு டு நாட் நோ இங்லீஷ்' என்று சிரித்துக் கொண்டே சொன்னார்.

அரசியலிலோ காங்கிரஸ் அக்கிராசனராகவிருந்தபொழுதும் சரி, முதலமைச்சராக இருந்தபொழுதும் சரி, வடக்கேயுள்ள மாகாண முதன் மந்திரிகள் காங்கிரஸ் தலைவர்கள் அவரைக் காணவந்த வண்ணமிருப்பார்கள். ஏதாவது சிக்கலான பிரச்சினையுடன் வருகிறார்கள் என்று தெரிந்தால் 'ராஜு நீ கேட்டுண்டு உள்ளே அனுப்பு, என்பார். அதே மாதிரியாக என் கணவர் பூராவும் கேட்டுக்கொண்டு பிறகு அவர்களிடம், தலைவரிடம் நீங்க இது சொன்னால், போதுமென்று 'பிரிஃப்' பண்ணி அனுப்புவார். காமராஜருக்கு வளவளவெனச் சுத்தி வளைத்துப் பேசினால் பொறுமையிழந்துவிடுவார். அவர்கள் சென்றபின் என் கணவரைக் கூப்பிட்டு 'நீ என்ன நினைக்கிற ராஜு', என்பார். இவர் தன் கருத்தை வெளியிட்டதும் அதன்படி அவர் முடிவு எடுத்துக்கொள்வார்.

திரு காமராஜர் கர்மவீரர். தனக்கென வாழாமல் பிறர் சேவையிலேயே ஈடுபட்டவர். தமிழ்நாட்டில் தொண்டராயிருந்து அகில இந்தியப் புகழடைந்தவர். எளிய உடை, எளிய வாழ்க்கை, சூழ்நிலைக்கேற்ப சமாளிக்கும் தன்மை இவற்றிற்கு மேலாக மனிதாபிமானம் கொண்ட தலைவர். காந்தி, சத்திய மூர்த்தி சீடராக இருந்ததுமட்டுமல்லாமல், காந்தியடிகளின் எளிய வாழ்க்கையையே கடைசி மூச்சு வரை கடைப்பிடித்து நம் நாட்டின் எளிய, நேர்மையான மனிதனாக வாழ்ந்தவர் என்றால், அது காந்திக்குப் பிறகு காமராஜ்தான் என்றும் சொல்ல வைத்துவிட்டார்.

திரு காமராஜ் மகாத்மா காந்தி போல் பெண் குலத்தின் முற்போக்குக்காகப் பாடுபட்டவர். அவர் இருக்கும்பொழுது தான் பெண்கள் பிரதிநிதித்துவம் பாராளுமன்றத்தில் 8 இல் இருந்து 10 ஆயிற்று. அவர் நாகர்கோவில் தொகுதியில் நிற்கும்பொழுது திருமதி மஞ்சுபாஷினி, சரோஜினி வரதப்பன், இந்திரா ராமதுரை, டி.என்.அனந்தநாயகி, அம்மு சுவாமிநாதன், டி.டி.கே., நான், எல்லோரும் ஒரு மாதம் நாகர்கோவிலில் கேம்ப்பு செய்து தீவிரமாகப் பிரச்சாரத்தில் ஈடுபட்டோம். அப்பொழுது எங்களுக்குத் தங்குவதற்கு ஒரு வீடு ஏற்பாடு செய்தார். தினமும் அங்கு வந்து 'என்னம்மா எல்லாம் சௌகரியமா இருக்கா? சாப்பாடு நல்லா இருக்கா?' என்று விசாரித்துப் போவார்.

திரு காமராஜ் அளவுடன் பேசி அபரிமிதமாகச் செயலில் காட்டிய உத்தமர். 'பார்க்கலாம்' என்று காமராஜருக்குப் புனைபெயரே வைத்துவிட்டார்கள். ஆனால் அந்த சொல்லில் எவ்வளவு பொருள் அடங்கியுள்ளது. 'செய்கிறேன்' என்று சொல்லி செய்து முடியாவிட்டால் அதைவிடப் பார்க்கலாம்' என்று சொல்லி செய்து முடித்தால்- இதுவே அதன் தத்துவம்.



# தலைவரின் தன்னேரில்லா அணுகு முறை

—ஆர். குழந்தைவேலு,
இ.ஆ.ப., (ஓய்வு)

தலைவர் காமராஜ் அவர்கள், தமக்குப் பிடிக்காதவர்கள் என்றாலும் அவர்களுடைய தியாகத்தை என்றும் பாராட்டும் பண்பு படைத்தவர்.

காமராஜ் அவர்கள் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவராக இருந்த காலம் அது. அன்றைய சென்னை மாகாணத்தில் தமிழகத்துடன் ஆந்திர மாநிலத்தின் சில பகுதிகளும், கருநாடக மாநிலத்துடன் - கேரளத்துடன், இப்போதிருக்கும் சில பகுதிகளும் இருந்தன. திரு. காமராஜ் அவர்கள் தலைவராக இருந்தபொழுது தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் துணைத் தலைவராக இருந்தவர் திருமதி ருக்மணி லட்சுமிபதி அவர்கள். அவர் திரு பிரகாசம் அமைச்சரவை அமைத்தபொழுது அதில் சேர்ந்து அமைச்சராகிவிட்டார். காமராஜ் உட்பட அது பலருக்குப் பிடிக்கவில்லை.

இதைக் காரணமாக வைத்துக் கொண்டு சிலர் காமராஜரிடம் அந்த அம்மையார் பற்றி வசை பாடிப் பேச முற்பட்டபொழுது வந்ததே அவருக்குக் கோபம்.

'நாம யாருய்யா அந்த அம்மாவைக் குறை சொல்லிப் பேச, நமக்கு என்ன யோக்கியதை இருக்கு..அந்த அம்மா செய்திருக்கும் தியாகத்துக்கு நாம் கால்தூசுகூடப் பெற மாட்டோம். இப்படியெல்லாம் பேசக்கூடாது' என்று கடிந்து கொண்டார்.

யாராக இருந்தாலும் அவர்கள் செய்த தியாகங்களை மதித்துப் போற்றும் அரசியல் நாகரிகத்தைக் கொள்கையாகக் கொண்டிருந்தார்.

பிரச்சினைகளை தலைவர் காமராஜ் அணுகும்முறை மிகவும் எளிமையானது. எடுத்துக்காட்டாக ஒரு நிகழ்ச்சி-

நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்துக்கு சோவியத் நாட்டிலிருந்து எந்திரங்கள் வரவிருந்தன. அந்த எந்திரங்களைச் சென்னைத் துறைமுகத்திலிருந்து எப்படி எடுத்துச் செல்வது என்பதில் பெரிய சிக்கல். சென்னையிலிருந்து எப்படி சாலை வழியாக எடுத்துச் செல்ல முடியும்? மிகவும் பளுவான யந்திரங்கள் அவை. வழியில் உள்ள பாலங்களில் அவைகளை எடுத்துச் செல்ல முடியுமா? என்பதில்தான் சிக்கல். இது ஓராண்டுக் காலத்துக்கு மேல் தீர்க்க முடியாததாக இருந்து வந்தது.

அப்பொழுது மத்திய அரசில் வர்த்தக அமைச்சராக இருந்தவர் திரு டி. டி. கிருஷ்ணமாச்சாரி அவர்கள். நமது மாநிலத்தில் தொழிலமைச்சராக இருந்தவர் திரு ஆர்.வெங்கட்ராமன் அவர்கள்.

தொழிலமைச்சர் கூட்டிடும் கூட்டத்தில் நமது பொதுப்பணித்துறையினரும் பிறரும் எந்திரங்களை, எப்படி எடுத்துச் செல்ல முடியும் என்பதில் பெரும் ஐயப்பாடுகளை எழுப்பிய வண்ணம் இருந்தனர். இடையில் கடலூர் துறைமுகத்துக்கு அந்த எந்திரங்களைக் கொண்டுவந்து அங்கிருந்து எடுத்துச் செல்ல முடியுமா என்று ஆலோசிக்கப்பட்டது. கடலூர் துறைமுகத்தில் கடலின் தொலைவில் கப்பலை நிறுத்தி எந்திரங்களை எடுத்துவர இயலாது என்று முடிவு செய்யப்பட்டு, அதுவும் கைவிடப்பட்டது. மத்திய வர்த்தகத்துறை அமைச்சரும் விரைவில் இதை முடிவு செய்யுங்கள் என்று அடிக்கடி கேட்டுக் கொண்டிருந்தார். இது முதல் அமைச்சர் காமராஜ் அவர்களின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. அவர் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்யச்சொன்னார். திரு டி.டி.கே. அவர்களும் நேரில் வந்து பேசுவதாகவும் தெரிவித்திருந்தார். அவர் வருவதற்கு முன்பாகவே இந்தக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

'முடிந்தால் நாம் செய்வோம்; முடியாவிட்டால் வேறு மாநிலத்திற்கு எங்கு பயன்படுகிறதோ அந்த மாநிலத்துக்கு இந்த எந்திரங்களை அனுப்பச் சொல்லி விடுவோம்' என்ற முடிவுடன்தான் முதலமைச்சர் காமராஜர் கூட்டத்திற்கு வந்திருந்தார்.

கூட்டம் தொடங்கியது.

முதலமைச்சர் காமராஜரிடம், ஏன் அவைகளை நமது சாலைகளில் எடுத்துச் செல்ல முடியாது என்பதற்கான காரணங்களை விளக்க முயன்றார்கள் எஞ்சினியர்கள்.

முதலமைச்சர் சொன்னார். அவைகளை எப்படி எடுத்துச் செல்ல முடியும் என்பதற்கான யோசனைகளைச் சொல்லுங்க..... நம்ம எஞ்சினியர்களுக்கு இல்லாத

**இக்கட்டுரையாசிரியர் திரு. ரா. குழந்தைவேலு அவர்கள் சிறந்த தேச பக்தர். அரசுப் பொறுப்பில் பல துறைகளில் பணியாற்றிய நல்ல நிர்வாகி. பெருந்தலைவர் காமராசரின் அணுகு முறைகளை அடையாளம் காட்டுகிறார்.**

திறமைகள் வேறு எங்கே இருக்குது? நாமதான் நம்மைவிட மற்றவர்கள் கெட்டிக்காரர்கள் என்று நினைச்சு ஏமாந்திடுறோம். நம்ம எஞ்சினீயர்கள் நினைச்சா எதையும் சாதிப்பாங்க.... இப்ப என்ன செஞ்சா அந்த எந்திரங்களைக் கொண்டு செல்ல முடியும் என்று சொல்லுங்க'' என்றார்.

ஒருவர் எழுந்து பாலத்தை வலுப்படுத்த என்னென்ன செய்யவேண்டும் என்று சொல்ல முயன்றார்.

மற்றொருவர் 'நான்கு நாட்கள் டயம் கொடுங்கள், எல்லாவற்றையும் விவரமாகத் தருகிறோம்' என்றார்.

முதலமைச்சர் காமராஜ் பதில் சொன்னார். 'நான்கு நாள் என்ன, பதினைந்து நாட்கள் எடுத்துக்குங்க, இவ்வளவு நாள் காத்திருக்கலியா? நான் டி.டி.யை (திரு டி.டி.கே) இரண்டு வாரம் கழிச்சே வரச்சொல்றேன்.... அதற்குள் தயார் பண்ணிக்கொடுங்க...''

அவர் சொன்ன மாதிரியே திட்டம் தயாரிக்கப்பட்டு - பாலங்கள் வலுப்படுத்தப்பட்டுச் சாலைகள் அகலப்படுத்தப்பட்டன.

நாம் இசைவு கொடுத்த பிறகு தான் சோவியத் நாட்டிலிருந்து எந்திரங்கள் எடுத்து வரப்பட்டு நெய்வேலி சென்றடைந்தன.

ஓராண்டுக் காலமாக முடியாமல்-தீர்வு காணப்படாமல் இருந்ததை எளிமையாகத் தீர்த்தார் முதலமைச்சர் காமராஜ்.

நிருவாகப் பிரச்சினைகள்-இப்படி எத்தனையோ பிரச்சினைகளை எளிமையாகத் தீர்த்திருக்கிறார்.

சென்னை மாநில அரசின் சார்பில் 'சுடர்' என்ற தீப்பெட்டி தயாரிக்கப்பட்டு வந்தது. வர்த்தக ரீதியில் பெரிய நிறுவனம் தயாரித்த தீப்பெட்டியுடன் சுடரை வணிகச் சந்தையில் போட்டி போட்டு விற்க முடியவில்லை.

அப்பொழுது இது குறித்து ஆராய நடந்த கூட்டத்தில் பலர் பல காரணங்களைக் கூறினார்கள்.

அவைகளைப் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்த காமராஜ், அந்தத் தொழிலில் பிரபலமாக விளங்கும் நிறுவனம் தயாரித்த தீப்பெட்டியை எடுத்து ஒரு குச்சியைக் கொளுத்தினார். அது முழுவதுமாக எரிந்தது. 'சுடர்' தீப்பெட்டியை எடுத்துக் கொளுத்தினார். அந்தத் தீக்குச்சி எரிஞ்சதும் நின்றது. உடனே காமராஜ் அவர்கள் 'வித்தியாசம் தெரிகிறதா?' என்று கேட்டார்.



'அந்தக் குச்சியில் ஓர் இரசாயனக் கலவையைத் தடவுகிறார்கள்' என்று ஒருவர் பதில் சொன்னார்.

'நம்ம ஊரில் அடுப்புப் பற்ற வைக்க மட்டும் தீப்பெட்டி பயன்படுத்தப்படவில்லை. அது முழுவதுமாக எரிய வேண்டும் என்று நினைக்கிறார்கள், அதைச் செய்யுங்கள், என்றார்.

தியாகத்தை மதிக்கும் தியாக சீலர் காமராஜர்.

அது ரேஷன் காலம்—

ஒரு சிற்றூரில் பொதுக் கூட்டம்.

அந்த ஊரில் உள்ள முக்கிய புள்ளி ஒருவர் வீட்டிற்குச் சென்றுவிட்டு அவரது உபசரிப்பை ஏற்ற பிறகு எட்டரை மணிக்குக் கூட்டம்.

கூட்டத்தில் பெட்ரோமாக்ஸ் விளக்குதான்; 'மைக்' கூடக் கிடையாது. நல்ல இருட்டு நேரம். திரு காமராஜ் பேசத் தொடங்கியதும் மூலையில் இருந்து ஒரு குரல் எழுந்தது. பெரிய புள்ளியின் உபசரிப்பை ஏற்றதற்குக் கண்டனக் குரல் அது.

'கறுப்புச் சந்தை ஒழிக'-என்று அந்தக் குரல் ஒலித்தது.

காமராஜ் பேச்சை நிறுத்தினார். கூட்டத்தின் மூலையில் இருந்த உருவத்தைப் பார்த்துக் கேட்டார்.

''உனக்கு எவ்வளவு நாளா என்னைத் தெரியும்?''

'முப்பது வருஷமா' என்று பதில் வந்தது.

'அப்புறம் என்னாண்ணே உட்காரு'

காமராஜர் சொன்னபடி அந்த உருவமும் உட்கார்ந்தது.

பிறகு தலைவர் காமராஜ் பேசினார், கூட்டம் முடிந்தது. கூட்டத்தில் குரலெழுப்பிய அந்த ஆளுக்கு எந்தப் பதிலும் சொல்லவில்லை அவர். சென்னை நோக்கிக் காரில் திரும்பி வந்து கொண்டிருந்த பொழுது, ஒருவர் தலைவர் காமராஜரைக் கேட்டார்.

''நீங்கள் வந்து.....

''கூட்டத்தில் சத்தம் போட்ட ஆளுக்குப் பதில் சொல்லலேயே என்று கேட்கிறீங்களா? ஆமாம், அந்த ஆள் சத்தம் போட்டது நியாயம் தானே'—என்ற காமராஜர் விவரமாகச் சொன்னார்.

''அந்த ஆள் ஒரு தியாகி. சிறைக்குச் சென்றவர். எனக்கு 30 வருஷமா தெரியும். நம்மை இந்த ஊரில் வரவேற்ற பெரியபுள்ளி ஒழுங்கா நெல்லை ரேஷனுக்குக் கொடுப்பதில்லை. அந்த ஆளுக்கும் இந்தத் தியாகிக்கும் ஆகாது. இந்தத் தியாகியை விலைக்கும் வாங்க முடியவில்லை. இந்தத் தியாகி ஏதோ கடை வைத்துக் கொண்டு இருக்கிறார்.

'அப்புறம் ஏன் அந்தபெரியபுள்ளி வரவேற்பை நாம ஏற்றுக் கொள்ளணும்னு கேட்கிறீங்களா? நாம இங்கே வர்றோம்ன்னு இந்தத் தியாகிக்குத் தெரிஞ்சா, கடன் வாங்கித்தான் செலவு செய்வார். அப்போ இந்த பெரிய புள்ளிக்கிட்ட போய்த்தான் கடன் வாங்குவார். அந்தத் தியாகி கடன்பட்டு தவிக்கிறதை நான் விரும்பலே! அதே நேரத்திலே அவரோட தொண்டுக்கு நான் என்றைக்கும் மதிப்புத் தர்றவன்! அது அவருக்கே தெரியும். இன்னும் மூன்று நாளில் அங்கே நம்மை வந்து பார்ப்பார், பாருங்க' என்று சொல்லிப் பேச்சை முடித்தார்.

தலைவர் காமராஜர் சொன்னபடி அந்த ஆள் மூன்றாவது நாள், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி அலுவலகத்துக்கு வந்துவிட்டார்.

தியாகிகளை மதிக்கும் பண்பு நலம் உள்ளவர். மூலாதாரமான கொள்கையில் - தனது இலட்சியப் பிடிப்பிலிருந்து பிறழாத மனிதாபிமானமிக்க தலைவர் காமராஜர்.

நிருவாகத் துறையில் பல சிக்கல்களை எளிமையாகத் தீர்த்த பெருமை உண்டு. அடித்தளத்திலிருந்து தனது தொண்டுணர்வால் வளர்ந்த அந்தத் தலைவர் எந்த நிலையிலும் மனிதாபிமானத்துடன் நடந்து கொண்ட மகத்தான தலைவர்.

# மகத்தான யதார்த்தவாதி



**சிறு சிறு சம்பவங்களில்கூட முன்யோசனை-கூர்த்த மதி இவற்றைக்காமராஜர் எப்படிப் பயன்படுத்தினார் என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகளைக் கட்டுரையாசிரியர் தருகிறார்.**

"எல்லோருக்கும் பகல் சாப்பாடு பத்துமணிக்கு! போய் எடுப்பு சாப்பாடு கொண்டுவரச் சொல்'' என்று காமராசர் உத்தரவிட்டார்.

வெளியூர் சுற்றுப் பயணங்களின் போது காலை சிற்றுண்டி. பகல் உணவு பிற்பகல் 2 அல்லது 3மணி ஆகும். இதுதான் வழக்கம்.

ஆனால் காலை 10 மணிக்கே சாப்பாடு கொண்டு வரச் சொன்னது ஏன்? ஒருவருக்கும் புரியவில்லை.

சேலம் பயணியர் விடுதி. 1946 ஜனவரி என்று நினைவு. காமராஜருடன் வழக்கமாக இருக்கிறவர்களைத் தவிர குறிப்பிட்ட சிலர் இருந்தனர். திருச்செங்கோடு டி. எஸ்.பட்டாபிராமன், எஸ்.எஸ். மாரிசாமி, சேலம் மாரியப்பன், சேலம் கந்தசாமி பிள்ளை ஆகியோர். கடலூரில் இருந்து காமராஜரைப் பார்க்க திரு எஸ்.ஏ.தெய்வநாயகய்யா போன்ற காங்கிரஸ் தலைவர்கள் சேலம் வந்திருந்தனர். அவர்களோடு நானும் சென்றிருந்தேன்(அப்போது எனக்கு வயது 15 தான்)

சாப்பாடு வந்தது. சாப்பிட்டு முடிந்தபின் காமராசரிடம் கலகலப்பு திரும்பியது. சற்று நேரத்தில் விலை உயர்ந்த கார் ஒன்று வந்து நின்றது. அந்தக் காரில் இருநது இறங்கிய ஒருவர் ஒரு கவரை காமராஜரிடம் கொடுத்தார். காமராசர் அதை வாங்கி வைத்துக் கொண்டு 'சொல்லி அனுப்புகிறேன், நீங்கள் போகலாம்' என்று வந்தவரை அனுப்பிவிட்டார். ஆனாலும அந்தக் 'கவர்' பிரிக்கப்படாமலே இருந்தது.



சில நிமிடங்கள் கழித்து அருகிலிருந்தவர்கள் கேட்டார்கள். ''பகல் 2 மணியானாலும் சாப்பிட வர மாட்டீர்கள். இன்றைக்கு காலை 10 மணிக்கு எடுப்புச் சாப்பாடு கொணடுவரச் சொலலி அவசரப் படுத்தியது என்?'' என்று கேட்டார்கள். காமரார்சர் முகத்தில் புன்னகை அரும்பிடச் சொல்லலானார்.

''இப்ப எலெக்ஷன் வருதே, தியாகம் பண்ணின காங்கிரஸ்காரங்களைப் பின்னுக்குத் தள்ளிட்டு புது ஆசாமிங்க இடம் பிடிக்கவர்றாங்க. சேலத்திலே கந்தசாமி பிள்ளையை நிறுத்துறதுங்கற முடிவோட நான் இருக்கேன்.. இப்போ பெரிய கார்லே கடிதாசி அனுப்பிச்சாரே! அவரு பெரிய பணககாரரு. அவரும் சேலத்திலே 'சீட்' கேக்கறாரு. அதுக்கு என்னை அவரு வீட்டுக்கு சாப்பிடக் கூப்பிடறாரு. அவரு வீட்டுச் சாப்பாட்டையும் சாப்பிட்டு சீட்டும் கொடுக்க முடியாதுன்னு

**—ஆர். சீனிவாசமூர்த்தி**

சொன்னா நல்லாயிருக்குமா? அதனாலே தான் பகல் பத்துமணிக்கே சாப்பாட்டை முடிச்சிக்கிட்டேன். இப்ப இந்தக் கவரை உடைச்சுத் திறந்து படியுங்க'' என்று கவரைக் கொடுத்தார்.

அதைத் திறந்து உள்ளே இருக்கிற கடிதத்தைப் படித்தார்கள். 'இன்று பகல் உணவுக்கு என் வீட்டுக்கு வரவேண்டும். அப்போது தேர்தல் பற்றிப் பேசலாம் என்று அதில் கண்டிருந்தது. (அவ்வாறு கடிதம் எழுதியவர் எஸ்.பி.ராமசாமி என்கிற தனவந்தர். பின்னாளில் மத்திய அமைச்சராகவும் இருந்தார்).

காமராஜருடைய கூர்மையான மதிநுட்பம கண்டு நாங்கள் அசந்து போய்விட்டோம். பின்னர் 1946ம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற தேர்தலில் சேலம் கந்தசாமிப் பிள்ளையே வெற்றி பெற்றார் என்பது நினைவில் கொள்ளத்தக்கது.

தென்னார்க்காடு மாவட்டம் கடலூர் தொகுதியில் 1946 தேர்தலில் எஸ்.ஏ.தெய்வநாயகய்யா என்ற தேசபக்தர் போட்டியிட்டார். நீலன் சிலை சத்தியாக்கிரகம், நாகபுரி கொடிப் போராட்டம், உப்பு சத்தியாக்கிரகம் என்று பல போராட்டங்களில் கலந்து கொண்டு பல ஆண்டுகள் சிறையில்

கழித்த தியாகச் செம்மல் அவர். அத்தகைய தியாகியைச் சட்டமன்ற தேர்தலுக்கு நிறுத்துவதற்கும் கட்சியில் எதிர்ப்பு இருந்தது. தேர்தலில் எஸ்.ஏ.தெய்வநாயக அய்யாவை எதிர்த்தவர் எஸ்.எஸ்.ராமசாமி படையாச்சி. கடும்போட்டி. தெய்வநாயகத்துக்காகப் பிரச்சாரம் செய்ய காமராசர் வந்தார். கடலூர் ரயில் நிலையத்தில் இறங்கிய உடனே காமராசர் கேட்ட முதல் கேள்வி. ''ஏம்ப்பா தெய்வநாயகம்! பணத்துக்கு என்ன பண்றே'' என்பதுதான். சுற்றுப்பயணம் முடிந்து புறப்படும்போது சில நூறு ரூபாய் நோட்டுக்களைத் தெய்வநாயகத்திடம் கொடுத்தார். ''ஏதாவது செலவுக்கு வச்சிக்கோ'' என்றார். தியாகி தெய்வநாயகத்தின் கண்கள் கண்ணீரால் நிரப்பின.

அந்த 1946 தேர்தலின்போதே பலர் முண்டியடித்துக்கொண்டு காங்கிரசில் இடம் தேடினர். டில்லியில் கூடிய அகில இந்திய காங்கிரசின் பார்லிமெண்டரி போர்டு (ஆட்சிமன்றக் குழு) தான் வேட்பாளர்களை முடிவு செய்யவேண்டும். அவ்வகையில் ஓர்ருவர் சீட் பெற்றுவிட்டனர். எதிர்க்கோஷ்டியினர் பதட்டமடைந்து காமராசரிடம் முறையிட்டனர். காமராசர் டில்லியிலிருந்து திரும்பி விட்டார். பார்லிமெண்டரி போர்டு ஒரு முடிவு செய்த பிறகு அதை எதிர்ப்பது சரியல்ல என்பது காமராசரின் கருத்து. தப்னமச் சந்திக்க வந்தவர்களிடம் அவர் சென்னார். ''படேல் மாதிரி பெரிய பெரிய' தலைவர்களை எல்லாம் போய் கேள்வி கேட்கச் சொல்றியா? அவங்க முடிவு எடுத்தா நாம எல்லாம் ஏத்துக்கணும்'' என்று மற்றவர்களை வற்புறுத்தினார்.

தேசீயத் தலைவர்களை அவர் பயபக்தி விசுவாசத்தோடு மதிப்பார். அவர் முன்னால் ஒரு சிறுவார்த்தை சொல்லிவிட்டு யாரும் தப்பித்துவிட முடியாது.

சென்னை அண்ணாசாலையில் நரசிங்கபுரம் தெருவில் உள்ள ஒரு சிறு கட்டடத்தில் தான் அப்போது தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி இருந்தது. கீழ்தளத்தில் சென்னை மாவட்ட காங்கிரஸ் கமிட்டி இருந்தது.

மேலே இருக்கிற தமிழ்நாடு காங்கிரஸ் அலுவலகத்தில் காமராசர் ஊரில் இருக்கிற நாட்களில் நல்ல கூட்டம் இருக்கும். காமராசருடைய மனச்சாட்சிக் காவலர் என்று அழைக்கப்பட்ட ராஜு என்னும் ஜி.ராஜகோபாலன் தமிழ்நாடு காங்கிரஸ் அலுவலகத்தின நிர்வாகி. அவரைப் போலவே படித்துப் பட்டம் பெற்றுச் சிறை சென்று திரும்பிய தேசீய வாலிபர்கள் காமராசரை மொய்த்தவண்ணம் இருப்பர். அப்பட்டமாக - தூய்மையாக - தியாக ஒளியுடன் காமராசர் திகழ்வார்.

தொண்டர் என்ற நிலையிலிருந்து தலைவராக - மாமனிதராக மாறி வருகிற ஒரு வரலாற்றின் எந்த மாறுதலையும் அவரிடம் காண முடியாது.

மிகவும் சாமானியரைப் போன்ற தோற்றம் - நடை-உடை-பாவனை, உள்ளமும் அப்படியே!

அவர் ஊரில் இல்லாத நேரம். அவரது அறையில் சிலர் புகை பிடித்துவிட்டு சிகரெட் துண்டுகளை அப்படியே எறிந்துவிட்டுப் போய் விட்டார்கள். மறுநாள் காலை காமராசர் வந்ததும் அலுவலக அறையில் சிகரெட் துண்டுகளைப் பார்த்தார். யாரிடமும் எதையும் கேட்கவில்லை. சத்தம் போடவுமில்லை. அவரே குனிந்து சிகரெட் துண்டுகளைப் பொறுக்கி எடுத்து ஒரு காகிதத்தில் வைத்து வெளியே எறிந்தார். அவ்வளவுதான். அதற்குப் பிறகு அவருடைய அறையில் யாரும் புகைபிடிப்பதில்லை.

நரசிங்கபுரம் தெரு காங்கிரஸ் அலுவலகத்தில்தான் வெளியூரிலிருந்து வருகிற பல காங்கிரஸ்காரர்கள் தங்குவார்கள். காலையில் வந்து இறங்கி குளித்துவிட்டு துணியைக் காயப்போட்டு விட்டுச் சென்றுவிடுவார்கள். காமராசரின் அலுவலக அறை இருந்த மேல்மாடியில் கழிவறை வசதி இல்லை. அதற்காக காமராசர் கீழேதான் வருவார். அப்படி வரும்போது முற்றத்தில் காயப் போட்டிருந்த துணிகளில் ஈரத்தால் சொட்டு சொட்டாக தண்ணீர் வடிந்து கொண்டிருக்கும். இதைப்பார்த்த காமராசர் அந்தத் துணிகளையெல்லாம் எடுத்து நன்றாகப் பிழிந்து காய வைத்துவிட்டு வருவார்.



காமராசர் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக இருந்தபோது, அவர் பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்த நாகர்கோயில் சுப்பிரமணியப் என்பவர் ஒருமுறை உண்ணாவிரதம் இருந்தார். நரசிங்கபுரம் தெரு காங்கிரஸ் அலுவலகத்தின் முன்னாலேயே இந்த நிகழ்ச்சி நடந்தது. காமராசரும் அப்போது காங்கிரஸ் அலுவலகத்தில் இருந்தார். அன்று மாலை ஆனதும் ஒரு சில முக்கிய காங்கிரஸ்காரர்கள் வந்து நாகர்கோயில் சுப்பிரமணியத்தைப் பார்த்து ''இதெல்லாம் ரொம்ப கேவலம்'' என்று சொல்லி உண்ணாவிரதத்தை நிறுத்துமாறு செய்தனர்.

எல்லாம் முடிந்தது. அந்த நாகர்கோயில் சுப்பிரமணியம் நரசிங்கபுரம் தெருவின் முனையில் தனியாக நின்று கொண்டிருந்தார்.

உண்ணாவிரதச்செய்திகள் பற்றி சுவையானவிவரங்களைப்பரிமாறிக் கொண்டிருந்தார்கள். காமராசர் அப்போது இடைமறித்துச் சொன்னார். ''போய்ப் பாருங்க அவன் இங்க தான் எங்காவது நின்னுக்கிட்டிருப்பான். ஊருக்குப் போகக் காசிருக்காது! விசாரிச்சு ரயிலுக்குக் காசு கொடுத்துட்டு வாங்க' என்றார்.

தியாகம் - எளிமை - உழைப்பு இவை அனைத்தும் கொண்டவர் என்பதுடன் மகத்தான யதார்த்தவாதி என்பதுதான் காமராசருடைய தனித்தன்மை.



# ஊரக வளர்ச்சித் திட்டப் பணிகளில் முதலிடம் பெறும் மதுரை மாவட்டம்!

மதுரை மாவட்டத்தில் மூன்று வருவாய்க் கோட்டங்களும், ஒன்பது வட்ட வருவாய்க் கோட்டங்களும், ஏழு ஊராட்சி ஒன்றியங்களும் உள்ளன. இம்மாவட்டத்தில் ஊரக வளர்ச்சிப் பணிகளைப் பார்வையிடுமுன் கூடுதல் மாவட்ட ஆட்சித் தலைவரும், திட்ட அலுவலருமான ஆர்.என்.சவுபே அவர்களைச் சந்தித்தோம். ''இருபதம்சத் திட்ட செயலாக்கத்தில் 1987-88ல் முதன்மை பெற்ற மாவட்டமாகத் திகழ்வது மதுரை மாவட்டம்'' என்று அவர் நம்மிடம் பெருமையுடன் குறிப்பிட்டார்.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்,

தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம்,

ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்புத் திட்டம்,

—இவை ஊரகவளர்ச்சியைமைய மாகக் கொண்டு செயல்படும் திட்டங்கள் ஆகும். இத் திட்டங்களின் கீழ் சிறுதொழில்கள் அமைத்தல், குடிநீர் வசதியளித்தல், குடும்ப நலம் காத்தல், சாண எரிவாயுக் கலம் அமைத்தல், சமூக நலக் காடுகள் உருவாக்குதல், ஆதிதிராவிடர் வீட்டுவசதித் திட்டத்தைச் செயல்படுத்துதல் -ஆகிய பல திட்டங்கள் அடங்கும்.

இவை அனைத்தின் செயல்பாட்டிலும் மதுரை மாவட்டம் முனைப்புடன் முன்னேறியிருப்பதை நாம் நேரில் கண்டோம். உதவி திட்ட அலுவலர் திரு ஏ.ஆர்.மகாதேவன் நமக்குக் கொடுத்த விளக்கங்களும் மனநிறைவு அளித்தன.

### சாண எரிவாயுத் திட்டம்

குறிப்பாகச் சொல்வதானால், தாழ்த்தப்பட்டோர் மேம்பாட்டில் இம்மாவட்டம் தனிக்கவனம் செலுத்தியிருக்கிறது.

சாண எரிவாயுத் திட்டம் மதுரை மாவட்டத்தில் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டிருக்கிறது. 1987-88ல் மட்டும் 2,243 கலன்கள் அமைத்திருக்கிறார்கள். அதேபோல, புகையில்லா அடுப்புகள் 12,510 அமைத்துள்ளனர்.

மதுரை மாவட்டத்தில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தை நிறைவேற்ற ரூ. 242 இலட்சம் ஒதுக்கீடுசெய்யப்பட்டது. அதன் மூலம் 14 ஆயிரத்து அறுநூற்று நாற்பத்து நான்கு குடும்பங்கள் பயனடைந்துள்ளன.

### சமூகக் காடுகள்

ரூ. 382 இலட்சம் இலக்கில் தேசீய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் நிறைவேற்றப் பட்டதில் 1389 வீடுகள் கட்டப் பட்டுள்ளன. பன்னிரண்டு இலட்சம் ரூபாய் இலக்கில், ஊரக வேலையற்றோர் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் ஆயிரத்தி நூற்றைந்து வீடுகள் கட்டப்பட்டுள்ளன. ரூ. 121 இலட்சம் ஒதுக்கீட்டில் சமூகக்காடுகள் திட்டம் நிறைவேற்றப்பட்டதில்,81 சதவிகிதம் சாதனை படைக்கப்பட்டிருக்கிறது.

நிறைவேற்றப்பட்ட மாவட்ட வளர்ச்சித் திட்டங்கள் பற்றி ஓரளவுக்குக் கேட்டறிந்த நாம், நிறைவேறி வரும் திட்டங்கள் பற்றி

ஒருங்கிணைந்த சாண எரிவாயுக் கலன்



சித்திரெட்டிபட்டி சாண எரிவாயு அடுப்பில் சமையல்



# சாண எரிவாயுக் கலன் மூலம் மக்கள் ஒற்றுமை...



தனக்கன்குளம் ஆதிதிராவிடர் வீடு கட்டும் பணி

நேரில் கண்டறிவதற்காகத் திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியத்திற்குப் புறப்பட்டோம்.

தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் (1988-89) ஆதிதிராவிடர் வீடுகள் 48 கட்டுவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. திட்ட மதிப்பீடு 3இலட்சத்து 45 ஆயிரத்து 600 ஆகும். திருப்பரங்குன்றம் ஒன்றியத்தைச் சேர்ந்த தனக்கன்குளத்தில் கட்டப்பட்டு வரும் அந்த வீடு ஒவ்வொன்றுக்கும் 7 ஆயிரத்து 200 ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. 16x10 அளவில் கட்டப்படும் அந்த வீடுகள் அழகுற அணிவகுத்துள்ளன. குடியிருக்கப்போகிறவர்களே வீடுகட்டும் பணியில் ஈடுபட்டிருப்பதால் அவர்கள் உற்சாகத்தோடு பணியாற்றுவதை நம்மால் காணமுடிந்தது.

''சொந்த வீட்ல குடியிருக்கப் போறம்கிற மகிழ்ச்சி எங்களுக்கு இல்லாதிருக்கும்களா? இது உள்ளபடியே உன்னதமான திட்டங்க'' என்றார் அந்த புது வீடுகளின் ஒரு வீட்டுக்குச் சொந்தக்காரர் ஒருவர்.

**வீட்டு வசதி**

காங்கிரஸ் கட்சிக்காரரான தனக்கன்குளம் ஊராட்சி மன்றத் தலைவர் திரு எம்.ராசுத்தேவரிடம் இத்திட்டம் பற்றி நாம் கேட்டபோது அவர் தெரிவித்ததாவது:

''இந்தத் திட்டத்துக்கு மக்கள் கிட்ட ரொம்ப நல்ல வரவேற்பு இருக்குதுங்க. வீட்டுக்கு வீடு விளக்கு போட்டுத் தர்றம். தண்ணி வசதி இருக்கு. எல்லா வீட்டுக்குமா ஒரு சாவடிவேற கட்றம். இந்த மாதிரி இன்னும் ஐம்பது வீடு தேவைப்படுது-கட்டித் தரனும்னு எழுதிக் கேட்டிருக்கம்.''

அதே ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த தோப்பூருக்குச் சென்ற நாம், 15 ஏக்கர் பரப்பளவில் அங்கே பசேலென்று படர்ந்துள்ள சமூக நலக் காடுகளைப் பார்த்தோம். கருவேல மரங்கள் தழைத்து வளர்ந்திருந்தன.

நம்மை வரவேற்ற தோப்பூர் ஊராட்சி மன்றத் தலைவர் திரு எஸ்.வீரபத்திரன், நாற்பதாயிரம் ரூபாய் திட்டமதிப்பீட்டில், தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் கட்டிமுடிக்கப்பட்டுள்ள சமுதாயக் கூடத்திற்கு நம்மை அழைத்துப்போய்க் காட்டினார். ''ஊராட்சி மன்றக்கட்டடம் ஒன்று கட்ட அனுமதிகேட்டிருக்கிறோம்'' என்றார். அந்தக் கட்டடத்தில் இப்போது சத்துணவுத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 60 மாணவ மாணவிகளும், 6 முதியோரும் அதன் மூலம் பயன்பெற்று வருகிறார்கள்.

**இணைப்புச் சாலை**

அடுத்து, கப்பலூர் ஊராட்சியில் (NREP) ஏழை அரிசன மக்களுக்காகக் கட்டப்பட்டு வரும் 25வீடுகளைப் போய்ப்பார்த்தோம். வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.கே.எம்.ஆர். கொர்னீலியஸ், அவ்வீடுகளின் கட்டுமானப் பணிகள் பற்றி நமக்கு விளக்கினார்.

''குடிதண்ணீர் வசதி யெல்லாம் எப்படி?'' என்று அந்த குடியிருப்பைச் சேர்ந்த ஒருவரிடம் விசாரித்தோம்.

''போர்வெல் போட்டுத் தர்றாங்க சார். ஊருக்குள்ளாற ஒரு மேனிலைத் தண்ணீர்த் தொட்டியிருக்கு. இதுக்கெல்லாம் மூல காரணம் எங்க எம்.எல்.ஏ. முயற்சி தாங்க'' என்றார், அவர்.

திருமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் (1988-89) தேசிய ஊரக

அணைக்கரைப்பட்டி வீடுகளின்முன் சமூகநலக் காடுகள்



# புகையா அடுப்புகளால் தாய்மார்கள் மகிழ்ச்சி...

வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் 80 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. மூன்று இடங்களில் தடுப்புச்சுவர் அமைகிறது. 2.2.கி.மீ நீளத்தில் ஒரு இணைப்புச் சாலை போடப்படுகிறது. நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் 60 வீடுகள் கட்டப்படுகின்றன. 87-88ல் சமூக நலக்காடுகள் திட்டம் 78 எக்டேரில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் 35 எக்டேரில் நிறைவேற்றப் படவிருக்கிறது. நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் 20 எக்டேர் பரப்பில் உருவாகவிருக்கும் சமூகநலக் காடுகளால் 405 பேர் பலன் பெற விருக்கின்றனர்.



தோப்பூர் சமூகநலக் காடுகள்

ஒன்றியப் பெருந்தலைவரான திருகே.ஏ. இங்கர்சால் நம்மைச் சந்தித்தார். அரசு நிறைவேற்றிவரும் வளர்ச்சிப்பணிகள் பற்றிய அவரது கருத்தைக் கேட்டோம்.

''மக்களுக்கு மிக அவசரத்தேவையானதிட்டங்கள் இப்போதுமுறைப் படுத்தி துரிதமாகச் செய்துவரப்படுகிறது. தேசீய ஊரக வேலைவாய்ப்புத்திட்டமும் சரி; நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டமும் சரி; அனைத்துத் தரப்பினராலும் வரவேற்கப்பட வேண்டிய திட்டங்களேயாகும். ஆனால் அதற்கான நிதி ஆதாரம் போதாது என்பது என் கருத்து. ஏழை அரிசன மக்களுக்குக் கட்டித்தரும் வீடுகளின் மேல் தளம்போட்டால் நல்லது. இப்படிப்பட்டதிட்டங்களை மக்கள் அறிய வசதியாக ஊராட்சி மன்றத்துக்கு ஒரு பொதுக் கூடமாவது வைத்து, அதில் தொலைக்காட்சிப் பெட்டி ஏற்பாடு செய்யலாம். ஒன்றியங்களில் வேலை அதிகமாகி வரும் இந்நேரத்தில் டெக்னிகல் சைடில் இருப்பவர்களை வேலை நீக்கம் செய்வது நல்லதல்ல; வேண்டுமானால் புதிதாக ஆள் போடாமல் இருக்கலாம். பதினாறு வருஷங்களுக்கு முன்னால் சேர்மன்களுக்கு இருநூறு ரூபாய் சம்பளம் நிர்ணயிக்கப்பட்டது. விலைவாசியை உத்தேசித்தாவது அதைக் கொஞ்சம் உயர்த்தித்தரலாம். ஊராட்சி மன்ற வாகனத்தை ஒன்றியப் பெருந்தலைவரும் பயன்படுத்தலாம் என்று விதியிருக்கிறதே தவிர, அப்படிப் பயன்படுத்த முடிவதில்லை; இது பற்றியும் அரசு பரிசீலித்தால் நல்லது'' என்றார் அவர்.



ராயபாளையம் சத்துணவு மையத்தில் சூரிய அடுப்பு

மேலக்கோட்டை ஊராட்சியைச் சேர்ந்த ஏழை அரிசன மக்களுக்கு, அப்பகுதியில் தகுந்த இடமில்லாததால் கரிசல்பட்டியில் 25 வீடுகள் கட்டப்பட்டு வருவதையும் நாம் பார்த்தோம்.

**சத்துணவுத் திட்டம்**

ராயபாளையத்தில், சத்துணவுத் திட்டத்தால் பயன்பெறும் குழந்தைகளுக்கான உணவு, சூரிய அடுப்பு மூலமே சமைக்கப்பட்டு வருகிறது. ''இதில் சமைக்கப்படும் உணவு ருசியாகவும் பதமாகவும் இருக்கிறது. சீக்கிரமாகவும் சமையல் முடிகிறது. கடந்த இரண்டுமாதத்தில் வானம் மப்பாக இருந்ததால் மூன்று நாள் தான் சூரிய அடுப்பில் சமைக்கமுடியாத நிலை இருக்கிறது'' என்றார் குழந்தை நல அமைப்பாளரான செல்வி எஸ்.பூரணம்.

சவுடார்பட்டி ஊராட்சியைச் சேர்ந்த சித்திரெட்டிப்பட்டியில் 40 ஆயிரம் ரூபாய் திட்ட மதிப்பீட்டில் ஓடைப்பாலம் ஒன்றும், அதை

# ‘ஜீவன்தாரா’ கிணறுகள் வரவேற்கப்படுகின்றன...



அத்திப்பட்டியில் சத்துணவு மையம்

யொட்டி வெள்ளத்தடுப்புச் சுவரும் கட்டும்பணி 1988 திட்டத்தின் துணைத்திட்டமாக வேகமாக நடந்து வருவதை நாம் கண்டோம்.

### ஒருங்கிணைந்த எரிசக்தி

மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த சித்திரெட்டிப்பட்டியில் இன்னொரு நல்ல திட்டத்தை நாம் காணமுடிந்தது. ஒருங்கிணைந்த ஊரக எரிசக்தித் திட்டம் இந்தக் கிராமத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. ஊர்க் கோடியில் ஒரு இலட்சம் ரூபாய் உதவித் தொகையில் 45 சி.எம். கொள்ளளவுள்ள மிகப்பெரிய கலன் ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. அதன் மூலம் அந்த கிராமத்தைச் சேர்ந்த 22 வீட்டுக்காரர்கள் பலன் பெறுகிறார்கள். அவ்வளவுபேரும் ஒற்றுமையாக அதில் சாணம் கரைக்கிறார்கள்.

திரு.சுப்பாரெட்டி என்பாரின் வீட்டில் சாண எரிவாயு அடுப்பு அமைக்கப்பட்டுள்ளது. சமையல் வேலை அவர் மகள் பொறுப்பு என்றறிந்து, அந்தப்பெண் கிருஷ்ண வேணியிடம் அதுபற்றிக் கேட்டோம்,

‘‘சாண எரிவாயு அடுப்புச் சமையல் நிறைய வேலை வாங்குகிறதா?’’

‘‘இல்லிங்க, எங்க வீட்ல இருக்கிற அஞ்சு பேருக்கான பூராச் சமையலும் முக்கா மணி நேரத்துல முடிஞ்சிருது’’.

‘‘இந்தச் சமையல்ல வாடை ஏதும் இல்லையே?’’

‘‘ஊகும், ருசியாவேயிருக்குதுங்க’’

இதுபோன்ற ஒருங்கிணைந்த ஊரக எரிசக்தித்திட்டம் தமிழ்நாட்டில் சித்திரெட்டிப்பட்டி உட்பட ஐந்தே கிராமங்களில் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த ஆலத்தூர், செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த காட்டாங்கொளத்தூர், தென்னார்க்காடு மாவட்டத்தைச்சேர்ந்த பரங்கிப்பேட்டை, கோவை மாவட்டத்தைச் சேர்ந்த சர்க்கார் சாமக்குளம் ஆகியவையே மற்ற கிராமங்கள்.

### கடனில் ஆடு-மாடு

சித்திரரெட்டிப்பட்டி கிராமத்தில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 14 பேருக்குக் கறவைமாடு, வெள்ளாடு ஆகியவையும், ஒருவருக்கு வண்டி மாடும் தரப்பட்டுள்ளது.

அடுத்து நாம் சேடப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த அத்திப்பட்டிக்குச் சென்றோம். ‘‘இந்த ஒன்றியத்துல முப்பத்தோரு கிராமப் பஞ்சாயத்து, எழுமலைங்கிற ஒரு டவுன் பஞ்சாயத்து இருக்கு. எல்லா இடங்கள்லயுமே வளர்ச்சிப் பணிகள் தீவிரமா நடந்துவருது’’ என்றார், ஒன்றியப் பெருந்தலைவர் திரு சி.துரைராஜ். அத்திப்பட்டி கிராமத்தில் 130 பேருக்குச் சத்துணவு வழங்கப்படுவதையும் அவர் பெருமையுடன் குறிப்பிட்டார்.

அந்த ஒன்றியத்தில், வி.இராமசாமிபுரம் என்ற இடத்தில் சமூக நலக்காடுகளுக்காக அமைக்கப்பட்டுள்ள நர்சரியையும் நாம் போய்ப் பார்த்தோம். பதினைந்தாயிரம் கருவேலங் கன்றுகளும், ஐயாயிரம்

கடனில் பெற்ற கறவை மாடுகள்



# ஏழை ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுவசதி...

கூபாபுல்லும் பயிர் செய்யப்பட்டிருக்கிறது. அந்தச் சிறிய கிராமத்திலுள்ள 15 குடிசைகளில் கூட சாணஎரிவாயு அடுப்பு அமைக்கப்பட்டிருக்கிறது. 1987-88ல் இந்த ஒன்றியத்தில், மொத்தத்தில், 166 சாண எரிவாயு அடுப்புகளும், புகை வராத 'சூலா' அடுப்புத் திட்டம் மூலம் 500 பேர்களுக்கு அடுப்புகளும் வழங்கப்பட்டிருக்கின்றன.

அணைக்கரைப்பட்டி கிராமத்தில் ஆதிதிராவிடருக்காகக் கட்டித்தரப்பட்டுள்ள 25 வீடுகளின் முன்பும் சமூகக்காடு வீட்டுத் தோட்டம் நல்லமுறையில்பயிரிடப்பட்டுள்ளது. வீட்டுக்கு 60 கன்றுகள் தரப்பட்டு, அதைப் பராமரிக்க, தலைக்கு மாதம் நாற்பது ரூபாய் பணம் தரப்பட்டு வருகிறது. ஓராண்டுக்காலத்திற்கு இது தரப்படும்.

**கடை வைக்கக் கடன் உதவி**

சாப்டூரில், பெத்தண்ணசாமி என்பவர், ஸ்டேட் பேங்க் மூலம் 5 ஆயிரத்து ஐநூறு ரூபாய் கடன் வாங்கி ஒரு பெட்டிக்கடை வைத்திருக்கிறார்.

சமூக நலக் காடுகள் திட்டப் பழையூர் ஊராட்சியில் 12 ஏக்கர் பரப்பளவு நிலத்தில் செழிப்பாகச் செயல்படுத்தப்பட்டிருப்பதை நாம் காணமுடிந்தது. 200 புளியங்கன்றுகளும், கூபாபுல்லும் இங்கே போட்டி போட்டுக்கொண்டு வளர்ந்திருக்கின்றன.

இந்த ஒன்றியத்தில்தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் மூலம் 80 வீடுகளும், நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் 60 வீடுகளும் ஏழை எளிய தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கட்டித்தரப்பட்டுள்ளன. மூன்று கிராமத்தில் கழிவறைகளும், கெம்பளபுரத்தில் ஒரு தடுப்புச் சுவரும் கட்டித்தரப்பட்டிருக்கின்றன. 'ஜீவன் தாரா' கிணறுகள் பத்துக்கு அனுமதி கோரப்பட்டுள்ளது. கன்னியம்பட்டி, கே.பரமன்பட்டி ஆகிய கிராமங்களில்இணைப்புச்சாலைகள் போட அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

இந்த ஒன்றியத்தில் ரூ. 5,500 கடன் பெற்று டீகடை நடத்தி வரும் திரு க. கோபால்—''வாடிக்கிடந்த எங்கள் குடும்பம், அரசாங்கத்தின் உதவிமூலம் வளம்பெற்றுவிட்டது. எனது கடை வியாபாரம் நல்லமுறையில் நடக்கிறது'' என்று பூரிப்போடு குறிப்பிட்டார்.

**பால் உற்பத்தி**

அடுத்து, டி.கல்லுவீரன்பட்டி ஒன்றியத்திற்குச் சென்ற நாம், அங்குள்ள கொல்லவீரன்பட்டியில் வெற்றிகரமாகச் செயல்பட்டு வரும் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தைப் பார்வையிட்டோம்.

''ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் இக்கிராமத்தில் நூற்றிருபத்தஞ்சுபேர் கடன் மூலம் கறவை மாடுகள் வாங்கியுள்ளனர். தினசரி இதன்மூலம் முந்நூறு லிட்டர் பால் கிடைக்குது. இருவத்திமூணுபேர் செம்மறி ஆடு வாங்கிருக்காங்க..'' என்றார் ஊராட்சிமன்றத் தலைவர் திரு எஸ்.பழனிவேலன்.

நாம் குறிப்பிட்ட இந்தச் சில ஒன்றியங்களில் மட்டுமல்ல; மதுரை மாவட்டத்தில் உள்ள அத்தனை ஊராட்சி ஒன்றியங்களிலுமே -பல்வேறு வகைப்பட்ட வளர்ச்சிப்பணிகள் நாளொரு மேனி பொழுதொரு வண்ணம் நடந்தவாறிருக்கின்றன.



கரிசல்பட்டி குடியிருப்புக்குக் கால்கோள் நடக்கிறது

கொல்லவீரன்பட்டி பால் உற்பத்தியாளர் கூட்டுறவு மையம்






# உங்கள் வளர்ச்சிக்கு எங்கள் பாதுகாப்பான திட்டங்கள்

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி உங்கள் வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கான சிறந்த பல சேமிப்புத் திட்டங்களை வகுத்துள்ளது.

இன்றே வருவீர்—உங்கள் வாழ்க்கை வளம்பெற செய்திடுவீர்.

உங்கள் சேமிப்பிற்கு $\frac{1}{4}$% கூடுதல் வட்டி உண்டு.

- சேமிப்புத் திட்டம்
- நிரந்தர வைப்புத் திட்டம்.
- தொடர் வைப்புத் திட்டம்.
- ரொக்க சான்றிதழ்.
- சிறப்பு வைப்பீட்டுத் திட்டம்.

TNSC BANK

தமிழ்நாடு மாநிலத்
தலைமைக் கூட்டுறவு வங்கி லிட்.,
233, என்.எஸ்.சி. போஸ் சாலை,
சென்னை-600 001.

*TNSC வங்கி—வாழ்வுக்கு வளமூட்டும் வங்கி*

# ஊரக வளர்ச்சிப் பணியில் வட ஆர்க்காடு மாவட்டம்



தமிழ்நாட்டில் 38 ஊராட்சி ஒன்றியங்களைக் கொண்ட பெரிய மாவட்டம் வட ஆர்க்காடு. இம் மாவட்டத்தின் மக்கள் தொகை 1981-ஆம் ஆண்டுக்கணக்கெடுப்பின் படி 44 இலட்சத்து 14 ஆயிரத்து 324 பேர். வறுமை ஒழிப்புத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம், மற்றும் ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டம் ஆகியவற்றை நிறைவேற்றுவதில் 1987-88- ஆம் ஆண்டுச்|சாதனையில்வட ஆர்க்காடு மாவட்டம் முதல்நிலை வகிக்கிறது.

ஆதிதிராவிடர்களுக்கு 1987-88 ஆம் ஆண்டில் இலவசமாக 5716 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டதும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 28,253 குடும்பங்கள் மேன்மையடைய ரூ. 419.35 இலட்சம் மானியமாக வங்கிகள் மூலம் வழங்கப்பட்டதும், குறிப்பிடத்தக்கவையாக உள்ளன. இதில் தாழ்த்தப்பட்டோர் 12,995 பேரும், மலைவாழ் பழங்குடியினர் 876 பேரும், பெண்கள் 9,251 பேரும் அடங்குவர்.

தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்திற்கென 1987-88-ஆம் ஆண்டில் இம்மாவட்டத்தில் ரூ. 932.306 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

3513.60 மெ. டன் அரிசி வழங்கலாம் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில், 7,315 மெ. டன். அரிசி வழங்கப்பட்டு, 208.17 சதவீதம் சாதனை காட்டப்பட்டுள்ளது. அதே போன்று 3952.80 மெ. டன் கோதுமை என இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, 5,456 மெ. டன் கோதுமை வழங்கப்பட்டு, 138.03 சதவீதம் சாதனை எய்தப்பட்டது.

தொகுப்பு இல்லங்கள் 3,401, பள்ளிக்கூடங்கள் 35, சமுதாயக் கூடங்கள் 273, கழிப்பறைகள் 403 ஆகியவை கட்டப்பட்டன. மற்றும் 4,011 பணிகள் முடிக்கப்பட்டன.

இத்திட்டத்திற்கென 1988-89 ஆம் ஆண்டிற்கு ரூ. 756.2464 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தொகுப்பு இல்லங்கள் 2,503, பள்ளிக்கூடங்கள்13, சாலைகள் - மதகுகள் 61, ஜீவன் தாரா 130, மற்றைய பணிகள் 35 ஆக மொத்தம் 2,742பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்திற்கென 1987-88-ஆம் ஆண்டில் ரூ. 280.24 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. தொகுதி இல்லங்கள் 2,867, கழிப்பறைகள் 366 கட்டப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின்கீழ் இம்மாவட்டத்தில் 2179.84 மெ. டன் அரிசி பயன்படுத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 2368.349 மெ. டன் அரிசி வழங்கப்பட்டது. அதே போன்று 2452.32 மெ. டன் கோதுமை பயன்படுத்தத் திட்டமிடப்பட்டு, 2634.458 மெ. டன் கோதுமை பயன்படுத்தப்பட்டது. இது 107.43 சதவீத சாதனையாகும்.

இத்திட்டங்கள் செயல்படும் விதம், ஏற்படுத்திய சாதனை, பயன் பெற்றோர் அடைந்த சிறப்பினைப் பற்றி அறிய வட ஆர்க்காடு மாவட்டத்தில் பயணம் மேற்கொள்கிறோம்.

சின்னஞ்சிறிய கிராமங்களை வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் செல்லும் வேலூரிலுள்ள மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலகத்திற்குச் செல்கிறோம். இம்முகமையின் திட்ட அலுவலர் திரு. வ. ஜிதேந்திய நாத் அவர்களைச் சந்திக்கிறோம்.

'வட ஆர்க்காடு மாவட்டத்தைப் பொறுத்த வரையில் இத்திட்டங்களைச் செயல்படுத்துவதில் எந்த அளவிற்கு தொகை செலவிடப்பட்டது என்பதைக் காட்டிலும், அத்தொகைகள் சரியாகச் செலவிடப்பட்டனவா என்பதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர், திட்ட அலுவலர், கோட்ட வளர்ச்சி அலுவலர்கள் ஆகியோர் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் நடைபெறும் வேலைகளை அடிக்கடி திடீர் தணிக்கை செய்து, வேலைகள் சரியாக நடைபெறுகின்றனவா என



**வங்கிக் கடன் மூலம் கறவை மாடு பெற்ற திரு சி. சுப்பிரமணியம்.**

பதைக் கண்காணித்து வருகிறார்கள் என்று திட்ட அலுவலர் கூறுகிறார்.

பின்னர் வேலூரிலிருந்து 12கி.மீ. தொலைவில் வேங்கடாபுரம் ஒன்றியத்தைச் சேர்ந்த சம்பங்கி நல்லூர் என்னும் சிறிய, அழகிய கிராமத்திற்குச் செல்கிறோம்.

இங்கு ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான 45 தொகுப்பு இல்லங்கள் கட்டப்பட்டு மக்கள் குடியேற்றப்பட்டுள்ளனர். 'இந்திரா நினைவுக் குடியிருப்புகள்' எனப் பெயரிடப்பட்ட இத்தொகுப்பு இல்லங்கள் ரூ. 2.70 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளன. அடிப்படை வசதிகளுக்காக ரூ. 1.65 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. வீடு கட்டுமானத்திற்கென ரூபாய் 6,000, கழிப்பிடம் கட்ட ரூபாய் 1,200, ஏனைய வசதிகள் செய்து கொடுக்க ரூ. 3,000 என ஒவ்வொரு வீட்டிற்கும் ரூ. 10,200 செலவிடப்பட்டுள்ளது.

மண் சுவரிலான இவ்வீடுகளுக்கு ஓட்டினால் கூரை வேயப்பட்டுள்ளது. காற்றோட்டத்துடனும் வெளிச்சத்துடனும் கூடிய இவ் வீடுகள் ஒவ்வொன்றிலும் புகையில்லா அடுப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. கழிப்பறை வசதி, சாக்கடை வசதி, குடிநீர் வசதி, சாலை வசதி என அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய இக்குடியிருப்புகளில் சுத்தமும் சுகாதாரமும் நல்ல முறையில் பேணப்படுகின்றன. சிலர் தங்கள் வசதிக்கேற்ப வீட்டை விரிவுபடுத்தியும் வைத்துள்ளனர்.

பல்வகைப் பயன்கருதி வீடுகளின் முன்புறமும் பின்புறமும் சூபாபுல், நெல்லிச்செடி, முருங்கை, கறிவேப்பிலை, பப்பாளி, தென்னை போன்ற மரக்கன்றுகள் நட்டு வளர்க்கப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு வீட்டிற்கும் 30 மரக்கன்றுகளை முகமை அளிக்கிறது. காலியிடம் அதிகமாயிருந்தால் 60 மரக்கன்றுகள் கொடுக்கப்படுகின்றன. இவற்றை நன்றாக வளர்த்து அவர்கள் பயனடைய வேண்டும் என்ற நோக்கத்துடன் ஊக்கத் தொகையாக ஒவ்வொரு வீட்டிற்கும் பராமரிப்புச் செலவிற்காக ஆண்டுக்கு ரூ.40 வழங்கப்படுகிறது.

இந்த வீடுகளில் மேலும் வசதிகள் செய்து கொடுக்க சில சிறப்பு வேலைகளை மேற்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி எஸ். மாலதி இ.ஆ.ப., அவர்கள் ஆலோசனை கூறியுள்ளதாக, பயணத்தில் நம்முடன் வந்த உதவித் திட்ட அலுவலர் திரு. ஆ. பத்மநாபன் கூறுகிறார். மாவட்டஆட்சித் தலைவரின் அறிவுரையின்படி வீட்டில் மேலும் அதிகமான வெளிச்சம் வர வசதி செய்ய இரண்டு கண்ணாடி ஓடுகள் கூரைகளில் பொருத்தப்படுகின்றன. வீடுகள் மின்சார வசதி பெறும் பொழுது வீட்டினுள்ளே மின்கம்பியை இணைப்பதற்கு வசதியாகத் தனிக் குழாய் ஒன்று பொருத்தப்படுகிறது. வீட்டின் முன்புறம் உட்காருவதற்கும் இரவில் ஒருவர் படுப்பதற்கும் வசதியாக இரண்டரை அடி உயரத்தில் திண்ணை கட்டப்பட்டு வருகிறது என்று உதவித் திட்ட அலுவலர் ஒவ்வொன்றாக விளக்குகிறார்.

வீட்டிற்குப் பயன்படுத்தப்படும் பொருட்கள் தரமானதாகவும் குறைந்த விலை கொண்டதாகவும் இருக்க அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

1988-89-ஆம் ஆண்டிற்கு வீட்டிற்கான கதவுகள் மற்றும் மரக்கட்டைகள் ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள 16 தச்சுப் பட்டறைகள் மூலம் செய்யவும், இதற்கான வசதிகள் அனைத்தும் தரமானதாயும் தகுந்த விலையில் இருப்பதற்காகவும் ஆணையிடப்பட்டுள்ளதாக மாவட்ட வளர்ச்சி அலுவலர் திரு கோடிலிங்கம் அவர்கள் நம்மிடம் கூறுகிறார்.

வறுமையில் வாடும் தனிக் குடும்பங்களைக் குறிப்பாக ஆண்டு வருமானம் ரூ. 3500-க்கு மேற்படாத குடும்பங்களைத் தேர்ந்தெடுத்து அக்குடும்பங்களுக்குக் கடன் மற்றும் மானியம் வழங்கி, தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்தி அவர்களுக்கு உதவிக்கரம் நீட்டி வருகிறது ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்திட்டம்.

மாட்டுவண்டி, கோழி, ஆடு, மாடு வளர்த்தல், பெட்டிக்கடை, மளிகைக் கடை, சைக்கிள்கடை போன்ற தொழில்களுக்குக் கடனும் மானியமும் வழங்கப்படுகிறது. இப்படி சிறு தொழில்கள் ஆரம்பித்ததால் அந்தத் தனிநபரின் வாழ்க்கைவளம் பெறுகிறதா என்பதை மாவட்டத்தின் அனைத்து அலுவலர்களும் தொடர்ந்து கண்காணித்து வருகிறார்கள். ஒவ்வொரு மாதமும் கோட்ட வளர்ச்சி அலுவலர்கள் ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் பயனடைந்த 10 நபர்களை அந்தந்த கிராமங்களில் சென்று பார்த்து வங்கிக் கடன்களால் அவர்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்துள்ளதா, கடன்களை அவர்கள் முறையாகத் திருப்பிச் செலுத்துகிறார்களா என்பதை ஆய்வு செய்கிறார்கள். திட்டத்தின் செயலாக்கத்தில் சிக்கல்கள் ஏதும் இருந்தால், அவ்வப்போது

**மாட்டு வண்டியால் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொண்ட திரு முருகேசன்.**



வங்கி அலுவலர்களுடன் ஆலோசனை மேற்கொண்டு சிக்கல்கள் தீர்க்கப்படுகின்றன.

நாம் சென்ற சம்பங்கி நல்லூர் கிராமம் இந்தியன் வங்கி தத்தெடுத்த கிராமம். இங்கு வங்கிக் கடன் மூலம் பலர் சுயவேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர்.

ஆடுவளர்ப்பு, கறவை மாடு வளர்ப்பு, மாட்டுவண்டி, தச்சுத் தொழில் போன்ற பல்வேறு விதமான சுயதொழில்களுக்குக் கடன் பெற்றோர் தம் தொழிலில் வரும் வருமானம் மூலம் நிம்மதியான வாழ்க்கை நடத்தி வருகின்றனர். அவர்களில் ஒரு சிலரைச் சந்திக்கின்றோம்.

வங்கிக் கடன் மூலம் கறவை மாடு வாங்கிய திரு சி. சுப்பிரமணியம் கூறுகிறார்: ''எங்க குடும்பத்திலே பத்துப் பேர். ஜீவனம் செய்ய ரொம்பக் கஷ்டப்பட்டோம். கூலிவேலை; சரியான வருமானம் வரல. 300 ரூபாய் லோன் கெடைச்சு பசுமாடு வாங்கினேன். தினம் 7 லிட்டர் கறக்குது. பாலை சத்துவாச்சேரியில் இருக்கிற பால் பண்ணைக்குக் கொடுத்துடறேன். மான்யமா 1000 ரூபாய் கிடைச்சது. கடன் 15 நாளுக்கு ஒரு தடவ 80 ரூபாய் வீதம் அடைச்சிடறேங்க. வீடு இருக்கு, தொழில் இருக்கு. எங்க குடும்பம் பொழச்சுடும்னு எனக்கு இப்ப நம்பிக்கை வந்துட்டுதுங்க'' என்று மனந் திறந்து கூறுகிறார்.

திரு முருகேசன் என்பவரின் மகன் திரு தாமோதரன் ரூ. 5,500 கடன் பெற்று மாட்டு வண்டி வாங்கினார். வருமானம் தினமும் 40 ரூபாய் கிடைக்கிறது. மாட்டுக்குத் தீனி ரூ. 15 ஆகிறது. கடன் அடைக்க ரூ. 125. மீத வருமானம் இவர் குடும்பத்திற்கான செலவினங்களுக்குப் பயன்படுகிறது. இத்தொழில் துவங்கிய பின், இவரது குடும்பத்தின் வாழ்க்கைத் தரம் உயர்ந்துள்ளது.

பின் கணியம்பாடி ஒன்றியம் விருப்பாட்சிபுரத்தில் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட தொகுப்பு இல்லங்களைப் பார்வையிடுகிறோம். மொத்தம் 50 இல்லங்கள். இவற்றில் புதிதாகக் கட்டப்பட்டவை 23 இல்லங்கள். இவை ரூ. 2 இலட்சத்து 34 ஆயிரத்து 600 நிதி ஒதுக்கீட்டில், கட்டப்பட்டுள்ளன.

இங்கு ரூ. 20,000 செலவில் ஆழ் குழாய்க்கிணறு போடப்பட்டுள்ளது. தெருவிளக்குகள், சாலை வசதி என வசதிகள் முழுமையான அளவில் உள்ளன. ரூ. 42,000 செலவில் சமுதாயக்கூடம் ஒன்று கட்டப்பட்டுள்ளது.



மூன்று தலைமுறைகளுக்கு வாழ்வளிக்கும் திருமதி பாஞ்சாலை

மேதகு ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் அவர்கள் அண்மையில் இத்தொகுப்பு இல்லங்களைப் பார்வையிட்டு, இங்கு மரக் கன்றுகளை நட்டுச் சென்றுள்ளார்கள் என்று அறிகிறோம்.

இந்தத் தொகுப்பு இல்லம் ஒன்றில் வசிக்கும் திரு வி.சி. மணி என்பவருடன் பேசுகையில், ''கட்சி வித்தியாசம் பார்க்காமல் வீடு எல்லோருக்கும் கிடைத்தது. வேண்டியவர்கள்-வேண்டாதவர்கள் என்ற பாகுபாடும் இல்லை. எங்களுக்கு எந்தக் குறையும் இல்லை'' என்று வெளிப்படக் கூறினார்.

பின்னர் வேலூர் ஒன்றியத்தைச் சேர்ந்த அரியூர் கிராமத்தில் திரு ஜானி என்னும் 60 வயதான இஸ்லாமியப் பெரியவரைச் சந்திக்கிறோம். 6 மாதத்திற்கு முன்பு தொரப்பாடி இந்தியன் வங்கிமூலம் ரூ. 5,000 கடன் பெற்றுள்ளார். 7 சைக்கிள்கள் வாங்கி வாடகைக்கு விட்டு வருகிறார். கடனை அடைக்க மாதம் ரூ. 250 கட்டி வருகிறார். "இவ்வளவு தொகை தவணையாகக் கட்ட வேண்டியதில்லையே" என்று நாம் வினவ, "எனக்கு எட்டுக் குழந்தைங்க. நிலக்குத்தகை எடுத்ததில் ரொம்ப நஷ்டம்; சைக்கிள் வாடகைக்கு விடறதாலே சராசரியா 15 ரூபா வருது; இங்கு கொஞ்சம் இடம் இருக்கிறதால வைக்கோல் போர் வியாபாரமும் செய்யறேன். நேரம் கிடைக்கிறப்ப பீடியும் சுத்தறேன். இப்படி வருமானம் கொஞ்சம் அதிகமா வருதுங்க. அதனாலே லோனை சீக்கிரம் அடைச்சு, மறுபடியும் லோன் வாங்கி இன்னொரு தொழிலும் பண்ணலாம் பாருங்க'' என்கிறார்.

உதவிக்கென்று யாரையும் வைத்துக் கொள்ளாமல் சைக்கிள் ரிப்பேர் முதல் எல்லா வேலைகளையும் தானே செய்கிறார். இதைவிட வியப்பு என்னவென்றால் கிடைத்த வருமானத்தில் சிறுவர்களுக்கான சைக்கிள்கள் மூன்று வாங்கி அவற்றையும் வாடகைக்கு விட்டு வருகிறார்.

45 வயதான திரு ஏ. ஜி. ஆறுமுகத்தின் 5 பேர் கொண்ட குடும்பம் தற்போது மளிகைக் கடையால் முன்னேறி வருகிறது. அவரைச் சந்திக்கிறோம். இவர் முதலில் தம் சொந்தப் பணத்தைக் கொண்டு மளிகைக்கடை வைத்து நஷ்டப்பட்டிருக்கிறார். பின்னர் காய்கறிக் கடை. அதிலும் சரியான வியாபாரமில்லை. வீட்டில் வேறு யாரும் வேலைக்குப் போகும் வயதில் இல்லாததால் அன்றாடச் சாப்பாட்டுக்கே திண்டாட்டம்.

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை நடத்திய ஆய்வுக் கணக்கெடுப்பில் இவரது குடும்பம் வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழ்வதாகக் கண்டறியப்பட்டு மதுரை வங்கியின்மூலம் ரூ. 1,000 கடன் பெற்றுத் தரப்பட்டது. காய்கறிக் கடை வைத்தார். இதில் மானியமாக ரூ. 333 கிடைத்தது. அந்தக் கடனை அடைத்த பின் தொரப்பாடி இந்தியன் வங்கி மூலம் ரூ. 5,000 கடன் பெற்று மளிகைக் கடை வைத்தார். இரண்டாவதாக வாங்கிய கடனுக்கு மானியமாக ரூ.1,666 கிடைத்தது. அந்தகிராமத்தில் இவர் கடையில் நல்ல வியாபாரம். மேலும் மேலும் உற்சாகத்துடன் உழைத்து முன்னேறி வருகிறார் இவர்.

பின்னர் முருக்கேரி கிராமம் செல்கிறோம். முடிதிருத்தும் தொழிலாளியான நடேசன் திடீரென்று இறந்ததால், அவரது குடும்பத்தில் வறுமையின் கோரம் தாண்டவமாடியது. அவரது மனைவி

45 வயதான திருமதி பாஞ்சாலம் விதியினை நொந்து வேதனையில் வாடாமல் உழைப்பை மூலதனமாகக் கொண்டால் வாழ்க்கையில் உயரலாம் என்ற கொள்கைக்கு இன்று உதாரணமாகத் திகழ்கிறார். இரண்டாண்டுகளுக்கு முன்பு ஊர் நல உதவியாளர் மூலம் வங்கிக் கடன் ரூ. 1,000 பெற்று இட்லிக் கடை வைத்தார். கிடைத்த வருமானத்தில் கடனை அடைத்து மேலும் ரூ. 1000 கடன் பெற்று, தொழிலை விரிவுபடுத்தி வாழ்க்கையில் வளம் பெற்று வருகிறார். பக்கத்தில் உள்ள மில்லில் பணிசெய்யும் தொழிலாளர்களிடையேயும் இட்லி வியாபாரம் செய்கிறார் இந்த வருமானத்தில் இவரது தாய், மருமகள், பேரன்கள் அடங்கிய மூன்று தலைமுறை இன்று தலை நிமிர்ந்து நிற்கிறது.

தொடர்ந்து, வேலூர் ஒன்றியம் சிவநாதபுரத்தில் கட்டப்பட்டுள்ள கசிவுநீர்க் குட்டையைச் சென்று பார்க்கிறோம். ஜவ்வாது மலையின் தொடர்ச்சியான குருவிமலைகளின் குறுக்கே பிரம்மாண்டமான அளவில் இக்கசிவு நீர்க்குட்டை கட்டப்பட்டுள்ளது. 1987-88-ஆம் ஆண்டில் கட்டப்பட்ட இக்கசிவு நீர்க்குட்டையால் 87.91 ஏக்கர் நிலம் பயனடைகிறது.

மேதகு ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் அவர்கள் இக்கசிவு நீர்க்குட்டையை 18-3-88 அன்று பார்வையிட்டுப் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

வட ஆர்க்காடு மாவட்டத்தில் 1987-88-ஆம் ஆண்டில் 50 கழிவு நீர்க்குட்டைகள் ரூ. 65 இலட்சம் செலவில் கட்டிமுடிக்கப்பட்டுள்ளன. ரூ. 8.268 இலட்சம் மதிப்புள்ள 441 மெ. டன் அரிசியும், ரூ. 7.653 இலட்சம் மதிப்புள்ள 494 மெ.டன் கோதுமையும் கூலியின் ஒரு பகுதியாக வழங்கப்பட்டுள்ளது. கூலியாக ரூ. 25.345 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ் இக்கசிவுநீர்க்குட்டைகள் கட்டும் பணியை வேளாண்மைப் பொறியியல் துறை மேற்கொண்டுள்ளது.

சோளிங்கர் ஊராட்சி ஒன்றியம் தெங்கால் கிராமத்தில் கட்டப்பட்டுள்ள கசிவுநீர்க்குட்டையைமேதகு ஆளுநரின் ஆலோசகர் திரு ஜி.வி. இராமகிருஷ்ணா அவர்கள் 23-5-88 அன்று பார்வையிட்டு, குட்டையின் சிறப்பைப் பாராட்டியுள்ளார். இக்கசிவுநீர்க்குட்டை ரூ. 2.61 இலட்சம் செலவில் கட்டப்பட்டது. இக்குட்டை கட்டப்பட்டதால் வறட்சியான காலத்தில் நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்புத் தொடர்ந்து கிடைத்தது. தினசரி நபர் ஒருவருக்கு ரூ. 10 வீதம் ஆண்களுக்கும் பெண்களுக்கும் கூலி சரிசமமாக வழங்கப்பட்டது. இதில் அரிசி 1.5 கிலோவும் கோதுமை 1 கிலோவும் தொகையாக ரூ. 5.65 காசும் வழங்கப்பட்டன. ஏறத்தாழ 3.5 மாத காலத்தில் கட்டி முடிக்கப்பட்ட இக்கசிவுநீர்க்குட்டையால் தற்போது 45 கிணறுகள் பயன்பெறுகின்றன.

இதே போன்று குடியாத்தம் ஊராட்சி ஒன்றியம் ரங்கசமுத்திரம் கிராமத்தில் கட்டப்பட்ட கசிவு நீர்க்குட்டையை மேதகு ஆளுநரின் ஆலோசகர் டாக்டர் எஸ். எஸ். சித்து அவர்கள் 26-3-88 அன்று பார்வையிட்டு, "மிகவும் பயனுள்ள திட்டம் இது; துரித வேகத்தில் கட்டப்பட்டுள்ளது" என்று குறிப்பேட்டில் குறிப்பிட்டுள்ளார்.

எரிபொருளை மிச்சப்படுத்தும் நோக்குடன் கூடிய 500 புகையில்லா அடுப்புகள் 1987-88 ஆம் ஆண்டில் இம்மாவட்டத்தில் அமைக்கப்பட்டன. 5 பயிற்சி முகாம்களின் மூலம் 100 பேர் பயிற்சி பெற்றனர். புகையில்லா அடுப்புகள் 45 கிராமங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

அடுப்பு ஒன்று அமைக்க ரூ. 90 வீதம் மொத்த மானியத்தொகை ரூ. 42,750 செலவிடப்பட்டது. 1988-89-ஆம் ஆண்டில் 1,000 புகையில்லா அடுப்புகள் அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

### தேசிய கரிம வாயுத் திட்டம்

தேசிய கரிம வாயுத்திட்டத்தைச் செயல்படுத்துவட ஆர்க்காடு மாவட்டத்திற்கு 1987-88-ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு ரூ. 17 இலட்சமாகும். இத்தொகை முழுதும் செலவிடப்பட்டு 1402 சாண எரிவாயுக் கலன்கள் நிறுவப்பட்டுள்ளன. இரண்டு பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன.

### ஒருங்கிணைந்த ஊரக எரிசக்தித் திட்டம்

ஒருங்கிணைந்த ஊரக எரிசக்தித் திட்டம் தமிழ்நாட்டின் 7 மாவட்டங்களில், மாவட்டத்திற்கு ஒரு ஊராட்சி என்ற வீதத்தில் செயல்படுத்தப்படுகிறது. வட ஆர்க்காடு மாவட்டத்தில் வாலாஜாப்பேட்டை ஊராட்சி ஒன்றிய எல்லைக்குட்பட்ட கிராமங்களில் இத்திட்டம் 1-10-87 முதல் செயல்படத் தொடங்கியது.

திறன்மிக்க அடிமட்ட ஒரு வழிப்போக்கிகள் அமைக்க, 200 புட்வால்வுகள் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இச்சாதனத்தைப் பயன்படுத்துவதன் மூலம் 10 சதம் முதல் 20 சதம் வரை டீசலை மிச்சப்படுத்தலாம். ஆயில் என்ஜின் வைத்திருக்கும் 200 விவசாயிகளைத் தேர்வு செய்து இவை வழங்கப்பட்டன. இந்த புட்வால்வு விலையில் 70 சதம் மானியமாக அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் மானியமாக ரூ. 19,462.50 செலவிடப்பட்டுள்ளது.

பிரியாக்னி ஸ்டவ் என்னும் திறன்மிக்க உலோக அடுப்புகள் 500 குடும்பங்களுக்கு அளிக்கப்பட்டுள்ளன.

காய்கறி, மளிகை வியாபாரத்தில் முன்னேற்றங் காணும் திரு ஏ.ஜி. ஆறுமுகம்





பலநோக்கு இழுவை சாதனம்

**பலநோக்கு இழுவைச் சாதனம்**

இச்சாதனத்தின் மூலம் மாடுகளைக்கொண்டு உழவு செய்யலாம். நிலத்தைச் சமன் செய்யலாம். மேலும் பொருள்களை ஏற்றிச் செல்ல வண்டியாகவும் பயன்படுத்தலாம். வயல்களில் வரப்புகட்டவும் இச்சாதனம் பயன்படுகிறது. மாடுகளின் வேலைப்பளுவைக் குறைக்கும் சாதனமிது. ஒவ்வொருமுறைக்கும் தனித்தனியாக இணைக்கக் கூடிய இச்சாதனத்துடன் வழங்கப்படுகிறது. இதன் மொத்த விலை ரூ. 12,278.60; ஆனால் இதில் 75 சதம் மானியமாக வழங்கப்படுகிறது.

வாலாஜாப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்திற்கு,பலநோக்கு இழுவை சாதனங்கள் 10 வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, தேர்வு செய்யப்பட்ட 10 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. 1987-88 ஆம் ஆண்டில் ரூ. 2 இலட்சத்து 18 ஆயிரம் மானியத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

மேலும் சிறப்புத் திட்டமாக நீர் இறைக்கும் காற்றாலைகள் இரண்டு அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. ஒருங்கிணைந்த ஊரக எரிசக்தித்திட்டத்தை முதல் மூன்று ஆண்டுகளுக்குச் செயல்படுத்த ரூ. 12.50 இலட்சம் செலவிட வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன.

**கிராமப்புற இளைஞர் சுயவேலை வாய்ப்புப் பயிற்சித் திட்டம்**

இளைஞர்களுக்கான பயிற்சி மற்றும் சுயவேலைவாய்ப்புக்கான திட்டம் இம்மாவட்டத்தில் நல்ல முறையில் செயல்படுத்தப்படுகிறது. பயிற்சி பெறுவோர்க்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது. பயிற்சி முடிவுற்றதும் அவர்கள் பெற்ற பயிற்சியில் தொழில் அமைக்க உதவி செய்யப்படுகிறது.

கனியம்பாடி கோட்டம் பாகாயம் கிராமத்தில் இத்திட்டத்தை சமுதாய வளர்ச்சிச் சங்கம் (CODES) செயல்படுத்துவதைப் பார்வையிடுகிறோம். ஆட்டோமொபைல், வெல்டிங், கட்டடத் தொழில்

சிவகாதபுரம் கசிவுநீர்க் குட்டை



ஆகியவற்றில் 40 பேர் 6 மாதப் பயிற்சி பெற்று வருகின்றனர். TRYCEM திட்டத்தின் கீழ் எடையன் சந்து பெண்கள் பல நேரக்குத் தொழில் கூட்டுறவுச்சங்கம் பனை ஓலை கைவினைப் பொருட்கள், கட்டடத்தொழில் ஆகியவற்றில் பயிற்சி அளித்து, பின் அவர்களுக்கு சுயவேலை வாய்ப்பையும் உருவாக்கித் தருகிறது.

**சமூகக் காடுகள் திட்டம்**

தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம், ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம் ஆகியவற்றில் 25 சதவீதம் சமூகக் காடுகள் திட்டத்தில் செலவழிக்கப் பட வேண்டும். வட ஆர்க்காடு மாவட்டத்தில் 1987-88-ஆம் ஆண்டு தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தில் ரூ. 148.86 இலட்சமும், ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தில் ரூ. 120.90 இலட்சமும் சமூகக் காடுகளுக்காகச் செலவிடப்பட்டுள்ளன. 2,872 எக்டேர் நிலத்தில் நடப்பட்ட செடிகள் 80 சதவீதம் அளவிற்கு நன்றாக வளர்ந்திருக்கிறது. மேலும் 1987-88-ஆம் ஆண்டில் புதிதாக மரப் பட்டாக்கள் வழங்கும் திட்டத்தின் கீழ், இம்மாவட்டத்தில் 5,817 பெண்களுக்கு மரப்பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

1988-89-ஆம் ஆண்டிற்கென ரூ. 176.976 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1938 எக்டேர் நிலத்தில் சமூகக்காடுகள் உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

அம்மணந்தாங்கல் கிராம ஏரியில் 15 எக்டேர் பரப்பில் சமூகக் காடுகள் வளர்க்கப்பட்டுள்ளதைப் பார்வையிடுகிறோம். மொத்தம் 24,000 கருவேலம் செடிகள் இங்கு நடப்பட்டுள்ளன. நடவும் பராமரிக்கவும் என இதுவரை ரூ.28,970 செலவிடப்பட்டுள்ளது. இச்செடிகளை பராமரிக்கவும், பாதுகாக்கவும் 37 பெண்களுக்கு மரப்பட்டாக்கள் அளிக்கப்பட்டுள்ளன. தற்பொழுது 22,160 கருவேலன் செடிகள் நல்ல முறையில் வளர்ந்துள்ளன.

நம் பயணத்தின் முடிவில் வட ஆர்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி எஸ். மாலதி இ.ஆ.ப. அவர்களைச் சந்திக்கின்றோம்.

''இம்மாவட்டம் 1987-88-ஆம் ஆண்டில் வறுமை ஒழிப்புத் திட்டங்களின் கீழ் முதன்மைத் தகுதியைப் பெற்றுள்ளது. திட்டத்தின் செயலாக்கத்தில் ஈடுபட்டிருக்கும் அனைத்து நிலை அலுவலர்கள் தகுந்த ஒத்துழைப்பு, கடின உழைப்புடன் வேலை செய்யாவிட்டால் இந்தச் சாதனையை மாவட்டம் அடைந்திருக்க முடியாது. மக்களின் ஒத்துழைப்பும் அதிக அளவில் கிடைத்து வருகிறது.

'சமூகக் காடுகள் திட்டத்தைப் பொறுத்த வரையில் வனத்துறை செயல்படுத்துவதைப்போல் ஊரக வளர்ச்சியில் இத்திட்டத்தைவெற்றிகரமாகச்செயல்படுத்துவது கடினம் என்ற எண்ணம் பரவலாக இருந்து வந்தது. இந்த எண்ணம் சரியல்ல என்பதைக் காட்ட, சமூகக் காடுகள் திட்டத்தில் தனிக் கவனம் செலுத்தி, சமூகக் காடுகள் விரிவாக்க அலுவலர்கள் ஒவ்வொருவருக்கும் தனிப் பயிற்சி அளித்து, ஆரம்ப நடவடிக்கைகளை உரிய காலத்தில் எடுத்து, திட்டம் வெற்றி பெறுவதில் தனிக் கவனம் செலுத்தப்பட்டது.

'1988-89-ஆம் ஆண்டிற்கென, தொகுப்பு இல்லங்கள் கட்டும் இலக்கினை 6 மாதங்களுக்கு முன்பே முடிக்க வேண்டும் என்று அறிவுரை கூறப்பட்டுள்ளது. அதற்கேற்பப் பணிகள் துரிதவேகத்தில் நடைபெற்று வருகின்றன,'' என்று மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்தார்.

வட ஆர்க்காடு மாவட்டத்தில் ஊரக வளர்ச்சிக்கான திட்டங்களைச் செயல்படுத்துவதில், பல்வேறு புதிய யுத்திகளையும் அணுகு முறைகளையும் கையாள்வதால் திட்டங்களின் வெற்றி, சமுதாய முன்னேற்றம் என்ற வகையில் பிரதிபலிக்கிறது.

— வி. இராவணன்


# நாங்குநேரி ஊராட்சி ஒன்றியம்

## தச்சு கொல்லுப்பட்டறை

### தளபதிசமுத்திரம்

எங்களிடம் வீட்டு உபயோகத்திற்கும், அலுவலக உபயோகத்திற்கும் தேவையான மேஜை, நாற்காலி, கதவு, ஜன்னல், பெஞ்சு மற்றும் எல்லாவிதமான சாமான்களும் கைதேர்ந்த தொழில் வல்லுனர்களால் நல்ல முறையில், தரமான மரத்தில் தயார் செய்து குறைந்த விலையில் உடனுக்குடன் சப்ளை செய்து வருகிறோம்.

உங்கள் தேவைக்கு எங்களிடம் அணுகுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

எம் ஏ. அய்யூப்,
ஆணையாளர்,
ஊராட்சி ஒன்றியம்,
நாங்குநேரி.

திரு எம். ஜி. ராமசுப்பு,
சேர்மன்,
பஞ்சாயத்து யூனியன்,
நாங்குநேரி.

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்

# ஓதுவாமூர்த்திகளுக்கு ஓய்வூதியத்திட்டம்



தேவார திருவாசகப்பாடல்களை தமிழகத் திருக்கோயில்களில் பாடி வருபவர்கள் ஓதுவா மூர்த்திகள் ஆவர். ஓதுவா மூர்த்திகள் அரசின் அறநிலையத்துறையின் ஊழியர்களானபடியால் அவர்களும் உரிய வயதில் ஓய்வு பெறுதல் அவசியமாகிறது. அவ்வாறு ஓய்வு பெறுபவர்களுக்கு ஓய்வு ஊதியம் வழங்கும் தமிழக அரசின் திட்டம் சென்னை மயிலாப்பூர் அருள்மிகு கபாலீச்சுவரர் கற்பகாம்பாள் கல்யாண மண்டபத்தில் 29.6.'88 அன்று துவக்கப்பட்டது.

இந்து சமய அறநிலையத்துறை சார்பில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், திருக்களர் திருமுறை கலாநிதி திரு டி.சுப்பையா தேசிகர் வாழ்த்துரை வழங்கினார்.

தமிழக அரசின் வணிகவரி மற்றும் அறநிலையத்துறை ஆணையர் மற்றும் செயலர் திரு கு.ஆளுடைய பிள்ளை அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். அப்போது அவர் கூறியதாவது:

''தமிழக வரலாற்றில் அறநிலையத்துறைக்கு இன்று புனிதநாளாகும். தமிழகத் தொல் பொருள்கள், கலாச்சாரம் ஆகியவை காப்பாற்றப்படவேண்டும் என்று பாடுபட்டு வருகிறார் நமது ஆளுநர்.

''ஓதுவா மூர்த்திகளுக்கு ஓய்வூதியம் வழங்க, பணிகளை மேற்கொண்ட திரு மீ.பூ சோமசுந்தரம் அவர்கட்கு நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்; உயர்ந்த கருத்துக்களை உடையவர்கள் ஓதுவாமூர்த்திகள் என்றால் மிகையாகாது''.

நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்த தமிழக ஆளுநரின் ஆலோசகர் திரு ஆ.பத்மநாபன் அவர்கள் பேசுகையில் கூறியதாவது:

''ஆயிரம் வருடங்களுக்கு முன் ராஜராஜன் ஆண்டவன் சந்நிதியில் பாடுவதற்காக ஓதுவார்களை நியமித்து ஓதுவாமூர்த்திகள் என்று அவர்களை அழைத்து வந்தான். பாடல்களை ராகத்துடன் பாடுபவர்கள் ஓதுவார்கள்.

''தமிழகத்தின் கலை, மொழி, கலாச்சாரத்தைக் காக்க மேன்மேலும் ஆக்கமும், ஊக்கமும் கொடுப்பதிலும், தஞ்சை சரஸ்வதி மஹால் சிறந்த முறையில் பாதுகாக்கப்படவேண்டும் என்பதிலும் ஆளுநர் சிறந்த முறையில் ஆர்வம் காட்டி வருகிறார்.

''கம்பராமாயணம், சித்த மருத்துவப் பாடல்கள் ஆகிய கையெழுத்துப் பிரதிகள் ஆகியவற்றை ஆங்கிலத்திலும், பிறமொழிகளிலும் மொழிபெயர்க்க ஆளுநர் அவர்கள் விருப்பம் தெரிவித்துள்ளார்கள். அதை விரைவில் முடிக்கவேண்டும் என்றும் கூறியுள்ளார்கள். அதைத் தொடர்ந்து இன்று செயலாளர்களை அழைத்துப்பேசி விவாதித்துள்ளேன். இந்தத் திட்டங்கள் ஆளுநர் அவர்களை வைத்து விரைவில் தொடங்கப்படும்.

''ஓதுவாமூர்த்திகளுக்கு ஆண்டுக்கு ஒருமுறையோ அல்லது இரண்டாண்டுக்கு ஒருமுறையோ ஊதிய உயர்வு அளிக்கலாமா என்று அரசு ஆலோசித்து வருகிறது. அவர்களது நல்வாழ்வுத் திட்டங்கள் குறித்தும் அரசு பரிசீலித்து வருகிறது.'

மேதகு ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் அவர்கள் 63 ஓதுவாமூர்த்திகளுக்கு ஓய்வு ஊதியம் வழங்கும் திட்டத்தைத் தொடங்கி வைத்தார். அப்போது அவர் தமது உரையில் தெரிவித்ததாவது:

''ஓதுவார்கள் தொன்மைமிக்க பாரம்பரியம் மிக்கவர்கள். அவர்கட்கு ஓய்வூதியம் வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

''தமிழகத்தைச் சார்ந்த நடராஜர் சிலை திருடப்பட்டு லண்டனில். சிறுதொகைக்கு விற்கப்பட்டுள்ளது. அதை அறிந்தபோது மிகவும் வருத்தப்பட்டேன். அந்த நடராஜர் சிலை கிடைத்துவிடும் நிலையில் உள்ளது. அதை நினைக்கும் போது மகிழ்ச்சியடைகின்றேன். அந்தச் சிலை விரைவில் சென்னைக்கு வர உள்ளது. அதை மீனம்பாக்கம் விமான நிலையம் சென்று வரவேற்பேன்.

''பண்டைய வரலாற்றுச் சான்றுகளைச் சேகரித்துப் பாதுகாப்பதில் தமிழகத் தொல்பொருள்துறை சாதனை படைத்துள்ளது.

''தமிழகத்தில், மதம், அமைப்பு ரீதியாக வளர்ச்சியடைந்துள்ளது என்பதைச் சரித்திரச்சான்றுகள் உணர்த்துகின்றன. குருகுலம், மடங்கள், கோயில்கள் ஆகியன மதத்தைப் பரப்புவதற்கு உதவியுள்ளன''

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் திரு டி. ஆர். கல்யாணசுந்தரம் நன்றி கூறினார்.

—நமது செய்தியாளர்

**கலப்படத்துக்கு எதிராக ஒரு யுத்தம**

# சுவையும் சத்தும் கொண்ட தூய உணவுப் பொருள்கள்

நாம் உண்ணும் உணவு, பார்ப்பதற்குப் பகட்டாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம்; நாவிற்குச் சுவையாக இருக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறோம்; வெந்திருந்தால் போதும் - விரும்பிச் சாப்பிடுகிறோம். உணவிற்குப் பகட்டும், ருசியும், வெந்திருப்பதும் மட்டுமே போதுமா? என்றால் அது தான் இல்லை.

நம்முடைய உணவு வகைகள் உயர்ந்தவைகளாக இருந்தால் மட்டுமே போதாது. எளிய உணவாக இருந்தாலும் கலப்படமில்லாமல் இருக்க வேண்டும். அதுதான் மிகவும் முக்கியம். கலப்பட உணவு நமது உடலுறுப்புகளுக்கு மட்டுமல்ல; உயிருக்கும் ஆபத்தை விளைவிக்கக் கூடும். இவ்விஷயத்தில் நம்மில் பலரும் கவனம் செலுத்துவதே இல்லை; அதனால் எவ்வளவு தொல்லை.

உணவுப் பொருள்களில் கலப்படம் செய்வோர் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள் என்கிறது சட்டம். இருந்தும்கூட சிலர் இலாப நோக்கம் ஒன்றே குறிக்கோளாக, கலப்படத்தொழிலில் களிப்போடு ஈடுபடுகிறார்கள். அதனால், மற்றவர்கள் படுகிற துன்பங்களைப் பற்றியெல்லாம் அவர்களுக்குக் கவலையில்லை.

எந்தெந்தப் பொருளில் என்னென்னவெல்லாம் கலக்கப்படுகிறது? அத்தகைய பொருட்களை வாங்கி உட்கொள்வதால் எவ்வளவு பெரிய பாதிப்புகளெல்லாம் நமக்கு ஏற்படுகின்றன? இந்த் வினாக்களுக்கான விளக்கங்களை அறிய நாம் சில உண்மைகளைத் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

**கலப்படங்கள்**

கடுகு எண்ணெயில், அர்கிமோன் என்றொரு எண்ணெயைக் கலப்படம் செய்கிறார்கள்; இதனால் கண் பார்வையே போய் விடுகிறது; கட்டி உண்டாகிறது; இதயநோய் ஏற்படுகிறது; பெரிபெரி என்ற நீர் கட்டும் வியாதிகளும், இந்தக் கலப்பட எண்ணெயில் தயாராகும் உணவுப் பொருட்களை உண்ணுவோருக்கு உண்டாகின்றன.

தேங்காய் எண்ணெய், கடலை எண்ணெய் போன்றவற்றில் தாது எண்ணெய்கள் கலக்கப்படுகின்றன; இதில் செய்யப்படும் பண்டங்களை உண்ணுவோர் ஈரல் பாதிக்கப்படுகிறது; புற்றுநோய்க்கான அடிப்படைக் கோளாறுகள் உண்டாகின்றன.

துவரம் பருப்பிலும், கடலைப் பருப்பிலும் மற்ற பயறுவகை மாவுகளிலும் கேசரி பருப்பு கலக்கப்படுகிறது. இந்தக் கலப்படத்தோடு உணவு உட்கொள்ளுவதால் பக்கவாதநோய் ஏற்படுகிறது.

மஞ்சளில் சிலர் மஞ்சள்நிற லெட் குரோமைடு கலக்கிறார்கள்; இதன் காரணமாக இரத்தச் சோகை, வலிப்பு, கண்பார்வை இழப்பு ஆகிய ஆபத்துக்கள் விளைகின்றன.



மிளகாய்ப்பொடி, மசாலாப் பொடி ஆகியவற்றில் மரத்தூளும்-தேயிலையில் இரும்புப் பொடி, மரத்தூள் ஆகியவைகளும் கலக்கிறார்கள்; அத்தகைய கலப்படங்களை உட்கொள்ளுவதால் வயிற்றுக்கோளாறுகளும், குடல் பாதிப்பும் ஏற்படுகின்றன.

பழிபாவங்களுக்கு அஞ்சாத, லாபநோக்குடைய பாவிகளால் இப்படியெல்லாம் கலப்படம் செய்யப்படுகிற பொருட்களைதொட்டுப் பார்த்தோ சுவைத்துப் பார்த்தோ லேசில் இனம் காண முடிவதில்லை. விலை மலிவாக இருக்கிறது என்பதாலேயே பாமர மக்களால் அத்தகைய கலப்படப் பொருட்கள் விரைவில் விற்றுத் தீர்ந்து வியாதிகளைப் பரப்பி விடுகின்றன.



**தரமான பொருட்கள்**

இத்தகைய அபாயங்களிலிருந்து மக்களைக் காக்க உருவானதுதான் 'அக்மார்க்' அமைப்பு (Agricultural Marketing ) விளைபொருட்கள் கால்நடைகள் மூலம் நாம் பெறும் பொருட்களின் தரம் மற்றும் விற்பனை (சட்டம்-1937-ன் படி) இதன் மூலம் நிர்ணயிக்கப்படுகிறது. 'அக்மார்க்' முத்திரை தாங்கிய பொருட்கள் தரம் மிக்கவையாகும்.

உணவுப் பொருட்களின் தரத்தைச் சோதிப்பதில், இந்திய அரசின் விற்பனை மற்றும் சோதனை இயக்குநரகத்தின் மூலம் 21 சோதனைக் கூடங்களும், 50 துணை அலுவலகங்களும் இத்தகைய பணிகளுக்கென்றெ 'அக்மார்க்' அமைப்பின்கீழ் நாடெங்கும் இயங்கி வருகின்றன. குறிப்பிட்ட பொருட்களுக்கு அக்மார்க் முத்திரைகளை வழங்கும் உரிமைச் சான்றிதழ் பெற்றவர்கள் இந்தியாவெங்கும் 15 ஆயிரம் பேர்களுக்கு மேல் இருக்கிறார்கள்.

**கருத்தரங்கும் கண்காட்சியும்**

தரம்மிக்க உணவுப் பொருட்களைக் கண்டறிவது எப்படி? தயாரிப்பது எப்படி ? என்பதைப் பற்றிய கருத்தரங்கம் ஒன்று 16-6-88அன்று சென்னையில் ரோட்டரி சங்கத்தாரால் (Rotary club of Madras) நடத்தப்பட்டது. விற்பனையாளர்களும், நுகர்வோர் பலரும் அக்கருத்தரங்கில் பங்கேற்றனர்.

மேதகு தமிழக ஆளுநரின் ஆலோசகர் டாக்டர் எஸ். எஸ். சித்து கருத்தரங்கைத் துவக்கி வைத்தார். 'நுகர்வோர் பாதுகாப்பு பற்றிய 'The crusade' என்ற திரைப்படம், விரைவில் தமிழகத் திரையரங்குகளில் திரையிடப்படும்' என்று தமது உரையில் அவர் குறிப்பிட்டார். அவ்விழாவில் திரு வி. இராமகிருஷ்ணன் வரவேற்புரையாற்றினார். திரு. எச். ஆர். ஈஸ்வரா நன்றியுரையோடு கருத்தரங்கம் முடிவுற்றது.

அதையொட்டி, சென்னையில் 20-6-88 வரை 'உணவுப்பொருள் கண்காட்சி-88' (Food Fair-88) வள்ளுவர் கோட்டத்தில் நடத்தப்பட்டது. நான்கு நாட்கள் நடைபெற்ற இந்தக் கண்காட்சியில் — தமிழ்நாடு காதி கிராமோத்யோக் பவன், ஆவின், தமிழ்நாடு விவசாய

## கலப்படம் செய்தால் கடுமையான தண்டனை!

உணவுக் கலப்படத்தால் பல உயிர்கள் பலியாகின்றன. கலப்படம் செய்வோர் தப்பும் வகையில் நடைமுறை விதிகள் உள்ளன. கலப்படத் தடுப்புச் சட்டம் மிகவும் கடுமையாக்கப்படவேண்டும். கலப்படம் செய்வோருக்கு அளிக்கப்படும் தண்டனை மிகக் கடுமையாக இருக்க வேண்டும்; தண்டனைக்குக் காலதாமதம் கூடாது. கலப்படம் செய்வோருக்கு மரண தண்டனையே கூட விதிக்கலாம்.

மாநில அளவிலான நுகர்வோர் பாதுகாப்புக் கழகம் முன்பே தமிழகத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. மாநில நுகர்வோர் குறை நீக்கும் கமிஷனும், மாவட்ட நுகர்வோர் குறை நீக்கும் கமிஷனும், மாவட்ட நுகர்வோர் குறைநீக்கும் அமைப்புகளும் விரைவில் அமைக்கப்படவிருக்கின்றன. நுகர்வோர் நலனைப் பாதுகாக்கும் வகையிலும், படிப்போரிடையே விழிப்புணர்வு உண்டாக்கும் விதத்திலும் ஐந்தாம் வகுப்புப் பாடத் திட்டத்தில் ஒரு பாடம் சேர்க்கப்பட்டுள்ளது. ஒன்பது, பத்தாம் வகுப்புகளிலும் அதுபோன்ற பாடங்களைச் சேர்ப்பது பற்றிப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. உணவுக் கலப்படங்களைக் கண்டுபிடிக்கும் வகை பற்றி கல்லூரி ரசாயனப் பாடத்தில் சேர்க்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. மாநிலத்தில் உள்ள 13 ஆயிரம் முதியோர் கல்வி மையங்களிலும் நுகர்வோர் பாதுகாப்புப் பாடங்கள் சேர்க்கப்படும்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப நிறுவனம் நடத்தும் கடைகள், கூட்டுறவுக் கடைகள் ஆகியவற்றில் கலப்படப் பரிசோதனைக் கருவிகள் 400 வழங்கப்பட்டுள்ளன. அதிகாரிகளுக்கும் இக்கருவிகள் அளிக்கப்பட்டுள்ளன.

வர்த்தகர்களுக்கு நுகர்வோரிடம் அக்கறை இருக்கவேண்டும் என்பது மிகவும் அவசியம்.

— மேதகு ஆளுநரின் ஆலோசகர்
டாக்டர் எஸ்.எஸ். சித்து

[16.6.88ல் நடைபெற்ற உணவு சுகாதாரக் கருத்தரங்கில் பேசியது.]



விளைபொருள் தொழில்நுட்ப வாரியம், தமிழ்நாடு நுகர்பொருள் வாரியம் போன்ற தமிழக அரசுக்கு உட்பட்ட அமைப்புகளும், அக்மார்க், உணவு ஊட்டச்சத்துத்துறை, இந்தியன் ஆயில் கார்பொரேஷன் போன்ற மத்திய அரசுக்கு உட்பட்ட அமைப்புகளும், தனியார் அமைப்புகளுமாக 55 அமைப்புகளின் அரங்கங்கள் அமைக்கப்பட்டிருந்தன.



தேஸ் அடுப்புகளைப் பயன்படுத்தும் விதம், மிக விரைவில் சுவை மிக்க உணவுப் பொருட்களைத் தயாரிக்கும் விதம். இன்சுவைப் பானங்களைத் தயாரிக்கும் விதம் ஆகியவை பற்றி ஒவ்வொரு நாளும் ஒவ்வோர் அமைப்புகள் இக் கண்காட்சியில் பார்வையாளர்க்கு விளக்கின; பாவையர்க்குச் செய்து காட்டின. சமையலுக்கு உதவும் நவீன பொருட்கள் பல அங்கே விற்கப் பட்டன. நான்கு நாட்களும் ஏராளமான பெண்கள் வருகை தந்தனர்.

''எங்கஸ்டால்ல ஊறுகாய் மசாலா வகைகள், அப்பளம், தேன், மிளகாய்ப்பொடி, ரசப்பொடி, சாம்பார் பொடியெல்லாம் விற்பனை செய்கிறோம். சாதாரண, கிராமப்புறப் பெண்களுக்கு வேலைவாய்ப்பு தர்றதுக்காக அளிக்கப்பட்ட வாய்ப்பில் இதெல்லாம் தயாரிக்கப்பட்டவை'' என்றார், காதி கிராமோத்யோக் பவன் அரங்கிலிருந்த அதன் நிர்வாகி திரு சி.டி.வி. ராகவுலு.

''சுவையாக மட்டுமல்லாமல் விரைவாகவும் பக்குவமாகவும் உணவு தயாரிக்கும் விதம்பற்றி நேரில் நாங்கள் செய்து காட்டும் சமையல் நேர்த்தி, இந்தக் கண்காட்சிக்கு வரும் ஏராளமான பெண்மணிகளைக் கவர்கிறது'' என்றார், புளூஸ்டார் அரங்கில் நளபாக நவீன உணவு வகைகளைத் தயாரித்துக் காட்டிய சமையல் கலை வல்லுநரான திருமதி சந்த்ரிபட்.

கண்காட்சிக்கு வந்த பல குடும்பங்களின் பிள்ளைகள் கைகளிலெல்லாம் ஏதாவது தின் பண்டங்கள் காணப்பட்டன; எல்லாம் 'உணவுப்பொருள் கண்காட்சி-88' லேயே சூடாகவும், சுத்தமாகவும், சுவையாகவும் தயாரிக்கப்பட்டவைகளாகும்.

—பி. எல். ராஜேந்திரன்


# மேலநீலிதநல்லூர் ஊராட்சி ஒன்றியம்

## தச்சு கொல்லுவேலை உற்பத்தி நிலையம்

வன்னிக்கோனேந்தல்

வீட்டிற்கும், அலுவலகக் கட்டடங்களுக்கும் தேவையான கதவு, ஜன்னல், கிராதி, மேஜை, நாற்காலி மற்றும் ஆஸ்பெஸ்டாஸ் சீட்டுகளுக்கும் இதர மரம், இரும்பு வேலைகளுக்கும் எங்களை அணுகுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

குறைந்த விலையில் குறித்த காலத்தில் பொருட்கள் சப்ளை செய்யப்படும்.

வே. சீனிவாசன்,
ஆணையாளர்,
ஊராட்சி ஒன்றியம், மேலநீலிதநல்லூர்,
திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்.

எஸ். சிங்கபுலி பாண்டியன்,
தலைவர், ஊராட்சி ஒன்றியம்,
மேலநீலிதநல்லூர்,
திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்



ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.


கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி
100 சதவிகிதம் அசல் பட்டு
மற்றும் தங்க சரிகைகளைக்
கொண்டு நெசவு செய்யப்பட்ட
புதுமையான
பட்டுச்சேலைகளை
கோ-ஆப்டெக்ஸ் அளிக்கிறது.
இந்தியாவின் மிகப்பெரிய
கைத்தறி கூட்டுறவு விற்பனை
நிறுவனம் கோ-ஆப்டெக்ஸ்.
அதற்குச் சொந்தமான
560 விற்பனைக்கூடங்கள்
மூலமாக கோடிக்கணக்கான
வாடிக்கையாளர்களின்
தேவைகளை பூர்த்தி செய்கிறது
DIPR: Efficient

பதிவு எண். M. 8676
Licence No. TN/PMG(C)/PP-23






ஊரக வளர்ச்சிப் பணிகள்